ஆரம்பக்கல்வி

ELEMENTARY EDUCATIO

ஜனவரி—1966

மறைந்த

பிரதமர் லால் பகதூர் சாஸ்திரி

ஆரம்பக்கல்வி நிலையம்
94-95, புது தெரு
மண்ணடி, சென்னை-1

அறிவிப்பு!

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!

உமாபதி

தமிழ்ப் பாட உரைநூல்

ஏழாம் வகுப்பு – விலை 1–25 பை.

ஐந்தாம் வகுப்பு – ,, 60 ,,

நான்காம் வகுப்பு – ,, 50 ,,

மூன்றும் வகுப்பு – ,, 40 ,,

ஆசிரியர் :

த. சே. உமாபதி, M. A., L. T., (Dip. in-Geog.)

ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர்,

சி. அப்துல் ஹகீம் இந்து-முஸ்லிம் உயர்நிலைப் பள்ளி,

சென்னை–1.

ASSOCIATION ENGLISH PRIMER

III STANDARD

★

By

Mrs. LUCY ARULRAJ

★

Price: 70 nP.

புதுமுறை சங்க வாய்பாடு — 100 — ரூ. 9

ஆசிரியர்களுக்கு 20% கழிவு உண்டு.

வியாபாரிகட்கு பிரத்தியேக கழிவு உண்டு.

வேண்டிய பிரதிகளுக்கு உடனே ஆர்டர் அனுப்பவும்.

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்

("ஆரம்பக்கல்வி" நிலையம்)

94-95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை-1.

ஆரம்பக்கல்வி

ஆசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை நிர்வாகிகள்

முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்.

ஆசிரியர் : பி. வீரராகவன்

ஆண்டு சந்தா ரூ 3] [தனி இதழ் 25 ந. பை.

மலர் 30	ஜனவரி 1966	இதழ் 1

155204
T15m211,N40
31K6

வெற்றிப் புன்னகையில் வீரமரணம்

இரட்டை எண்கள்—எண்ணிப் பார்க்கவே முடியாத இரண்டு பயங்கரமான ஈட்டிகள்—ஆம்; ஒன்று, 1964; மற்றொன்று 1966 ஆம் ஆண்டு! முன்னதின் வாயிலாக முடிசூடா மன்னர் பண்டித ஜவஹர்லால் நேருவை இழந்தோம்; பின்னதின் வாயிலாக, அவர் விட்டுப்போன பணியிலே ஈடுபாடு கொண்டு, வெற்றிப்பாதை சமைத்த பிரதமர் லால்பகதூர் சாஸ்திரியைப் பிரிந்து விட்டோம்.

இரண்டே இரண்டு ஆண்டுகளுக்குள்ளாகவே இருபெரு மலைகளை-இனி, எதனாலும் ஈடுபடுத்த முடியாத பாதுகாப்பு அரண்களை—சமாதான வெண்புறாக்களை நாம் இழந்து விட்டோம்.

எதிர்பார்த்தோம், அவரை ; ஆனால் எப்படியோ ஏமாற்றப் பட்டுவிட்டோம், கடவுளால் !

விடை பெற்றுச் சென்ற மகனை வரவேற்பதற்கென்றிருந்த தாயை—பிரிந்து சென்ற கணவரை மீண்டும் பார்க்கும் பேராவலோடு வாயிலில் நின்றிருந்த மனைவியை—'அப்பா வருவார் ; அகமகிழ்ந்து பேசலாம்!' என்றிருந்த செல்வங்களை—தூது சென்ற தலைவர் வருவார்; 'வருக, தலைவனே!' என்று துந்துபி முழங்குவோமெனக் காத்திருந்த தொண்டர்களை—'யானை வருவதற்கு முன்பே மணி ஓசை வந்துவிட்டது!' என்ற எக்காளத்தோடு அவரை ஆவலோடு எதிர்பார்த்த நம்மை—நம் தேசத்தை மறந்து, யார் கொடுத்த குரலுக்கோ—எவர் விடுத்த அழைப்புக்கோ இணங்கி நம்மை விட்டுப் பிரிந்துவிட்டார்.

பகையைக் கக்கிக் கொண்டிருந்த பாகிஸ்தானுடன் நாம் நட்புறவு பெறுவதற்காக, இரஷ்ய பிரதமர் கோசிஜின் அழைப்பின் பேரில் சென்று, தாஷ்கெண்ட் மாளிகையில் தங்கியிருந்து, நல்வழி கண்ட உத்தமர் லால்பகதூர் சாஸ்திரியை—நமது பிரதமரை பூமாலையால் அலங்கரித்துப் பார்க்கவேண்டியதற்கு மாறாக அவரது சடலத்துக்கு அந்த மாலைகளை அணிவித்து அழவேண்டிய கோர முடிவு நமக்கு வந்துவிட்டது.

இதற்குத்தான் பல்லாண்டு காலமாகப் பதவியில் இருந்து தீர்க்கக் கூடிய பயங்கரப் பிரச்னைகளையெல்லாம் பத்தொன்பதே பத்தொன்பது மாதங்களில் தீர்த்துவைத்துவிட்டாரா? எப்படியோ, இந்தியாவுக்குப் பூரணமான ஓர் ஒளியை உழைப்பாலும், அதனிலும் மேலான உயிராலும் உண்டாக்கிவிட்டு மறைந்து விட்டார்.

'தாஷ்கெண்ட் மாளிகை'யில் இந்தியாவும் பாகிஸ்தானும் வெளியிட்ட சமாதான நல்லுறவு அறிக்கையின் ஆயுள் பலம் நிலைத்திருப்பதற்காக வேண்டி தம்மையே தியாகம் செய்த தவமணியை தேசம் இழந்து தவிக்கிறது. ஆரம்ப ஆசிரியரின் மகனாய்ப் பிறந்து, ஏழ்மையில் தவழ்ந்து, எளிய தோற்றத்தோடு வாழ்ந்து, எவருமே

சாதிக்க முடியாத ஒரு பயங்கர பிரச்னையில் முடிவு கண்டு நிரந்தரமான ஓர் முடிவை நாடிச் சென்றுவிட்ட சத்தியமூர்த்தியை வரலாறும் சரித்திரமும் கரங்கூப்பி அழைத்து அரியாசனத்தில் அமர்த்திக்கொண்டு விட்டன. ஒற்றுமைக்கு வித்திட்ட பின்னர் உயிரை உதறித் தள்ளிவிட்டுச் சென்ற உத்தமர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றிச் சென்றுவிட்டார். அவர் ஈந்த ஆன்மா அவரால் உண்டாக்கப்பட்ட இருநாடுகளின் நல்லுறவுக்கு அடிக்கல்லாக விளங்கும்.

பிரதமர் லால்பகதூர் சாஸ்திரியின் எதிர்பாராத மறைவால் இந்தியத் துணைக்கண்ட பொதுப்பணியில் விளைந்துள்ள இடைவெளி, மிகப் பயங்கரமான ஒன்றுகுமென்றால் அது மிகையாகாது. அத்துணையளவுக்கு அவரது பொதுப்பணி இந்தியாவோடு இரண்டறக் கலந்திருந்தது. ஆனால் இன்றைய தினம் அவர் செய்த சேவைக்கெல்லாம் சிகரமாயமைந்த ‘சமாதான நல்லுறவு’ சாசனம் நம்மிடையே கலங்கரை விளக்காகி விட்டது...

மறைந்த பிரதமர் லால்பகதூர் சாஸ்திரியை ஒரு கணம் தியானித்துப் பார்த்தால் அவரைக் காட்டிலும் சிறந்த ஒரு புண்ணியமூர்த்தியைக் காண்பது அரிதாகும். ஆம்; அரசியல் பொது வாழ்வில் அவருக்குப் பகைவர்களே இருந்ததில்லை. அரசியல் அரிச்சுவட்டில் மிகமிகச் சாதாரணமாக ஏற்படக்கூடிய குற்றங்களுக்கெல்லாம் கடுகளவும் இடமளிக்காமல் வாழ்ந்தவர் பட்டியலில் அவரது திருநாமமும் ஐக்யமாகிவிட்டது. எதையுமே எண்ணித் துணிந்து செயலாற்றும் இதயம் அவரிடம் இயற்கையாகவே இணைந்திருந்தது.

அவர் பதவிப் பீடத்தில் அமர்ந்ததுமே அவரை எதிர்நோக்கி வந்த பயங்கரப் பிரச்னைகள் கொஞ்சமல்ல. அவற்றுக்கெல்லாம் இறுதிக்கோடாக, பாகிஸ்தான் முற்றுகையிட்டபோது நம் தேச மக்களுக்கும் போர்க்கள வீரர்களுக்கும் வீரத்தையும் விவேகத்தையும் தேனினும் இனிய சமாதான முறையில் ஊட்டி, சரித்திரப் பிரசித்திப் பெற்றார் பிரதமர் லால்பகதூர்.

போர்க் களத்திலே வெற்றிப் புன்னகை கண்ட போதிலும் அவரது அந்தரங்க ஆன்மா, சமாதான நல்லுறவையே நாடித் துதித்தது. இந்தியா பூராவிலும் போர்க்களத் துடிப்பு பரவியிருந்த தருணத்தில் சென்னைக்கு வருகை தந்த அவர், கட்சிக் கூட்டத்தில் தம்முடைய ஆன்மா விரும்பும் சமாதானத்தை வெள்ளிடை மலையென வெளிப்படுத்தினர். அதன்படியே இரஷியப் பிரதமரின் தன்னலமற்ற உதவியோடும் பாகிஸ்தான் அதிபரின் நல்லிணக்கத்தோடும் இந்தியா பாகிஸ்தான் நிரந்தர சமாதானத்துக்கு வழியாயமைந்த அறிக்கைக்கு தம்முடைய கையெழுத்தைமட்டுமல்ல, அதனினும் மேலான ஆன்மாவையும் அர்ப்பணித்து உலகத்தின் ஒளிவிளக்காகி விட்டார். எனவே,

அவர் எந்தச் சமாதானத்துக்காக உயிரைத் தியாகம் செய்தாரோ, அந்தச் சமாதானத்தை நாமும் நாடி, நல்வாழ்வும் நல்லொளியும் பெற்று அவரது ஆன்மா சாந்தியடையச் செய்வோமாக.

"மிக உன்னதமான நேர்மைக் குணம் படைத்தவர்; மனச் சாட்சியின்படி நடப்பவர்; கடினமாக உழைப்பவர்!" என்றெல்லாம் வருணித்த நேருவின் வார்த்தைகளுக்கு வடிவமைத்து, வெற்றிப் புன்னகையில் வீரமரணம் கண்ட சத்தியசீலரின் வழியைப் பின்பற்றிச் செயல்புரிவோமாக.

வாழ்த்தும், வணக்கமும்

பொங்கற் புதுநாள்; எங்கும் மங்களம் பொங்கும் திருநாள்! வாழ்வு சிறக்கவும், வளம் பெருகவும் பிறந்த இப் பொங்கல் நன்னாளில் எங்கள் மனமுவந்த வாழ்த்துக்கள்.

'ஆரம்பக் கல்வி'க்கு அன்புக் காணிக்கையாக ஆயிரக் கணக்கில் வாழ்த்துக்கள் வழங்கிய ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் எமது உளம் கனிந்த வாழ்த்தும் வணக்கமும்.

—ஆசிரியர்

கல்வித் துறைச் செய்திகள்

10, 11-வது வகுப்பு மாணவர்களுக்கு 1967-லிருந்து விருப்பப் பாடம்

1967-ம் வருஷத்திலிருந்து 10-வது 11-வது வகுப்பு மாணவர்கள் பொது விஞ்ஞானத்துடன் கூட ஏதேனும் ஒரு சிறப்பு விஞ்ஞான பாடமோ அல்லது கலை இயல் பாடம் ஒன்றோ (இஷ்டப் பாடமாக) எடுத்துக் கொண்டாக வேண்டும். பௌதிகம், ரசாயனம், இயற்கை விஞ்ஞானம் (தாவர இயலும், பிராணி இயலும்) ஆகிய மூன்றில் ஒன்றை சிறப்பு விஞ்ஞானப் பாடமாகத் தேர்ந்தெடுக்க அனுமதிக்கப் படுவர்.

ராஜ்ய சர்க்கார் அதிகாரி ஒருவர் இத்தகவலை தெரிவித்தார். இந்த ஏற்பாடு அமலுக்கு வர இன்னும் 18 மாத கால மிருப்பதால், பரிசோதனை கூடம் போன்ற வசதிகளுக்கு வகை செய்து கொள்ள உயர்நிலைப்பள்ளிகளுக்கும் போதிய அவகாசம் இருக்கும் என்றார்.

ஆசிரியர்கள் பிராவிடெண்ட் நிதிக்குப் புது ஏற்பாடு

பள்ளி நிர்வாகம் செலுத்தும் பங்கையும் சர்க்கார் ஏற்கிறது

ஆசிரியர்கள் பிராவிடெண்ட் நிதிக்கு தங்கள் விகிதாசாரப் பங்கு தரவேண்டிய பொறுப்பிலிருந்து பள்ளிக்கூடங்களின் நிர்வாகிகளை விடுவிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

சென்ற ஆண்டிலிருந்து மாணவர்களிடம் சம்பளம் வசூலிப்பதை நிறுத்திவிட்டதால், நிர்வாகத்தின் சுமையைக் குறைப்பதற்காக அரசாங்கம் இவ்வாறு முடிவு செய்துள்ளது.

1964-65 உயர்நிலைப் பள்ளிகளின் நிர்வாகம் செலுத்தவேண்டிய பிராவிடெண்ட் நிதி சந்தாவை கொடுக்க வேண்டுவதில்லை. 1964-65ல் மான்ய உதவி ஆரம்பப் பள்ளிகளின் நிர்வாகம் இதைச் செலுத்த வேண்டுவதில்லை.

பிராவிடெண்ட் நிதிக்கு நிர்வாகங்கள் இதுவரை அவர்களுடைய அடிப்படைச் சம்பளத்தில் 3 சத விகிதம் செலுத்தி வந்தனர். ஆசிரியர்களின் சந்தா 6 சத விகிதம். அவசரநிலை பிரகடனம் முதல் ஆசிரியர்கள் சந்தா 11 சதவிகிதமாகியது. ஆசிரியர்கள் ஓய்வுபெறும் காலத்தில் அவர்களுடைய சம்பளத்தில்

3 சத விகிதம் வீதம் கணக்கிட்டு மொத்த தொகையாக அரசாங்கம் கொடுத்து வந்தது. இனி மேல் பள்ளி நிர்வாகங்களின் பங்கையும் சேர்த்து தரும்.

இந்த ஏற்பாட்டினுல் ஒவ்வொரு பெரிய உயர்நிலைப் பள்ளிக்கும் ஆண்டு தோறும் ரூபாய் 3,000 முதல் ரூ. 4,000 வரை மிச்சப்படும்.

போரில் மாண்ட வீரர்களின் பிள்ளைகளுக்கு இலவச கல்லூரி, தொழில் நுட்பப் படிப்பு

சென்னை சர்க்கார் முடிவு

இந்தியா, பாகிஸ்தான் சண்டையின் போது, நாட்டைக் காக்க உயிர்த்தியாகம் செய்த ஜவான்களின் பிள்ளைகளுக்குத் தொழில் நுட்பக் கல்வி மற்றும் கல்லூரிப் படிப்பை இலவசமாக அளிக்க சென்னை சர்க்கார் முடிவு செய்திருக்கிறது.

இத்தகவலை முதன் மந்திரி திரு. பக்தவத்சலம் இங்கு பொதுக் கூட்டத்தில் அறிவித்தார்.

தங்கப் பத்திரங்களில் தங்கத்தை முதலீடு செய்யும்படியும் தேசிய தற்காப்பு நிதிக்கு நன்கொடை தரும்படியும் அவர் மக்களைக் கேட்டுக் கொண்டார்.

உணவு நிலைமை பற்றி முதன் மந்திரி பேசுகையில், மக்கள் அரிசி உட்கொள்வதைக் குறைத்துக்கொண்டு மற்றவகை உணவுகளை உட்கொள்ள வேண்டும் என்றுர்.

தங்கப் பத்திரங்களில் முதலீடு செய்வதற்காக, பல்வேறு ஸ்தாபனங்கள் மற்றும் நபர்களிடமிருந்து 3,424 கிராம் தங்கத்தை முதன் மந்திரி பெற்றுக்கொண்டார்.

3-ம் வகுப்புவரை ஏழைகளுக்கு இலவசப் புத்தகங்கள்

முதல் அமைச்சர் அறிவிப்பு

ஆரம்பப் பள்ளிகளில் மூன்று வகுப்புவரை ஏழை மாணவர்களுக்கு அரசாங்கம் இலவசமாக பாட புத்தகங்களை வழங்கும். இதற்கு ரூ. 5 கோடி செலவாகும். நான்காவது திட்டத்தில் ஒதுக்கப்பட விருக்கும் ரூ. 37 கோடி செலவுடன் இது கூடுதல் செலவாகும் என்று முதல் மந்திரி திரு. எம். பக்தவத்சலம் இன்று இங்கு கூறினார்.

ஸ்ரீ வில்லிபுத்தூரில் ராமநாதபுரம் ஜில்லா நூலக ஸ்தாபனத்தின் கீழ் 100-வது நூலகத்தைத் திறந்து வைத்து முதல் மந்திரி பேசினுர்.

பள்ளிகளின் கடமை குறித்துத் துணைத் தலைவர்

லட்சிய ஸ்தாபனமாவதற்காக ஒரு கல்வி ஸ்தாபனம் உற்சாகத்துடன் பாடுபடுவது நாட்டுக்குச் செய்யும் மிக முக்யமான சேவைகளில் ஒன்ருக இருக்கமுடியும். ஏனெனில் பிரதானமாக பள்ளிகளுடன் சம்பந்தப்பட்டதாக நாட்டின் எதிர்காலம் உள்ளது என்று உபராஷ்டிரபதி டாக்டர் ஜாகிர் ஹுசேன் குறிப்பிட்டார்.

தங்கசாலை தெருவில் கணேஷ் பாய் கலாடா ஜெயின் பெண்கள் உயர் நிலைப்பள்ளியின் புதிய கட்டிடத்தைத் திறந்து வைத்து உபராஷ்டிரபதி பேசினார். ஒரு மாணவனின் இயற்கைகுணத்தை நன்கு புரிந்து கொள்வது நல்ல ஆசிரியர்களின் கடமை என்றார். மாணவனின் புத்தியையும், தார்மீக பண்பையும், உடல் நலனையும் வளர்ச்சியுறச் செய்வது ஒரு நல்ல பள்ளியின் முயற்சியாக இருக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

நிதி உதவி மட்டுமின்றி உயரிய பண்பாட்டு ஒத்துழைப்பையும் பள்ளிக்கு அளிக்குமாறு பெற்றோர்களை உபராஷ்டிரபதி கேட்டுக் கொண்டார்.

உயர்நிலைப் பள்ளிப் பரீட்சைகளுக்கு குறைந்த பட்ச சீர்திருத்தத் திட்டம்

எல்லா இடங்களிலும் அமுலுக்குக் கொண்டுவருவதென முடிவு

பரீட்சை சீர்திருத்தத்துக்காக ஒரு குறைந்தபட்ச அத்தியாவசிய திட்டம் ஒன்றை எல்லா செகண்டரி கல்வி போர்டுகளும் ஒரே சமயத்தில் அமல் நடத்த வேண்டுமென்று பெங்களூரில் நடைபெற்ற அகில இந்திய செகண்டரி கல்வி போர்டுகளின் தலைவர்கள், காரியதரிசிகள் மாநாடு இன்று தீர்மானித்தது.

இந்தக் குறைந்தபட்ச சீர்திருத்த திட்டத்தை உடனடியாக அமலுக்குக் கொண்டு வருவது மாணவர்களின் சாதனையை பிரத்யட்சக் கண்ணோட்டத்தில் வழிவகுக்கும்; கல்வியின் தரம் உயர உதவும் என்றும் இந்த மாநாடு நம்பிக்கை தெரிவித்தது.

ஆரம்ப வகுப்புகளிலும், சர்வகலாசாலை வகுப்புகளிலும் பரீட்சை முறையில் சீர்திருத்தங்கள் அவசியம் என்றும் அது வலியுறுத்தியது.

செகண்டரி கல்வி போர்டுகள் நாட்டில் மொத்தம் 19 உள்ளன. அதில் 16 போர்டுகள் இம்மகாநாட்டில் கலந்து கொண்டன.

1 கோடி சிறுவர்களுக்கு மதிய உணவு

"கேர்" (உலகத்தில் எல்லாவிடத்திலும் துன்பம் துடைப்பதற்கான அமெரிக்கக் கூட்டுறவு நிலையம்) இந்தியா நெடுகிலும் உணவு ஊட்டும் திட்டம் செயலாற்ற வேண்டும் என்ற தனது லட்சியத்தை நெருங்கி வருகிறது. மத்திய பிரதேசத்தில் உணவூட்டும் திட்டம் தொடங்கி இருப்பதாக அது திங்கட்கிழமை அறிவித்தது. இது 12வது மாநில உணவூட்டும் திட்டமாகும்.

ஜனவரி மாத தொடக்கத்திலிருந்து "கேர்" மத்திய பிரதேச 5 லட்சம் பள்ளிச் சிறுவர்களுக்கு ஒவ்வொரு நாளும் ஒரு வேளை உணவு வழங்கும். இந்தப் புதிய முயற்சியையும் சேர்த்து இந்தியாவில் "கேர்" உணவூட்டும் துவக்கப்பள்ளி சிறார்களின் தொகை 91,87,000. இன்னும்

மூன்று இந்திய மாநிலங்கள் தான் இந்தத் திட்டத்தின் கீழ் இப்பொழுது வரவில்லை.

"கேர்" நிலையத்தின் உலக மளாவிய உணவூட்டும் திட்டங்களில் பெரிதான இதற்கு 28,24,04100 ராத்தல் அமெரிக்கப் பண்ணை உணவு பொருள்களை பயன்படுத்தும்.

இந்தியாவில் "கேர்" நிலையத்தின் பசிப்பிணி ஒழிப்பு இயக்கத்தில் கூட்டுறவு திட்டமும், உணவு அறப்போரும் அடங்கும். உணவூட்டும் பணியில் மிகப் பெரும் பகுதி யு. எஸ். அமைதிப் பணி உணவுப் பண்டங்களை விநியோகம் செய்வதாகும். இப்பண்டங்களுக்கு கப்பல் கட்டணங்களை அமெரிக்கா தருகிறது. இந்திய அரசாங்கம் விநியோகச் செலவுகளை ஏற்கிறது.

சென்னை, கொச்சி, பம்பாய், கல்கத்தா ஆகிய நான்கு துறை முகங்களில் உணவுப் பண்டங்கள் வந்திறங்குகின்றன. ரயில் மூலம் அவை உள் நாடு செல்கின்றன. பிறகு அவை பள்ளிக் கூடங்களுக்கு லாரியிலும் மாட்டு வண்டியிலும் கொண்டு போகப்படுகின்றன. 75,000 ஆசிரியர்களின் தொண்டினால் பள்ளி மத்ய உணவு தயாரிக்கப்படுகிறது.

இந்தியாவில் உணவு அறப்போருக்கு அமெரிக்கரின் ஆதரவு உண்டு. அவர்கள் பம்பாயில் 3,25,000 பள்ளிச் சிறுர்களுக்கு பால் வழங்க ஒரு பொதிக்கு ஒரு டாலர் தருகின்றனர். கேரின் 25 நாட்டு உணவு உதவி இயக்கம் இப்போது தயாராகி விட்டது. இது 60 லட்சம் டாலர் திட்டமாகும்.

'தீய சுழலிலிருந்து நமது கல்வி முறையை விடுவிக்க வேண்டும்'

துணைத் தலைவரின் வலியுறுத்தல்

சொந்த மொழி மூலம் அறிவு வளர்ச்சிக்கு இதுவே வழி என்கிருர்

"நமது கல்வி முறை முழுவதும் தீய சுழலில் சிக்கியுள்ளது. பரீட்சைகளில் மாணவர்கள் தரும் விடைகளின் தன்மை பற்றிய இறுதி மதிப்பீட்டிலிருந்து இந்த நிலைமை தெளிவாகிறது" என்று உப ராஷ்டிரபதி டாக்டர் ஜாகிர் ஹுஸேன் இன்று இங்கு கூறினர்.

"இந்த நிலைமை மாறுவதற்கு நாம் ஏதேனும் வழி காண வேண்டும். இல்லாவிட்டால் நம் சொந்த மொழியின் மூலம் அறிவு வளர்ச்சிக்கு நாம் ஊக்கமோ அல்லது உதவியோ அளிக்க முடியாது" என்று அவர் கூறினர்.

தென் மொழிகள் புத்தக டிரஸ்டின் 10வது ஆண்டு நிறைவை முன்னிட்டு உட்லண்ட்ஸ் ஹோட்டலில் நடைபெற்ற ஒரு விழாவில் பேசிய போது டாக்டர் ஜாகிர் ஹுஸேன் இவ்வாறு கூறினர்.

ஆய்ந்தறிந்து நல்லதை எடுத்துக்கொள்ளக் கூடிய மனப் பாங்

கை நாம் வளர்த்துக் கொள்ள வில்லை என்றும், நமக்கு எதில் நம்பிக்கை இருக்கிறதோ அது தான் உண்மையென்றும், இதைப் பற்றிச் சந்தேகிக்கிறவர்கள் தொல்லை கொடுப்பவர்கள் என்றும் நாம் எண்ணுகிறோம் என்று டாக்டர் ஹூமேஸன் கூறினார்.

ஹூமேஸன் மேலும் கூறினார்: இந்தக் காலத்தில் அதிகப் பிரதிகள் விற்பனையாகும் நூல்களில் காதல்கதைகளும், மற்றும்ஆபாச விஷயங்களும், கொடியக் குற்றங்களைச் சித்தரிக்கும் கதைகளுமே அடங்கி யிருக்கின்றன. இந்திய மொழிகளில் இப்போது ஏராளமான புத்தகங்கள் பிரசுரிக்கப் படுகின்றன வென்பதும் அவற்றைப் படிப்பவர்களின் எண்ணிக்கை பெருகி வருகிறதென்பதும் உண்மையே. இது நல்ல அறிகுறியேஆனால் புத்தகங்களின் தரமே முக்கியம். தரம் உள்ள நூல்களை வெளியிடுவதில் கவனம்செலுத்த வேண்டும்.

தென் இந்திய புத்தக டிரஸ்டின் புதுமுயற்சி சம்பந்தமான 3 நூல்களை வெளியிட்டு நிகழ்த்திய உரையிலேயே டாக்டர் ஹூமேஸன் இவ்வாறு குறிப்பிட்டார்.

புத்தக டிரஸ்டின் சேவையை டாக்டர் ஹூமேஸன் பாராட்டினார்.

சென்னை சர்வகலாசாலை உப அத்யட்சகர் டாக்டர் லட்சுமணசாமி முதலியார் விழாவுக்குத் தலைமை வகித்தார். உயர்தர கல்வியைப் பரப்பும் பொறுப்பையும் பணியையும் ஏற்றுக் கொண்டிருப்பவர்களுக்கு மதிப்புத் தர வேண்டும் என்று டாக்டர் ஹூமேஸன் கூறினார்.

திரு. தெ. பொ. மீனாட்சி சுந்தரம் மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர்

முதலமைச்சர் அறிவிப்பு

திரு. தெ. பொ. மீனாட்சி சுந்தரம் பிள்ளை புதிதாக அமைந்துள்ள மதுரை பல்கலைக் கழகத்தின் முதல் துணைவேந்தராகப் பொறுப்பு ஏற்பார்.

இத்தகவலை முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் இங்கு 'தினமணி' நிருபரிடம் தெரிவித்தார்.

இப்போழுது சென்னையில் டிவிஷனல் இன்ஸ்பெக்டராகப் பணியாற்றி வரும் திரு. ஆர். பெருமாள் சர்வகலாசாலையின் முதல் ரிஜிஸ்டிராராக இருப்பார்.

திரு. தெ. பொ. மீனாட்சி சுந்தரம் பிள்ளை இப்பொழுது அண்ணாமலை சர்வகலாசாலையில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றி வருகிறார். அதற்கு முன் சென்னை ராஜதானிக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியமாக விளங்கினார்.

இலக்கிய ஆராய்ச்சியிலும் தொழில் துறை ஆராய்ச்சியிலும் திரு. மீனாட்சி சுந்தரம் சிறப்பாக உழைத்திருக்கிறார். விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்.

திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை சென்னையில் 1901ல்

ஜனவரி 8ந் தேதி பிறந்தார்.

64 வயதாகும் பேராசிரியருக் குத் தமிழைத் தவிர சமஸ்கிருதம், ஆங்கிலம், மலையாளம், கன்னடம், தெலுங்கு, இந்தி, பிரெஞ்சு, ஜெர்மனி ஆகிய மொழிகள் நன்கறிந்தவராகும்.

'பன்மொழிப் புலவர்' என அவர் அழைக்கப்படுவது தெரிந்ததே.

சென்னை ராஜதானி கல்லூரியில் அவர் சிறிது காலம் தமிழ்த் துறைத் தலைவராக பணியாற்றினார்.

அமெரிக்காவிலும் தூரக்கிழக்கு நாடுகளிலும் அவர் சுற்றுப் பயணம் செய்து அவ்விடங்களில் உள்ள சர்வகலா சாலைகளில் உரை நிகழ்த்தியிருக்கிறார்.

அண்ணாமலை பல்கலைக் கழக மொழிகள் பிரிவுத் தலைவராக தற்போது பணியாற்றி வரும் அவரிடம் பல தலைமுறைகளைச் சேர்ந்த மாணவர்கள் படித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. அமெரிக்கா, ரஷிய மாணவர்கள் சிலரும் அவரிடம் தமிழ் படிக்கிறார்கள்.

பேராசிரியர் மீனாட்சிசுந்தரம் தமிழில் பல நூல்களை எழுதியிருக்கிறார். அவற்றில் சில வருமாறு: 'வள்ளுவரும், மகளிரும்.' 'கானல் வரி' 'குடி மக்கள் காப்பியம்'.

பேராசிரியர் கால்ட்வெல்லின் 'திராவிட மொழிகள்' என்ற நூலையும் அவர் மொழி பெயர்த்திருக்கிறார்.

திரு. மீனாட்சிசுந்தரம் துணைவேந்தராக நியமிக்கப்பட்டுள்ளது கல்வித்துறை வட்டாரங்களில் மகிழ்ச்சியுடன் வரவேற்கப்படுகிறது.

சென்னை சட்டக் கல்லூரியில் முதன் மந்திரி திரு. பக்தவத்ஸலம் படித்தபோது திரு. மீனாட்சிசுந்தரமும் அக் கல்லூரியில் படித்தவர். எம். ஏ. எம். ஓ. எல். பட்டம் பெற்றுள்ள இவர் சட்டத் துறையிலும் பி. எல். பட்டம் பெற்றவராகும்.

தனியார் கல்வி நிறுவனங்களை ஒழுங்குபடுத்த மாதிரி மசோதா

மாநிலங்களுக்கு டில்லி அனுப்பியது

தனியார் கல்வி ஸ்தாபனங்கள் செயல்படுவதை ஒழுங்குபடுத்துவதற்காக சட்டமியற்றுமாறு ராஜ்ய சர்க்கார்களை மத்ய சர்க்கார் கேட்டுக்கொண்டிருக்கிறது.

"தனியார் கல்வி ஸ்தாபனங்கள் (ஒழுங்கு முறை, கண்ட்ரோல்) மசோதா" என்று இதற்காக ராஜ்ய சர்க்கார்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு தனியார் கல்வி ஸ்தாபனமும் பள்ளி ஒன்றை அல்லது வேறுவித கல்வி நிலையத்தைத் துவக்கும் முன் சர்க்காரிடமிருந்து எழுத்து மூலம் அனுமதியைப் பெற வேண்டும் என்று உத்தேச மசோதா கோரும். தகுதிவாய்ந்த குழு ஒன்றிடம் இந்த அதிகாரத்தை சர்க்கார் அளிக்கும். அனுமதியை

அளிப்பதோ அன்றி நிராகரிப்பதோ இந்தக்குழுவின் பொறுப்பு.

தனியார் துறையில் உள்ள பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவற்றில் பெரும்பாலானவை தற்போது சர்க்காரினால் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளின்படி செயல்படுகின்றன. சர்க்காரினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. அங்கீகரிக்கப்படாத, டியூடோரியல், வர்த்தக, தொழில் நுட்ப கல்வி நிலையங்கள் புதிய மசோதாவின் கீழ் வரும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. புதிய ஸ்தாபனங்களுக்கு மட்டுமின்றி, சர்க்காரினால் அங்கீகரிக்கப்படாமல் தற்போதிருக்கும் ஸ்தாபனங்களுக்கு மசோதா பொருந்தும்.

அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனம் தகுந்த கணக்குகள் வைத்திருக்க வேண்டும். ரூ. 8 ஆயிரத்துக்கு அதிகமாக வருட வருமானமுள்ள கல்வி ஸ்தாபனங்களின் கணக்குகளை சர்க்காரினால் நியமிக்கப்பட்ட சார்ட்டர்டு அக்கவுண்டண்ட் ஒருவர் தணிக்கை செய்வார். உத்தேச சட்டத்தை மீறுவோருக்கு ரூ. 5 ஆயிரம் அபராதம் விதிக்க மகாநாடு வகை செய்கிறது.

நகரசபைப் பள்ளிகளின் நிர்வாகத்தை அரசு படிப்படியாக ஏற்கும்

ராஜ்யத்திலுள்ள 80 நகரசபை செகண்டரி பள்ளிக்கூடங்களைப் படிப்படியாக மேற்கொள்வது என்று ராஜ்ய சர்க்கார் முடிவு செய்துள்ளனர். போதிய நிதி வசதி இல்லாததால் உடனடியாக எல்லாப் பள்ளிக்கூடங்களையும் மேற்கொள்ளுவது சாத்தியமாயிராது.

நிதிச் சுமையை தங்களால் தாங்க முடியவில்லையாதலால், தாங்கள் நடத்தும் பள்ளிக்கூடங்களை சர்க்கார் மேற்கொள்ள வேண்டும் என்று பெரும்பாலான நகர சபைகள் கோரியிருந்தன.

முதல்வர் பேட்டி

நகரசபை நடத்தும் பள்ளிக்கூடங்களை சர்க்கார் மேற்கொண்டு நடத்த வேண்டும் என்ற நகரசபைகளின் கோரிக்கைகளை சென்னை சர்க்கார் அனுதாபத்துடன் பரிசீலித்துக் கொண்டிருப்பதாக முதன் மந்திரி திரு. பக்தவத்சலம் நிருபர்களிடம் கூறினார்.

எனினும், இவற்றைப் படிப்படியாகத்தான் மேற்கொள்ள முடியும். உடனடியாக எல்லாப பள்ளிக்கூடங்களையும் மேற்கொள்ளமுடியாது என்றார் பக்தவத்சலம்.

போர் வீரர்களை நம்பி வாழும் குழந்தைகளுக்கும் கல்விச் சலுகை தர முடிவு

தரைப்படை விமானப்படை கடற்படைகளைச் சேர்ந்த ஜூனியர் கமிஷன் அதிகாரிகள், அதற்குக் கீழ்ப்பட்ட மற்ற பிரிவினர் ஆகியோர்கள் குழந்தைகளுக்குக் கல்விச் சலுகைகளை அளிக்க தமிழக அரசாங்கம் ஏற்கனவே ஏற்பாடு செய்திருக்கிறது. தற்போது ராணுவத்தில் பணியாற்றும் அல்லது போரில் கொல்லப்

பட்ட அல்லது ஊனமடைந்த ஜூனியர் கமிஷன் அதிகாரி நிலைக்கு மேற்பட்ட பிரிவினர் உட்பட எல்லா நிலை ராணுவத்தினரின் குழந்தைகள், சகோதரர்கள், சகோதரிகள் ஆகியோருக்கும் 1966 ஜனவரி 1ந் தேதியிலிருந்து கல்விச் சலுகை அளிக்க அரசாங்கம் முன்வந்திருக்கிறது. அதன்படி, அவர்களுக்கு தொழிற்கல்லூரிகள், நிலையங்கள் உட்பட எல்லா விசேஷக் கட்டணங்கள், முழு கல்விக் கட்டணம் ஆகியவற்றிலிருந்து விலக்கு அளிக்கப்படும். ஒரு குறிப்பிட்ட ராணுவ அதிகாரியை முழுக்க முழுக்க சார்ந்திருக்கும் நிலையில்தான் அவரது சகோதரர், சகோதரிகளுக்கு இத்தகைய கல்விச் சலுகை உண்டு. அரசாங்க நிறுவனங்களானால் கல்லூரி முதல்வர்களும் உதவிபெறும் நிறுவனங்களானால் நிர்வாகிகளும் இந்தச்சலுகைக்கு அனுமதி வழங்குவார்கள்.

தபால் மூலம் 4 வருட பி. ஏ. பட்டப் படிப்பு

சென்னை மாநிலத்தில் அதிக மாணவர் சேருகின்றனர்

சென்னை, டிச. 26—புதுடில்லியில் உள்ள தபால் மூலம் பாடம் போதிக்கும் டைரக்டரேட் (டைரக்டரேட் ஆப் கரஸ்பாண்டண்ஸ் கோர்ஸ்) தபால் மூலம் போதிக்கும் 4 வருட பி. ஏ. பட்டப் படிப்பில் சென்னை ராஜ்யத்தில் மேலும் அதிகம் பேர் ஆர்வம் காட்ட ஆரம்பித்துள்ளனர். டில்லிக்கு அடுத்தபடியாக சென்னை ராஜ்யத்தில்தான் அதிகப்படியான மாணவர்கள் இந்தப் படிப்பில் சேருகின்றனர். சுமார் 400 மாணவர்கள் இந்த படிப்பில் சேர்ந்து படிக்கின்றனர்.

ஒவ்வொரு வருடமும் மேற்கூறியடைரக்டரேட்டைச்சேர்ந்த சில விரிவுரையாளர்கள் சென்னை போன்ற இடங்களுக்கு விஜயம் செய்து தபால் மூலம் கல்வி கற்கும் மாணவர்களுடன நேரடியான தொடர்பு கொள்கின்றனர்.

தற்போது பி. ஏ. பட்டப் படிப்பு வரலாறு, பொருளாதாரம் போன்ற பாடங்கள் மாத்திரமே தபால் மூலம் போதிக்கப்படுகின்றன. படிப்படியாக விஞ்ஞான பாடங்களும் போதிக்கப்படும் என்று தெரிகிறது. தபால் மூலம் பி. ஏ. பட்டப் படிப்புபடிக்கும் மாணவர்கள் 4 வருடப் படிப்பு முடிந்ததும் டில்லிக்குச் சென்று பரீட்சைகளை எழுத வேண்டும்.

சென்னை போன்ற முக்கிய இடங்களில் பரீட்சைகளை நடத்த வேண்டியது அவசியம் என்பதை டைரக்டரேட் உணர்ந்திருப்பதாகத் தெரிகிறது.

20 முதல் 35 வயது வரை உள்ளவர்கள் இந்தப் படிப்பில் சேருகின்றனர். ஓய்வு பெற்ற சிலரும் படிக்கின்றனர். பல்வேறு அரசாங்க அலுவலகங்களிலும் தொழில் நிறுவனங்களிலும் வேலை பார்க்கும் மணமான பெண்களும் கன்னிப்

பெண்களும் இந்தப் படிப்பில் சேர்ந்துள்ளனர்.

முதல் கோஷ்டி மாணவர்கள் சென்ற செப்டம்பரில் பரீசை எழுதினர். 2 வது கோஷ்டி மாணவர்கள் 1966 மார்ச் - ஏப்ர லில் பரீட்சை எழுதுவர். இந்த 4 வருட பி. ஏ. பட்டப் படிப்பை டில்லி சர்வகலாசாலை அங்கீகாரம் செய்துள்ளது.

மேற் கூறிய டைரக்டரேட் டைச் சேர்ந்த சில விரிவுரையா ளர்கள் நாளை விவேகானந்தா கல்லூரியில் தபால் மூலம் 4 வருட பி. ஏ. பட்டப் படிப்பு படிக்கும் மாணவர்களுடன் இந்த வருடத்திற்காக நேரடி தொடர்பு கொள்வார்கள்.

திறமைசாலிகள் பாங்கு

டில்லிப் பல்கலைக் கழகத் திட்டம்

புதுடில்லி, டிச.29 —கல்லூரி யில் பயிலும் திறமை மிக்க இளை ஞர்களை தெரிந்தெடுத்து, அவர் களுடைய படிப்பின் போதே பல் வேறு நிர்வாகத் துறைகளிலும் அவர்களுக்குப் பயிற்சியளிப்பதற் கான திட்டமொன்றை டில்லி பல் கலைக் கழகத்தைச் சேர்ந்த வேலை யளிப்புத் தகவல்-உதவி ஸ்தாப னம் ஆரம்பித்திருக்கிறது. முத லில், டில்லி பல்கலைக் கழகத் தைச் சேர்ந்த எல்லாக் கல்லூரி களிலிருந்தும் தெரிந்தெடுக்கப் பட்டுள்ள 50 மாணவர்கள் இந்த பாங்கியில் சேர்த்துக் கொள்ளப் படுகின்றனர். மூன்று வருட பி. ஏ., பி. காம்., பி. எஸ்ஸி., எம். ஏ., எம். காம், எம். எஸ்ஸி., ஆகிய வகுப்பு களிலிருந்து இந்த மாணவர்கள் தெரிந்தெடுக்கப் பட்டிருக் கின்றனர். இவ்வருடம் அக் டோபர் முதல் தேதியன்று 24 வயதுக்கு உட்பட்ட மாண வர்கள் தெரிந்தெடுக்கப் பட்டுள் ளனர்.

இத்திட்டத்தின்படி இலவச மாகப் புதுமுறைப் பயிற்சி திட் டம் ஒன்றை ஆரம்பிக்கப் பட்டி ருக்கிறது. சிப்பந்திகள் நிர்வா கம், கணக்குத்துறை, புள்ளி விவரம், பேட்டி நடத்துதல், காரியாலய நிர்வாகம், சமூகப் பண்பாடுகள் முதலிய அம்சங் களில் வாரத்துக்கு இரு முறை மாணவர்களுக்கு விரிவுரைகள் நிகழ்த்தப்படும்.

இந்தப் பாங்கிக்குத் தெரிந் தெடுக்கப் படுகிற மாணவர்கள் மனோதத்துவ, திறமை சோதனை களுக்கு உட்படுத்தப்படுவார்கள், இந்நாட்டிலுள்ள முக்கியமான தொழில் ஸ்தாபனங்கள், வர்த் தகஸ்தாபனங்கள் ஆகியவற்றின் நிர்வாகப் பயிற்சித் திட்டங்கள் சிப்பந்திகள் தெரிந்தெடுப்பு முறைகள், வேலைவாய்ப்புத் தோ துகள் முதலியவைப் பற்றிய தக வல்களும் அவர்களுக்கு அறிவிக் கப் படும். இவர்களுக்காக சுருக் கெழுத்துப் பயிற்சி வகுப்புகளும் நடத்தப் படுகின்றன.

செய்திச் சுருள்

10, 15 தினங்களில் ரூ. 300 கோடி செலவு

பாக ஆக்ரமிப்பை யடுத்து போர் மூண்ட 10, 15 தினங்களுள் நாடு ரூ. 500 கோடி செலவிட்டிருக்கிறது.

யூனியன் மந்திரி திரு. சத்ய நாராயண சின்ஹா பெங்களூர் டெலிபோன் தொழிற்சாலையில் உற்பத்தித் திறன் ஆண்டு கொண்டாட்ட துவக்க விழாவில் பேசுகையில் இந்தத் தகவலை வெளியிட்டார்.

ஆளில்லா ஸ்டால் மதுரையில் ஆரம்பம்

மதுரை ரயில்வே நிலைய பிளாட்பாரத்தில் "ஆளில்லாத" பத்திரிகை விற்பனை ஸ்டால் இன்று மாலை துவக்கி வைக்கப்பட்டது.

நேர்மையைப் பரிசோதிப்பதற்காக இத்திட்டத்தை மதுரை ரோட்டரி கிளப் உருவாக்கியது. ஸ்டாலில் பெட்டி யொன்றும் பத்திரிகைகளும் இருக்கும். விருப்ப முள்ளவர்கள் ஸ்டாலுக்குச் சென்று தேவையான பத்திரிகையை எடுத்துகொண்டு பணத்தை பெட்டியில் போட வேண்டும்.

ரோட்டரி கிளப் இதில் இலாபம் எதையும் எதிர்பார்க்காது.

ரயில்வே டிவிஷன் சூப்பிரண்டெண்ட் திரு. சி.வி.பி. மேனன் ஸ்டாலைத் துவக்கிவைத்துப் பேசுகையில் 'ரோட்டரி கிளப்பின் முயற்சியைப் பாராட்டினார்.

அமெரிக்காவின் மக்கள் தொகை 60 ஆண்டுகளில் இந்தியாவை எட்டிவிடும்

அமெரிக்காவின் ஜனத்தொகை அதிகரிப்பு விகிதம் இப்போதுள்ள அளவில் நீடிக்குமானால் அந்நாடு இன்னும் 60 ஆண்டுகளில் இந்தியாவின் தற்போதைய ஜனத்தொகையைப் பெற்றதாகி விடும்.

ஜனத்தொகை பற்றிய பிரச்னைகளை ஆராயும் தனிப்பட்ட அமைப்பான ஜனத்தொகை முதல் தடவையாக 20 கோடியை எட்டிப் பிடித்து விடும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

வாழை மட்டையிலிருந்து நாரெடுக்கும் யந்திரம்

வாழைமட்டைகளிலிருந்து நாரை எடுப்பதற்கு மகாராஷ்டிர அரசாங்கம் திட்டமிட்டுவருகிறது. அதற்கான யந்திரம் மேற்கு ஜெர்மனியிலிருந்து இறக்குமதி செய்யப்படும். நார்மடித் தயாரிப்புக்கு இது பயன்படும்.

ஜெர்மனி நிறுவனமொன்றி

ளுல் வடிவமைக்கப்பட்டுள்ள அக் கருவியைக் கொண்டு ஒருமணி நேரத்தில் 70 கிலோ கிராம் நாரை எடுக்கலாம். அது காற்றி ளுல் குளிர்ச்சிப் படுத்தப்படும் நாலு சிலிண்டர் டீசல் எஞ்சிளுல் இயங்குகிறது. அதன் விலை ரூ. 84 ஆயிரமாக இருக்கும் என்று தெரிகிறது. அதில் காற்றடித்த சக்கரங்களைப் பூட்டி, எந்திரக் கலப்பை அல்லது இதர வாக னங்களில் இணைக்கலாம்.

உலகில் நீண்ட நாள் வாழும் பெண்கள்

நார்வே நாரிமணிகளுக்கு முதல் இடம்

உலகிலுள்ள தேசிய இனத்த வரில் நியூசிலாந்தில் வாழும் மாவோரியரல்லாத பெண் ணுக்கும் ஆணுக்கும் நீடித்த ஆயுளோடு வாழ்வதில் முறையே நான்காவது ஐந்தாவது இடங் கள் கிடைத்துள்ளதாக நியூசி லாந்து அரசாங்க புள்ளியியல் விற்பன்னர் கூறுகிருர். அப் பெண்ணின் ஆயுள் 74·51 ஆண்டு கள்; ஆணுக்கு ஆயுள் 69·17 ஆண்டுகள்.

நார்வேயில் பெண்கள் நீண்ட ஆயுளுள்ளவர்களாக இருக்கின்ற னர். அவர்களின் ஆயுள் 75·57 ஆண்டுகளாகும். அவர்களை அடுத்து சுவிடனிலும், நெதர் லாந்திலும் வாழ்கின்ற மக்களின் ஆயுள் நீண்டதாக இருக்கிறது. சுவீடிய ஆணின் ஆயுள் 71·56 ஆகும். அவர்களை யடுத்து டச்சு, நார்வீஜிய டேனிஷ் ஆண்கள் நீண்ட ஆயுள் உள்ளவர்களா யிருக்கின்றனர். நியூசிலாந்தில் வாழும் மாவோரி இன ஆண் களைப் பொறுத்தவரையில் அவர்களின் ஆயுள் 61.37 ஆண் டுகளாகும். பெண்களின் ஆயுள் 59·65 ஆண்டுகளாகும்.

காணுமலே காதல்!

யார்க்ஷயரில் வோம்பெல் என்னுமிடத்திலுள்ள பாட்டில் தயாரிப்புத் தொழிற்சாலையில் பணியாற்றும் 21 வயதான குமாரி மார்ஜோரி பௌலர் ஆஸ்திரேலியாவுக்குச் செல்ல விருந்த பாட்டில்களில் ஒன்றில் துண்டுக் கடிதம் ஒன்றை எழு திப்போட்டார். அது ஆஸ்திரே லியாவைச் சேர்ந்த 26 வயதான ஜான் வெட்டலர் என்பவரின் கைக்குக் கிடைத்தது.

இது நடந்து ஓராண்டாகிவிட் டது. இந்த ஓராண்டில் இரு வரும் பல தடவை ஒருவருக் கொருவர் கடிதம் எழுதிக் கொண்டு விட்டனர். விமான மூலம் ஆஸ்டிரேலியாவுக்கு வந்து தன்னை நேரில் பார்க்கு மாறு மார்ஜோகிக்கு ஜான் கடிதம் எழுதியுள்ளார். ஆஸ்தி ரேலியாவிலிருந்து வந்து செல்ல 450 பவுன் தருகிருர்.

இப்போது மார்ஜோரி பஸ் கண்டக்டர். ஒரு மாத லீவு எடுத்துக்கொண்டு ஆஸ்டிரே லியா வருகிருர். "உண்மைக் காதல் வளருவதற்கு முன்னதாக இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்வது நல்லது" என்று அவர் கூறிஞர்.

மானசீகத் தொடர்புகள்

விஞ்ஞானிகள் ஆராய்ச்சி

மானசீகத்தொடர்பு உண்மை

யானதே என்பதற்கு ஆதாரம் காட்டக் கூடிய சம்பவங்கள் எவ்வளவோ உள்ளன. குழந்தைகள் கண் பார்வையில் கேட்கும் தூரத்தில் இல்லாமல் இருந்தாலும் அவற்றுக்கு ஏதோ தீங்கு ஏற்படும்போது அநேக சமயங்களில் தாய்மார்கள் அதை எவ்விதமோ அறிகின்றனர். கணவனும் மனைவியும் சற்று நேரம் ஏதும் பேசாமல் சிந்தனையில் மூழ்கியிருந்து விட்டு மறுபடி பேச்சை துவக்கும்போது இருவரும் ஒரே விஷயத்தைப் பற்றித் தான் பேச்சு எடுக்கின்றனர்.

ஒரே மாதிரி உருவத்தோற்றம் கொண்ட இரட்டை குழந்தைகளின் மூளைகள் ஒற்றுக் கொண்று "மூளை அலை" களை அனுப்பிக் கொள்கின்றன என்று இப்போது விஞ்ஞான ஆராய்வு மூலம் தெரியவந்துள்ளதிலிருந்து மானசிகத் தொடர்பு எனப்படும் புலன்களுக் கப்பாற்பட்ட தொடர்பு பற்றிய விஞ்ஞானம் ஒரு முன்னேற்ற அடி எடுத்து வைத்துள்ளது.

ஐம்புலன்களாலும் அறிய முடியாத சில விஷயங்களை மனதில் உணருவதே புலன்களுக்கு அப்பாற்பட்ட உணர்வாகும். இது இடம் சூழ்நிலை ஆகியவற்றால் ஏற்படும் எல்லாத் தடைகளையும் மீறிய ஒருவகை ஆறுவது புலனாகவும் தோன்றுகிறது.

அமெரிக்க, ரஷிய, பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் பல ஆண்டு காலம் ஆராய்ச்சி நடத்தியுள்ள போதிலும் மானசிக தொடர்பின் வரம்புகள், அதன் வாய்ப்புகள் ஆகியவை பெருமளவுக்கு ஊகங்களாகவே உள்ளன.

பிராணிகள் மானசீக தொடர்பை தொடர்ந்து பயன்படுத்துகின்றன. எறும்புகள், பறவைகள் ஆகியவை நமக்குத் தெரிந்தவரை எவ்வித சமிக்ஞையும் இன்றி ஒழுங்காகச் செல்வதும் அநேகமாக ஒரே வினாடியில் ஒரு செயலில் ஈடுபடுவதும் இதற்கான உதாரணங்களாகக் கூறப்படுகின்றன.

பூமிக்கும் வானவெளி வீரர் ரேடியோ சாதன செய்தி தொடர்புத் துண்டிக்கப்படும் போது செய்தித் தொடர்புக்கு மானசீக தொடர்பைப் பயன்படுத்தலாம் என்பதால் ரஷிய பேராசிரியர் ஒருவர் பல ஆண்டுகளாக அது குறித்து ஆராய்ச்சியையும், பரிசோதனைகளையும் நடத்தியுள்ளார். ஒருவகை அந்துப் பூச்சிகள் நடுவே எவ்வளவு செய்கையான தடைகள் இருந்தபோதிலும் ஒன்றோடொன்று தகவல் தொடர்பு கொள்ளும் திறன் பெற்றுள்ளன என்று அவருடைய பரிசோதனைகள் காட்டின.

அமெரிக்க அரசாங்கம் இதன் வாய்ப்பை ஆராய மானசீக தொடர்புக்காக ஒருவரை நீர் மூழ்க்கப்பலில் அனுப்பியதாகவும், அவருடைய மானசீக செய்தியைப் பெற குறிப்பிட்ட ஒருவர் கரையில் நின்றதாகவும் வதந்திகள் உலவுகின்றன. அதன் பலன்கள் வெளியிடப்படவில்லை.

அன்னியச் செலாவணி சம்பாதிக்கும் சுக்கு

உலக மார்க்கெட்டுக்கு சுக்கு சப்ளை செய்யும் மிகப் பெரிய நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும். 1964-65-ல் ஒரு கோடியே 32 லட்சம் ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள சுக்கு இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப் பட்டது. இந்த ஏற்றுமதியை மேலும் அதிகப்படுத்துவதற்காக, கட்டாயத் தரக்கட்டுப் பாடும் கப்பலில் ஏற்றுவதற்கு முந்தைய சோதனையும் அமலுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன.

உலக மக்கள் உண்ணும் பல்வேறு வகையான உணவுப் பண்டங்களிலும் அருந்தும் பானங்களிலும் சுக்கு பிரதான இடம் பெறுகிறது. சுக்கின் மணம் அவற்றின் சுவையைப் பன்மடங்கு பெருக்குகிறது. எனவே சுக்கு இல்லையேல் நமது வாழ்க்கை அவ்வளவு சுவாரஸ்யப்படாது.

சுக்கு நமது உணவில் தான் முக்கியத்துவம் பெற்றிருக்கிறது என்பதில்லை. அது நமக்கு மிகவும் முக்கியமான அன்னியச் செலாவணியையும் ஏராளமாகச் சம்பாதித்துக் கொடுக்கிறது. 1964-65-ம் ஆண்டில் மட்டும், அனேகமாக உலக நாடுகள் அனைத்துக்கும் மொத்தம் ரூ. 1,32,00,000 மதிப்புக்கு இந்தியா சுக்கு ஏற்றுமதி செய்தது.

முக்கிய ஏற்றுமதிப் பொருள்

சுக்கு சப்ளை செய்யும் மிகப் பெரிய நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும். மொத்தம் உலக சப்ளையில் பாதிக்கு மேல் இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகிறது.

ஆதிகாலந்தொட்டே இந்தியாவில் இஞ்சி சாகுபடியாகி வருகிறது. புராதன காலத்திலும் இடைக் காலத்திலும் கூட, இப்போதைப் போலவே, ரோமானிய சாம்ராஜ்யத்துக்கும் மேற்கத்திய நாடுகளுக்கும் இந்தியா இலவங்கப் பொருள்களை ஏற்றுமதி செய்து பொன்னையும் பொன் நாணயங்களையும் சம்பாதித்து வந்திருக்கிறது.

உணவுப் பண்டங்களுக்கு மட்டுமின்றி, மருந்துகளுக்கும் ரசாயனப் பொருள்களுக்கும் இஞ்சியும், சுக்கும் முக்கியமாக உபயோகப்படுத்தப்படுகின்றன. ஆயுர்வேத வைத்திய முறையில் இஞ்சி முக்கியமானதொரு மருந்துச் சரக்காகப் பயன்படுகிறது. தலைவலியோ, வேறு எந்த நோவோ ஏற்படும் போது, "சுக்கை இழைத்துப் போடுங்கள்" என்று நாம்

யோசனை கூறுகிறோம். இது நமது வாழ்க்கையில் அவ்வளவு முக்கியத்துவம் பெற்றுவிட்டிருக் கிறது.

போதை இல்லாத பானங்கள் தயாரிப்பதற்கும் சுக்கு உபயோ கப் படுத்தப்படுகிறது. ஜிஞ்சர் பீர், ஜிஞ்சர் பிராண்டி, ஜிஞ்சர் வைன் முதலியவற்றின் தயாரிப் புக்காக வாலைவடிப்பு நிலையங் களில் சுக்கு உபயோகப்படுத்தப் படுகிறது. அமெரிக்காவில் "ஜிஞ்சர் ஏல்" மிகவும் பிரபல மடைந்துள்ளது. பிரிட்டனில் "ஜிஞ்சர் பீர்" ஏராளமாகச் செலவாகிறது. இந்தப் பானங் களின் தயாரிப்புக்கு சுக்கு மிகப் பெருமளவில் உபயோகிக்கப்படு கிறது.

கேரளத்தில் அதிகம்

இஞ்சி இந்தியாவெங்கிலும் பயி ராகிற போதிலும் கேரளத்தில் தான் மிகப் பெருமளவில் சாகு படி யாகிறது. 1962-63-ல் இந்தியாவில் மொத்தம் 22,200 டன் சுக்கு உற்பத்தியாயிற்று. அதில் 11,500 டன் சுக்கு கேர ளத்திலிருந்து மட்டும் கிடைத் ததாகும். இந்நாட்டின் மற்றப் பகுதிகளில் உற்பத்தியாகிற இஞ் சியில் கேரளத்து இஞ்சியைவிட நார் அதிகமாக இருக்கிறது. எனவே, மற்ற பகுதிகளில் இது பச்சை இஞ்சியாகவே உபயோகப் படுத்தப்படுகிறது. கேரளத்தில் மட்டும் இஞ்சி வெய்யிலில் உலர்த்தப்பட்டு, சுக்காகத் தயாரிக்கப்படுகிறது. இவ்வாறு உலர்த்தப்பட்ட சுக்கு தான் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

சுக்கில் இருவகை

சுக்கு, இரண்டு வகைகளாக, அதாவது தெள்ளைச் சுக்காகவும், சாதாரணச் சுக்காகவும் ஏற்று மதி யாகிறது. இஞ்சியின் மேல் தோலை அகற்றி, வெய்யிலில் உலர்த்தி சாதாரணச் சுக்கு தயாரிக்கிறார்கள். இதற்கு இஞ்சி இரவு முழுவதும் ஊறவைக்கப் படுகிறது. மறுநாள் காலை அதன் மேல் தோல் அகற்றப் படுகிறது. மேல்தோலைச் சுரண்டுவதற்குக் கூர்மையான மூங்கில் துண்டுகள் உபயோகிக் கப்படுகின்றன. பின்னர் அதைக் கழுவி வெய்யிலில் உலர்த்து கிறார்கள். அது சுமார் ஐந்து ஏழு நாட்கள் வரை உலர்த்தப் படும்.

வெள்ளைச்சுக்கு தயாரிப்ப தற்கு சுண்ணும்பு நீர் பயன் படுத்தப்படுகிறது. தோல் நீக்கப் பட்ட இஞ்சியைச் சுண்ணும்புத் தண்ணீரில் நனைத்து, பின்னர் வெய்யிலில் உலர்த்த வேண்டும். இதேபோல் அதை மூன்று நான்கு தடவைகள் மீண்டும் சுண்ணும்புத் தண்ணீரில் நனைத்து உலர வைக்கவேண்டும். அதாவது இஞ்சியின் மேல்பரப்பு முழுவதும் சுண்ணும்பால் மூடப் படுவது வரையில் அவ்வாறு

செய்ய வேண்டும். இதுதான் வெள்ளைச் சுக்கு அல்லது சுண்ணும்புப் பக்குவச் சுக்கு எனப்படும்.

இந்தியாவிலிருந்து பெரும்பாலும் கள்ளிக்கோட்டை, கொச்சி ஆகிய துறைமுகங்கள் வழியாகச் சுக்கு ஏற்றுமதியாகிறது.

போட்டிகள்

சென்ற சில வருடங்கள் வரை உலக மார்க்கெட்டுகளுக்கு இந்தியாதான் மிகப்பெருமளவில் சுக்கு சப்ளை செய்து வந்தது. ஜமைக்கா, ஸீராலியோன், நைஜீரியாபோன்ற நாடுகள் உலகத்தின் சுக்குத் தேவைகளில் ஒரு பகுதியை மட்டுமே ஏற்றுமதி செய்து வந்தன. அண்மையில் தய்வான் சுக்கு ஏற்றுமதியில் ஈடுபட்டிருக்கிறது. இது சுக்கை ஏராளமாக ஏற்றுமதி செய்கிறது. இப்போது இது இந்தியச் சுக்கின் மிகப்பெரிய போட்டி நாடுகளில் ஒன்றாகிவிட்டது.

சுக்கு ஏற்றுமதியை அதிகப்படுத்துவதற்கு, இந்திய சப்ளை தரம் உயர்த்தியாக இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும். இதற்காக, இந்திய அரசாங்கம் கட்டாயத் தரக் கட்டுப்பாட்டையும் 'அக் மார்க்' ஏற்பாட்டின்படி சுக்கைக் கப்பலில் ஏற்றுவதற்கு முன்பாக சரக்கின் தரத்தைப் பரிசோதித்துப் பார்க்கும் முறையையும் 1965 ஆகஸ்ட் 15 முதல் அமல் நடத்தி வருகிறது.

—" தினமணி "

" ஆரம்பக் கல்வி "
ஆபீஸ்.
94-95, புதுத்தெரு,
மண்ணடி, சென்னை-1.

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 2-50

ரிக்கார்ட் ஷீட்டுகள் (ஆங்கிலம்) 100 ரூ. 2-00

பிராவிடெண்ட் பண்டு கட்டும் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 2-00

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 1-00

வருடாந்திர பிராவிடெண்ட் பண்டு சரிபார்த்தனுப்பும் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 2-00

Form of Certificate of Income
வருமான நற்சாட்சிப் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 2-00

தபால் செலவு பிரத்யேகம்

முக்கிய அறிவிப்பு

Book Post-ல் பாரங்களை அனுப்ப தபால் செலவு:

25 பாரங்களுக்கு 14 nP.
50 பாரங்களுக்கு 26 nP.
75 பாரங்களுக்கு 41 nP.
100 பாரங்களுக்கு 50 nP.

வேண்டிய பாரங்களுக்கு தபால் செலவு சேர்த்து முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

அணுவின் ஆற்றல்

பேராசிரியர் ந. சுப்பு ரெட்டியார், எம்.ஏ., பி.எஸ்ஸி., எல். டி.

அறிவியல் மேதை ஐன்ஸ்டைன் தந்துள்ள மந்திரத்தால் அறிவியலறிஞர்கள் அணுவின் இரகசியத்தை அறிந்தனர். 'சடமே சக்தி' என்று அம் மந்திரம் கூறுகின்றது. பொருண்மையே (Mass) ஆற்றலாக (energy) மாறுகின்றது என்பது ஐன்ஸ்டைன் உணர்த்திய உண்மை. இங்ஙனமே, ஆற்றலும் பொருண்மையாக மாறும் விந்தையையும் காண்கின்றோம். ஒரு கிராம் எடையுள்ள நிலக்கரியை அணுச்சிதைவு செய்து 2500 டன் நிலக்கரியை எரித்தால் கிடைக்கும் அளவு வெப்பம் உண்டாகும் என்று கணக்கிட்டுக் கூறுவர் அறிவியலறிஞர்கள். குறளாய் இருந்த வாமனன் நெடுமாலாய் வளர்ந்து காட்டி பேராற்றலை வெளிப்படுத்தியது போல் அணுவும் சிதைந்து தன் அற்புத ஆற்றலை வெளிப்படுத்துகின்றது. சிவபெருமானின் நெற்றிக் கண்ணினின்றும் வெளிப்படும் சுடர்களையொத்த முச்சுடர்களை (ஆல்ஃபா, பீட்டா, காமா கதிர்கள்) வீசுகின்றது. அதனால் பத்துக்கோடி சுழியுள்ள (degree) சூட்டினையும் வெளிப்படுத்துகின்றது. கதிரவனின் மேற்பரப்பிலுள்ள சூடுகூட சுமார் 6000°C தான். ஆனால், அணுவின் அகட்டில் பொருளனைத்தினையும் உருக்கி ஆவியாக்க வல்ல பெருஞ்சூடு அடங்கியுள்ளது. ஒளியோ கோடானுகோடி சூரிய ஒளி போன்றது. ஹிரோஷிமாவில் அணுகுண்டு வீழ்ந்த பொழுது அந்நகர் சூரியனின் வயிறாக மாறியது; நூறுகோடி சூரியர்கள் திரண்டு ஒருங்கே வந்தாற் போன்ற பேரொளி தோன்றியது. இவற்றைத் தவிர, நினைக்கவும் முடியாத நெருக்கடி—காற்றின் அமுக்கம்—இறுக்கம்—உலகமே தலைமீது விழுவது போன்ற காற்றின் மோதல் — ஆகியவை ஒன்று சேர்ந்து மக்களைத் திக்குமுக்காடச் செய்தது. எம்மருங்கும் வீசிய மின்வீச்சால் ஆயிரக் கணக்கான மக்கள் மடிந்தனர். அணுகுண்டு விளைவித்த சேதத்தில் உருத்திர தாண்டவத்தைத் தான் பார்க்கின்றோம்.

அணுவின் ஆற்றல்

மேற்குறிப்பிட்ட அணுவாற்றல் அணுவின் எப்பகுதியினின்றும் வெளிப்படுகின்றது? எல்லா அணுக்களின் உட்கருக்களிலும் புரோட்டான்கள், நியூட்ரான்கள் என்ற இரண்டு வகைத் துகள்கள் அமைந்துள்ளன. உட்கருவின் செறிவும் எம்மருங்கும் ஒரு படித்தாகவே உள்ளது. இத்துகள்கள் யாவும் மிக இறுகப் பிணைக்கப் பெற்றுள்ளன. நாம் அறிந்த ஆற்றல்கள் அனைத்தி

னும் இவை பிணைந்திருக்கும் ஆற்றல்கள் மிகப் பெரியவை. இந்த ஆற்றலை **உட்கருவின் பிணைப் பாற்றல் (binding energy of the nucleus)** என்று வழங்குவர். இதுதான் நாம் குறிப்பிடும் 'அணுவாற்றல்' என்பது. அணுக்களிலுள்ள எலக்ட்ரான்களுக்கும் அவற்றின் உட்கருக்களுக்கும் இடையேயுள்ள மின்னாற்றலைவிட இவ்வாற்றல் பத்து இலட்சம் மடங்கு பெரியது; வன்மையும் வாய்ந்தது. இந்த ஆற்றலின் இயல்புகளையும் தன்மைகளையும் விளக்கும் பொருட்டு அறிவியலறிஞர்கள் பல கோட்பாடுகளை வெளியிட்டுள்ளனர். ஆயினும், அவற்றுள் ஒன்றாவது இதுகாறும் அறியப் பெற்றுள்ள செய்திகள் அனைத்தையும் விளக்க வல்லது அன்று.

பின்னக் கணக்கு

நீரிய அணுவில் ஒரு புரோட்டானும் ஓர் எலக்ட்ரானும் உள்ளன என்பதை நாம் அறிவோம். எலக்ட்ரானைவிடப் புரோட்டான் 1840 மடங்கு எடையில் பெரியது என்பதும் நமக்குத் தெரியும். இந்த எடையை நோக்க எலக்ட்ரானின் எடையைப் பொருட்படுத்த வேண்டியதில்லை. எனவே, நீரிய அணுவின் எடையும் நீரிய உட்கருவின் எடையும் சமம் என்று கொள்வதில் தவறில்லை. இந்த நீரிய உட்கருவே (அணுக் கருவே) எல்லாவகை அணுக்களுக்கும் அடிப்படை. இந்தக் கருவின் எடை 1·00813 என்று தாராதர எடைக் கணக்கில் கூறப் பெறுகின்றது. இந்தப் பின்ன கணக்கில்தான் உலகமே கட்டுப் பட்டுக் கிடக்கின்றது. இதை ஓர் எடுத்துக் காட்டால் விளக்குவோம். ட்யூட்டொரான் (deuteron) என்பது ஒரு புரோட்டானும் ஒரு நியூட்ரானும் சேர்வதால் உண்டாகும் ஓர் எளிமையான அமைப்பினைக் கொண்ட ஒரு நீரிய உட்கரு. ஒரு புராட்டானின் எடை 1·00813. ஒரு நியூட்ரானின் எடை 1·00895. இவை இரண்டின் மொத்த எடை 1·00813 + 1·00895 = 2·0171 ஆக இருக்க வேண்டும். ஆனால், இவை இரண்டும் ஒன்றாக இணைந்த ட்யூட்டொரானின் எடை 2·0147 தான். எடையில் 0·0024 காணப் பெறவில்லை. பொருண்மையில் 0·0024 எங்கோ மறைந்துவிட்டது. இது 2·2 ஆயிரமாயிரம் எலக்ட்ரான் வோல்ட்டுக்குச் சமம். அஃதாவது, 2,200,000 வோல்ட்டுக்களின் ஆற்றலுக்கு ஈடானது. ஓர் எலக்ட்ரான், ஒரு வோல்ட்டு மின் அழுத்த வேற்றுமையில் (potential difference) செல்லுங்கால் பெறும் ஆற்றலின் அளவுதான் எலக்ட்ரான் வோல்ட்டு என்பது. ஒரு புரோட்டானும் நியூட்ரானும் சேர்ந்து ட்யூட்டொரானாக ஆகும்பொழுது விடுவிக்கப்பெறும் ஆற்றல்தான் இது. மேலே கூறியவாறு இணைந்த இந்த இரண்டு துகள்களையும் பிரிக்க வேண்டுமாயின், அவற்றிலிருந்து விடுவிக்கப் பெறும் ஆற்றலை மீண்டும் அளித்

தாக வேண்டும். அஃதாவது, அணுவின் உட்கருவிலுள்ள துகள்கள் ஒன்றாக இணையுங்கால் எவ்வளவு பொருண்மை குறைகின்றதோ அதற்கேற்ற அளவில் ஆற்றலைப் பயன்படுத்தினாலன்றி உட்கருவினைத் தகர்க்க முடியாது.

ஆல்ஃபா - துகள் என்பது அணு - எண் இரண்டைக் கொண்ட ஹீலியத்தின் (Helium) உட்கருவாகும். இரண்டு புரோட்டான்களும் இரண்டு நியூட்ரான்களும் இணைந்ததால் உண்டானது இது. இவற்றின் பொருண்மையைக் கூட்டினால் மொத்தம் 4·0342 ஆகும். ஆனால், ஆல்ஃபா - துகளின் பொருண்மை 4·0017 தான். ஆற்றலாக உருமாறிய 0·0315 பொருண்மை எங்கோ மறைந்தது. இதற்கு ஈடான ஆற்றலின் அளவு 23,000,000 எலக்ட்ரான் வோல்ட்டு. இந்த அளவு ஆற்றலைப் பயன்படுத்தினாலன்றி அதன் உட்கருவினைத் தகர்க்க முடியாது. ஆதலால்தான் ஆல்ஃபா-துகள் அவ்வளவு நிலைத்த தன்மையைப் பெற்றுள்ளது. கதிரியக்கமுள்ள பொருளின் உட்கரு வெடிக்கும் பொழுது கூட ஆல்ஃபா-துகள் தகர்ந்து போவதில்லை; முழு ஆல்ஃபா-துகளாகவே வெளிவருகின்றது.

மாயமாக மறைந்த ஆற்றல்

ட்யூட்டெரான் கரு அமைப்பிலும் ஹீலியக் கரு அமைப்பிலும் ஆற்றல் மறைந்ததைக் கண்டோமன்றோ? இந்த ஆற்றல் மறைவதற்குக் காரணம் என்ன? ஓடிப் போகும் சிறுவனை ஓடாது தடுத்துப் பிடித்துக் கொள்வதற்கு ஆற்றல் வேண்டுமல்லவா? ஒரே வித நேர் மின்னூட்டமுள்ள துகள்கள் ஒன்றையொன்று வெறுத்துத் தள்ளும் என்பதை நாம் அறிவோம். அணுவின் உட்கருவில் நேர்மின்னூட்டம் பெற்ற புரோட்டான்கள் உள்ளன. இவை ஒன்றையொன்று வெறுத்துத் தள்ளிப் பிய்த்துக்கொண்டு போகாமல் ஒன்றாக இயைய வைத்துத் திரட்ட ஆற்றல் வேண்டும். மறைந்த ஆற்றல் இதற்குச் செலவிடப் பெற்றுள்ளது. இது புரோட்டான்களை அழுத்தி வைத்துக்கொண்டு கிடக்கின்றது.

இதனை இரண்டு எடுத்துக் காட்டுக்களால் விளக்குவோம். இரண்டு காகிதங்களை ஒட்டுவதற்குத் திரவமாகக் கரைத்த கோந்து பயன்படுகின்றது. அவற்றிலுள்ள ஈரம் உலர்ந்ததும் அவை வன்மையாக ஒட்டிக் கொள்ளுகின்றன. அவ்விரண்டு காகிதங்களையும் மீண்டும் தனித் தனியாகப் பிரிக்க வேண்டுமாயின், அவற்றை நனைத்தாக வேண்டும். அஃதாவது, ஆவி உருவத்தில் அவற்றினின்றும் அகன்ற நீரை மீண்டும் அக் காகிதங்களுக்கு அளித்தாக வேண்டும். அவற்றை நனைப்பதற்கு வேண்டிய மிகக் குறைந்த அளவுள்ள நீரே அவ்விரண்டு காகிதங்களையும் ஒட்டுவதற்குப் பயன்பட்ட ஆற்றல் என்று உத்

தேசமாகக் கூறலாம். இதே அளவு நீர் தான் காகிதங்களைக் கோர்த்து ஒட்டினபோது ஆவியாக மாறிற்று. இன்னும் ஓர் எடுத்துக்காட்டு இதனைத் தெளிவாக்கும். காசுக்கடைச் செட்டியார் ஒருவர் நகையை அடமானமாக வாங்கிக் கொண்டு கடனுகப் பணம் தருவதை நாம் அறிவோம். செட்டியாரையும் நகையையும் பிரிக்க வேண்டுமானுல், கடன் வாங்கியவர் கடனுகப் பெற்ற தொகை முழுவதையும் அவருக்குத் திரும்பக் கொடுத்துவிட வேண்டும். எவ்வளவுக் கெவ்வளவு அடமானத் தொகை பெரியதாக உள்ளதோ, அவ்வளவுக்கவ்வளவு அவர் தம் கைக்கு வந்து சேர்ந்த நகையை விடாப்பிடியாகப் பிடித்துக்கொண்டிருப்பார். இங்கே செட்டியாரையும் நகையையும் பிணைத்த ஆற்றல் பணம். அதுபோலவே, அணுவின் உட்கருவில் துகள்களைப் பிணைத்த ஆற்றல் தான் மறைந்த ஆற்றல். இங்ஙனம் மறைந்த ஆற்றல்தான் அணுகுண்டின் திருவிளையாடலில் பங்கு கொண்டது. ஹிரோ ஷீமா, நாகஸாகி என்ற ஜப்பான் நகரங்களை நாசமாக்கியது. பின்னக் கணக்கில் எழுந்த அணுகுண்டு இரு நகரங்களைச் சின்னு பின்னப் படுத்தி விட்டது!

அணுவின் உட்கருவினின்று வெளிப்பட்ட ஆற்றலை மக்கள் 'அணுவாற்றல்' எனத் தவருக வழங்கி விட்டனர்; அப்பெயரே வழக்கத்திலும் வந்து விட்டது. இப்புதிய ஆற்றலை மெக்ஸிகோ பாலைவனத்தில் முதல் முதலாக வெளிப்படுத்தி அதன் அளவற்ற அழிக்கும் திறனை அறிந்தனர். 1945-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 16-ஆம் நாள் இச்சோதனை நடைபெற்றது. பல டன் எடையுள்ளதும் ஆறரை ஃபர்லாங் குறுக்களவு உள்ளதுமான ஒரு வட்ட வடிவமான எஃகுக் கோபுரத்தின்மீது அணுகுண்டை வீழ்த்தி 'சர்வ சம்ஹார ஒத்திகையை' நடத்தினர் அமெரிக்கர்கள். விளைவு என்ன? எஃகுக் கோபுரம் பொடிப் பொடியாகப் போய்க் காற்றில் பறந்து விட்டது. மணல் உருகிக் கண்ணுடியாக மாறி விட்டது. அதே ஆண்டு ஆகஸ்டு 6-ஆம் நாள் ஹிரோ ஷீமாவிலும், அடுத்த மூன்று நாட்கள் கழித்து நாகஸாகியிலும் இந்த 'ஊழிக் கூத்து' நடைபெற்றது. இப்பொழுது நாம் இவ்வுலகின் 'தலை எழுத்து' அணுகுண்டில் அடங்கியுள்ளது என்பதை அறிகின்ருேம்.

குறளின் சிறப்பைக் கூறவந்த ஔவையார், மாந்தர் உள்ளும் கருத்துக்கள் யாவும் குறளில் அடங்கியுள்ளன என்பதை,

'அணுவைத் துளைத்துஏழ்
கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்.'

என்று கூறிப் போந்தார்; அணுவைப் பொறுத்த மட்டில் இஃது உண்மையாகிவிட்டது

—"கல்லூரி"

கல்வெட்டு கூறும் கருத்து

நாவலர் நெடுஞ்செழியன், எம். ஏ., எம். எல். ஏ.

தமிழ்நாட்டில் ஆங்காங்குள்ள கோயில்களின் சுவர்களிலும், பாறைகள் மீதும், கல்தூண்களிலும், குகைகளின் உட்புறங்களிலும் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். அப்படி எழுதியிருப்பதைத்தான் 'கல்வெட்டு' அல்லது 'சிலாசாசனம்' என்று அழைக்கின்றனர்.

எழுத்துக்கள் செதுக்கப்பட்ட கற்கள் காணப்படுவதைப் போலவே, எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட செப்புத் தகடுகளும் தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்தும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவற்றைச் 'செப்பேடுகள்' என்று செப்புவர்.

பண்டைத் தமிழரின் வரலாற்றுக் குறிப்புகளையும், நாகரிகச் செம்மையையும், பண்பாட்டு உயர்வையும் பழக்க வழக்க உண்மையையும் அங்கொன்றும் இங்கொன்றுமாக அறிந்துகொள்வதற்கு இந்தக் கல்வெட்டுக்களும், செப்பேடுகளும் பெரிதும் பயன்படுகின்றன.

தமிழகத்தில் மிகப் பழமையான கல்வெட்டுக்களாகக் கருதப் படுபவை நடுகற்களேயாகும். பண்டைத் தமிழகத்தில் அஞ்சா நெஞ்சுடன் போர்க்களத்தில் நின்று போரிட்டு, விழுப்புண் ஏற்றுப் போர்க்களத்தில் வீழ்ந்தவர்களுக்கு நடுகல் நடுதல் என்னும் ஒரு பழக்கம் இருந்து வந்தது. வீரன் வீழ்ந்த இடத்திலோ அல்லது வேறோர் பொருத்தமான இடத்திலோ தூண் வடிவில் கருங்கல்லை நட்டு, அந்தத் தூணில் வீரனின் பெயரையும், அவனது புகழையும் பொறித்து வைப்பார்கள். அப்படிப்பட்ட கற்களே நடுகற்கள் என்று வழங்கப்பட்டன. நடுகல்லை நடுவதற்கு முன்னால், அந்தக் கல்லை நல்ல நீரில் நீராட்டுவர் என்பதும், அந்தக் கல்லுக்கு மயிற்பீலியையும், மலர் மாலைகளையும் சூட்டி அழகு செய்து மகிழ்வர் என்பதும் சங்க காலச் செய்யுட்களால் அறியப் படுகின்றன.

'நல்லமர் கடந்த நாணுடை
மறவர்
பெயரும் பீடும் எழுதி அதர்
தொறும்
பீலிசூட்டிய பிறங்குநிலை
நடுகல்'

[நல்ல போரிலேவென்று, தோல்விக்கு எப்பொழுதும் நாணும் தன்மைகொண்ட வீரர்களின் பெயரும், புகழும் எழுதப் பெற்று, வழிகள்தோறும் மயிற்பீலி சூட்டப் பட்டனவாய் விளங்குகின்ற நிலைபெற்ற நடுகல்]

என்ற அகநானூற்றுப் பாடலும்,

'அணிமயிற்பீலி சூட்டிப் பெயர்
பொறித்
தினி நட்டனரே. கல்லும்

[அழகிய மயிற்பீலி சூட்டப் பெற்றுப், பெயர் பொறிக்கப் பட்ட கல்லை இனிது நாட்டினர்] என்று புறநானூற்றுப் பாடலும் குறிப்பிடுகின்றன.

சங்க காலத்திற்குப் பின்னரும் சிறிது காலம் நடுகல் நடும் வழக்கம் தமிழகத்தில் இருந்துவந்திருக்கிறது என்பது திருவாரூர் மும்மணிக்கோவை போன்ற நூல்கள் மூலம் தெரியவருகின்றது. சமண முனிவர்கள் நோன்பு இருந்து உயிர் துறந்த குகைகளிலும், பள்ளிகளிலும், பாறைகளிலும் அவர்களுடைய மாணாக்கர்கள், அந்த முனிவர்கள் பற்றிய செய்திகளைச் செதுக்கி வைத்துள்ளனர்.

வடநாட்டில் மிகப் பழமையான கல்வெட்டுக்களாகக் காணப்படுபவை, அசோக மன்னனின் கல்வெட்டுக்களேயாகும். இவை கி. மு. மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்தவைகளாகும். ஏறத்தாழ அதே காலத்தில், தமிழகத்தில், குகைகளில் பொறிக்கப்பட்ட எழுத்துக்களே பழமையான கல்வெட்டுக்களாகக் கருதப்படுகின்றன. இந்தக் குகைகளில் அந்தக் குகைகளைச் செய்வித்தவர்களின் பெயர்களும், அவற்றில் வாழ்ந்து வந்தவர்களின் பெயர்களும் தென்படுகின்றன. இவை நினைவுச் சின்னங்களாகக் கொள்ளப்படுகின்றன. இடபடிப்பட்ட குகைக் கல்வெட்டுக்கள் தமிழகத்தில் திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுரம், திருச்சி ஆகிய மாவட்டங்களிலும், ஆந்திராவில் நெல்லூர் மாவட்டத்திலும் காணப்படுகின்றன.

இந்தக் குகைக் கல்வெட்டுக்களில் காணப்படும் எழுத்துக்களைப் போன்றவைகள் புதுச்சேரிக்கு அடுத்த அரிக்கமேட்டில் தோண்டி எடுக்கப்பட்ட மட்பாண்ட ஓடுகளின் மேல் காணப்படுகின்றன.

தென் இந்தியக் கல்வெட்டுக்களில் பலவகையான எழுத்துக்கள் தென்படுகின்றன. தமிழ், தெலுங்கு, கன்னடம், பிராமி, பிராமியும் தமிழும் தழுவித் தோன்றிய கிரந்தம், பிராக்கிருதம், சமஸ்கிருதம் போன்ற பல வகை மொழிகள் கல்வெட்டுக்களில் கையாளப் பெற்றிருக்கின்றன.

பல்லவ மன்னனாகிய மகேந்திர வர்மன் செங்கல், சுண்ணம், கனி, மரம் ஆகியவைகளைப் பயன்படுத்தாமலேயே கருங்கற்களைக் கொண்டே கோயில் கட்டி முடித்த அவனின் பொறியியல் திறனைப் புகழ்ந்துரைக்கும் கல்வெட்டு ஒன்று விழுப்புரத்திற்கு அருகிலுள்ள மண்டகப்பட்டு குகைக் கோயிலில் காணப்படுகிறது. அது கிரந்த எழுத்துக்களால் செதுக்கப்பட்டுள்ளது.

மகேந்திர வர்மனுக்குப் பின் அரசாண்ட நரசிம்மவர்மன் சாளுக்கியரின் தலைநகராயிருந்த வாதாபி நகரை வென்ற வெற்றிச் செய்தி அந்நகரிலுள்ள கல்வெட்டு ஒன்றில் கிரந்த எழுத்துக்களால் பொறிக்கப்பட்டுள்ளது.

எட்டு, ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த பாண்டிய மன்னரும், சேர மன்னரும் வட்டெழுத்து என்னும் ஒருவகைத் தமிழ்த் தொடர் எழுத்துக்களைக் கல்வெட்டுக்களில் பயன்படுத்தி வந்திருக்கின்றனர். சோழர்களின் கல்வெட்டுக்களில் கிரந்தம், தமிழ் ஆகிய இருவகை எழுத்துக்களும் கையாளப் பெற்றிருக்கின்றன. கிரந்த எழுத்தில் எழுதப்பட்ட சில சமஸ்கிருத கல்வெட்டுக்களும் சோழர் காலத்தியனவாகக் காணப்படுகின்றன.

பிற்காலச் சேர, சோழ, பாண்டியர் காலத்திய கல்வெட்டுக்கள் தமிழகமெங்கணும் கணக்கற்றனவாகக் காணப்படுகின்றன. அவை தமிழகத்தின் பல்வேறு காலத்திய நாகரிகம், பண்பாடு, பழக்க வழக்கம் போன்ற பல்வேறு செய்திக் குறிப்புக்களைத் தரும் களஞ்சியங்களாக விளங்குகின்றன. அவற்றில் பல கல்வெட்டுக்கள் அழகிய இனிய எளிய செந்தமிழில் செய்யுள் நடையில் எழுதப்பட்டிருக்கின்றன. அவை தமிழகத்தின் இலக்கியச் செல்வங்களில் தனிச் சிறப்பு வாய்ந்த ஒரு இனமாகக் கருதப்படுகின்றன. சிறந்த கலைச் சொற்கள் கல்வெட்டுக்களில் கையாளப்பட்டிருக்கின்றன.

கல்வெட்டுக்களில், பல கோயில்களுக்கும், புலவர்களுக்கும், பாணர்களுக்கும் கூத்தர்களுக்கும், பிற தனிப்பட்டவர்களுக்கும் நிலம், ஆடு, மாடு, விளக்கு போன்றவைகளை மான்யமாகவும், பணத்தை நன்கொடையாகவும் அளித்த செய்திகள் கூறப்பட்டுள்ளன. கல்வெட்டுக்களின் படிகள் பனையேடுகளிலோ, செப்பேடுகளிலோ எழுதப்பட்டு அரசினின் இலச்சினையுடன் கொடை பெற்றோர்க்கு வழங்கப்பட்டன என்று தெரியவருகிறது.

கோயில்கள் புதுப்பிக்கப்பட்டபோது அவற்றின்சுவர்களிலுள்ள பழைய கல்வெட்டுக்கள், புதிய சுவர்களிலும் பொறிக்கப்பட்டன. சோழ அரசி செம்பியன் மாதேவி திருக்கோடிக்கா கோயிலில் ஆங்காங்குச் சிதறிக் கிடந்த கல் வெட்டுக்களையெல்லாம் ஒன்று சேர்த்து, அந்தக் கோயிலின் விமானத்தில் மீண்டும் அவற்றைச் செதுக்கச் செய்தாள் என்று கூறப்படுகின்றது.

திருமயத்திற்கு அருகிலுள்ள குடுமியாமலையில் கல்வெட்டுக்களில் இசைக் குறியீடுகளுள்ள பல்லவ கிரந்த எழுத்துக்கள் தென்படுகின்றன. இவற்றைப் போன்ற கல்வெட்டுக்கள் திருமயம் கோவிலிலும் இருந்திருக்கின்றன.

சோழ மன்னர்களின் கல்வெட்டுக்களில் பல ஆந்திர, கருநாடக, கேரள மாநிலங்களிலும் காணப்படுகின்றன. அவை தமிழ், கிரந்தம், தெலுங்கு, கன்னடம் முதலிய மொழிகளில் அமைந்திருக்கின்றன.

கல்வெட்டுக்களில் வரலாற்றுச் செய்திகள் சில தெளிவாகக்

குறிக்கப் பெற்றுள்ளன. பாறைக் கல்வெட்டு ஒன்று நரசிம்மவர்மன் வாதாபியில் வெற்றித் தூண் நாட்டிய செய்தியைக் கூறுகிறது. இரண்டாம் இராசாதிராசன் காஞ்சிபுரத்தை வென்று இராசசிம்மேசுவரர் கோயிலுக்குப் பொன் வழங்கிய செய்தியை மற்றொரு கல்வெட்டு தெரிவிக்கிறது.

இலக்கியச் சிறப்புமிக்க கல்வெட்டுக்கள் சில ஆங்காங்கு காணப்படுகின்றன. திருச்சிமலைக் கோட்டையிலுள்ள கல்வெட்டு ஒன்றில் 100 அந்தாதிக் கலித்துறைச் செய்யுட்கள் பொறிக்கப் பட்டுள்ளன. தஞ்சை மாவட்டத்திலுள்ள திருவிடைவாயில் கோவிலின் சுவர்களில் திருஞான சம்பந்தரின் அரிய தேவாரப் பாடல்கள் செதுக்கப்பட்டுள்ளன. திருப்பதிக் கோயிலிலுள்ள செப்பேடுகள் பலவற்றில் இசைப் பாடல்கள் செதுக்கப் பட்டுள்ளன.

செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள உத்திரமேரூர் கல்வெட்டு ஒன்று ஊராட்சி மன்றத் தேர்தல் முறையை விரிவாக விளக்கிக் கூறுகிறது.

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் ஜம்பை என்னும் ஊரிலுள்ள கல்வெட்டு சட்டவியல் பற்றிக் கூறுகின்றது.

திருவரங்கம் கோயிலிலுள்ள கல்வெட்டு ஒன்று கோயில் நிருவாகம் பற்றிய செய்தியைத் தெளிவாகக் கூறுகிறது.

தஞ்சைப் பெரிய கோயிலிலுள்ள இராசராசன் கல்வெட்டில், நிலவரி விதிப்பதற்காக ஒரு வேலியில் பத்து லட்சத்துக்கும் குறைவான நிலத்தையும் அளவிட்டதாகக் கூறப்படுகிறது.

தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள எண்ணாயிரம், சென்னையை அடுத்த திருவொற்றியூர், சோளிங்கபுரம், தஞ்சை மாவட்டத்திலுள்ள திருக்களித்திட்டை, செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள திருக்கச்சியூர் முதலிய இடங்களிலுள்ள கல்வெட்டுக்கள் கல்வி நிலையங்களைப் பற்றிய பல குறிப்புக்களைத் தருகின்றன.

செங்கற்பட்டு மாவட்டத்தில் திருமுக்கூடலிலுள்ள கல்வெட்டு ஒன்று, கல்விச் சாலைகளைப் பற்றியும், மருத்துவர்கள்-இரண மருத்துவர்-இரு சேவகர்-இரு சேவகியர், மருந்துகள் ஆகியவையுடன் கூடிய மருத்துவ சாலையைப் பற்றியும் குறிப்பிடுகின்றது.

மன்னர்கள், வாய்க்கால்கள், கால்வாய்கள், கிணறுகள், குளங்கள், ஏரிகள் வெட்டி நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கிய செய்திகள் பல கல்வெட்டுக்களில் குறிக்கப்பட்டிருக்கின்றன. அவை அக்காலத்திய பொறியியல் அறிவைத் தெளிவுபடுத்துவனவாக இருக்கின்றன.

குண்டூர் மாவட்டத்தில் மோட்டுப்பல்லியிலுள்ள கல்வெட்டு, கணபதி தேவன் என்

32-ஆம் பக்கம் பார்க்க

சுவை மிகுந்த நிகழ்ச்சிகள்

பிரிஜிட் பார்டாட் என்ற புகழ் பெற்ற ஹாலிவுட் நடிகை ஒரு சமயம் விடுமுறையைக் கழிக்க ஸ்பெயின் நாட்டுக்குச் சென்றிருந்தார். ஒருநாள் மிகக் குறைவான உடையணிந்து கடற்கரையில் நீச்சலடிக்கப் புறப்பட்டார்.

ஒரு போலிஸ்காரர் அவரை நெருங்கி, "அம்மணி, தங்கள் உடைகளில் சில, ஆட்சேபகரமானவை." என்ருர்.

பிரிஜிட் பார்டாட் ஒரு மயக்குப் புன்னகையுடன், "அப்படியா! எந்த உடை ஆட்சேபகரமாயிருக்கிறது? சொல்லுங்கள். கழற்றி எறிந்து விடுகிறேன்," என்று பதிலளித்தார்.

❊

உங்கள் முகம் ஒரே சீரானது என்று நினைத்துப் பெருமைப்பட வேண்டாம். எந்த மனிதருடைய முகமும், ஒரு பாதியை விட மறுபாதி சிறிது உயரமாக இருக்கும்.

❊

விஸ்லர் என்ற பிரசித்தி பெற்ற ஓவியருக்கு, போரடிக்கும் ஜனங்களைக் கண்டால் பிடிக்காது. வெடுக்கென்று ஏதாவது சொல்லிவிடுவார்.

ஒருமுறை ஒரு 'போர்' பேர்வழி, அவரிடம், "நேற்று நான் உங்கள் வீட்டு வாசல் வழியாகப் போனேன்," என்ருர்.

விஸ்லரின் பதில்: "ரொம்ப நன்றி—உள்ளே நுழையாமலிருந்ததற்காக!"

❊

க்ரூடன் என்ற டைபிள் அறிஞர், கையில் எப்போதும் ஓர் ஈரத் துணியுடன் தான் வெளியே செல்வார். சுவர்களில், ஆபாசமாக என்ன இருக்கப்பட்டிருந்தாலும் உடனே நின்று அதை அழித்து விட்டுச் செல்வார். அதற்காகவே அந்த ஈரத் துணி.

❊

மின்சார ரயிலில் தினசரி பிரயாணம் செய்யும் வழக்கமுள்ள ஒரு தனவந்தர் இருந்தார். ஸ்டேஷன் வாசலில் ஒரு பூக்காரக் கிழவி தினமும் அவரிடம் பூவை நீட்டுவாள். அவரும் தாராள மனத்துடன் பத்துப் பைசா கொடுத்துவிட்டுப் போவார். ஆனல் பூ வாங்கிக் கொள்ளமாட்டார்.

ஒருநாள் அந்தக் கிழவி காசை வாங்கிக்கொண்டு, "சாமி... வந்து..." என்று வாயெடுத்தாள்.

தனவந்தர், "பரவாயில்லை. சும்மா வைத்துக்கொள். எனக்குப் பூ வேண்டாம்." என்ருர்.

"அதில்லேங்க...பூ விலே ஏறிப் போச்சு...இனிமேல் பதினைந்து பைசா கொடுங்க" என்ருள் கிழவி,

❊

இலக்கியக் கலை

திருமதி நா. சக்திவேல், எம். ஏ.

சிந்திக்கும் திறனுடையவன் மனிதன். சிந்தனையின் விளைவுகளை அழகொழுகும் தீஞ்சுவைக் கவிதைகளில் வடித்தெடுப்பவன் கவிஞன். தான்கொண்ட கருத்துக்களைக் கற்பனையுடன் இணைத்துப் பின்னி காவியமாலையாக மாற்றிவிடும் கைவண்ணம்கொண்டவன் அக்கலைஞன். உள்ளம் என்னும் உலையில் பொங்கியெழும் உணர்ச்சிகளுக்கு உயிரூட்டி ஓவியமாக உருவாக்கும் ஆற்றல் பெற்றவன் அவன். சிறகடித்துப் பறக்கும் சிட்டுக்குருவி உள்ளம் கொண்ட அவன் தன்னை உலகம் போற்றினும் புறக்கணிப்பினும் பொருட்படுத்துவதில்லை. பாடுதற்குப் பைந்தமிழ் உண்டு. பழகு தமிழருமை உணர்ந்து உவப்பதற்கு நெஞ்சமுண்டு; வையத்துத் தாழ்வெல்லாம் மறந்து வானம்பாடியாய் உலவுதற்கு உள்ளத்து ஊன் உண்டு என்று இறுமாக்கும் திறனுண்டு அவனுக்கு. இத்தகைய விந்தையான கலைஞர்கள் படைத்தளித்துள்ள இலக்கியங்கள் எண்ணற்றவை நம்மிடையே உண்டு.

வாழ்க்கையின் படப்பிடிப்பை, வார்த்தைகளில் வனைந்துள்ள ஓவியத்தை, காலத்தை வென்று, கருத்தொளி பரப்பி வரும் கலங்கரை விளக்கத்தை, நாம் இலக்கியம் என்று கூறுகிறோம். கவிஞன் ஒருவன் தான் வாழ்நாள் முழுவதும் கண்டவற்றைக் கேட்டவற்றை விழுங்கி, அசைபோட்டுச் சேர்த்துப் பின்னர் தேவையான காலத்தில் சிந்தித்து உருவாக்குவதுதான் இலக்கியம். இதனை வாழ்வியலின் திறனாய்வு என்றும் நாம் கூறலாம். வாழ்வியல் என்பது 'இன்பமும் துன்பமும் கொண்டு இலங்குவது. வாழ்வியலில் உணர்ச்சிகளின் போராட்டத்தைக் காணலாம். உணர்வின் உயர்வையும் காணலாம். உணர்வின் இமயத்தில் நின்று, உணர்ச்சிகளை வலையிட்டுப் பிடித்து வாரியிறைப்பவன் கலைஞன். உணர்ச்சிகளைச் சிந்தனையில் தேக்கிவைத்து, சிற்றுளியின் முனை வழியே கரடுமுரடான கல்லிலே பாய்ச்சிக் கவினுறு சிலைகளாக மாற்றித் தருகிறான் அக்கலைஞன். இதனைச் சிற்பக்கலை என்கிறோம்; தேக்கி வைத்த எண்ணங்களுக்கு மெருகூட்டிக் கற்பனையில் கண்டு களித்து அக்காட்சியைத் தூரிகையின் நுனியால் தேய்த்து உருவாக்கினால் அதனை ஓவியக்கலை என்கிறோம். கவிஞனும் காவிய ஆசிரியனும் அன்றாடம் காணும் காட்சிகளை ஆய்ந்து தெளிந்து பண்ணோடு இயன்ற பா வடித்துக் கொடுத்தால், அதனை இலக்கியம் என்கிறோம்.

இதனாலேயே சிறந்தவொரு இலக்கியம் என்பது கவிஞன் ஒருவனின் வாழ்நாளின் உயிர்த் துடிப்பு' என்றனர் அறிஞர்கள். கவிஞன் ஒரு பொருளைக் காணும்போது அப்பொருளோடு பொருளாக ஒன்றிவிடுகின்றான். காக்கையைக் காணும்போது, தானும் காக்கையாக மாறிக் கரைந்துண்ணுகிறான். அருகே வரும் காக்கைகளுடன் உறவாடி, உரையாடி மகிழ்கிறான். பல்லோரோடும் பகுத்துண்டு வாழ்தலின் சுவை அறிகிறான். தான் அழைத்தது போலவே மற்றக் காக்கைகளும் தன்னை அழைத்து உணவூட்டுவதைக் காண்கிறான். உண்டு மகிழும் நேரத்தில் அக் காட்சி மறைகிறது; மற்றொரு காட்சி தோன்றுகிறது. அடுத்த தெருவில் வாழ்ந்து வரும் அரசப்பர் பெருஞ் செல்வத்துக்கு அரசர். உடல் உழைப்பின்றியே பகற் கொள்ளையிட்டே பல நூறாயிரம் திரட்டியவர். என்றும் திறவாத வாயிலை உடையவர். இல்லையென்று தவித்து ஏங்கி வருவோரை எட்டி உதைத் தனுப்பும் ஏற்றம் கொண்டவர். இவ்வரசப்பர் இன்று ஆண்டியப்பராக மாறித் திண்டாடித் திரிவதைக் கவிஞனின் கண்கள் காண்கின்றன. உற்றார் உறவினரின் உதவியின்றி, அன்பின் பிணைப்பின்றி அவதியுறுகிறார் ஆண்டியப்பர். கிடைத்ததை பகிர்ந்துண்ணும் காக்கைகளின் நிலையைக் கண்ட கவிஞன் அவருடைய நிலையையும் காண்கிறான். உள்ளம் இரண்டு காட்சிகளையும் இணைத்துக் காண்கிறது. உள்ளத்திலே கருத்தொளி தோன்றுகிறது. "காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும் அன்ன நீரார்க் கேயுள" என்னும் குறள்வடிவாக வெளிவருகின்றது. இவ்வாறு கருத்துக்களின் செறிவுங்கற்பனை வளமும் கொண்டு அறிவும் இன்பமும் ஒருங்கே பயப்பதாய் அமைவதே இலக்கியத்தின் இயல்பாகும்.

இத்தகைய இலக்கியங்கள் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழகத்தில் தோன்றி விட்டன. இன்றுவரை அவை குன்றா ஒளியுடன், மங்காப் புகழுடன் மக்கள் உலவிவர மக்களுக்கு இன்பப் பூங்காவாய் இலங்கிவருகின்றன. சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் என்பது ஒரு அரிய கலை. இக்கலையைக் கையாண்டு வெற்றி பெற்றவர்கள் பண்டைத் தமிழ்ப்புலவர்கள். இக்கவிஞர்கள் இலக்கியத்தில் பதிக்கும் ஒவ்வொரு சொல்லும் பட்டைத் தீட்டப் பெற்றது. உயிரோட்டம் பெற்றது சான்றாக ஒரு பாடலைக் காண்போம்.

கவிஞர் ஒருவர் ஒவ்வொரு இல்லத்திற்கும் சென்று உற்று நோக்கி வருகிறார். மகிழ்வு நிரம்பிய இல்லத்தைக்காண விரும்புகிறார். அதோ ஒரு செல்வரின் மாளிகை தெரிகிறது. அம்மாளிகை என்றும் விழாக்கோலம் பூண்டு நிற்கிறது. ஒவ்வொரு நாளும் விருந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கலகலவென நகைத்துக் கூட்டம் கூட்டமாக

நண்பர்குழாம் வந்து சென்று கொண்டிருக்கின்றனர். அந்த இல்லத்தின் தலைவனைக் காணா தொதுங்கி நிற்கின்றார் புலவர். விருந்தினரை வரவேற்பதில் ஈடுபட்டுள்ள அத்தலைவரைக் காணும் வாய்ப்பு ஏற்படுகிறது அவருக்கு. தலைவனின் மலர்ந்த முகத்தைக் காண்கிறார். ஆனால் கவிஞருக்கோ மன நிறைவு ஏற்படவில்லை.

மற்றொரு இல்லத்தை நாடி நடக்கிறார். இன்பம் பொங்கும் எழில் மனை ஒன்று காட்சி அளிக்கிறது. எளிய சூழலைக் கொண்டதுதான் அது. உள்ளே அந்த இல்லத் தலைவன் உணவருந்திக் கொண்டிருக்கிறான். அதுவா கவிஞரின் உள்ளத்தைக் கவர்ந்தது? இல்லை. கொள்ளையின்பம் அள்ளித்தரும் மழலைச் செல்வம் ஒன்று அவ்வில்லத்தில் ஒளியூட்டுவதைக் காண்கிறார் கவிஞர். குறுகுறுவென நடைபயின்று வருகிறது அம்மனிதப் பிஞ்சு. தன் சின்னஞ்சிறு செல்லக் கைகளை நீட்டி, பொக்கை வாயை மலர வைத்து, அதனுள்ளே அப்பொழுதுதான் முளைத்தெழும் ஒன்றிரண்டு வெண்முத்துக்களைக் காட்டித் தந்தையை நோக்கி வருகிறது. கருமமே கண்ணாயின தந்தையைப் புதுமை நோக்கும் புன்னகையுடன் உற்றுப் பார்க்கிறது. மெதுவாக அருகில் அமருகிறது. கலத்தினுள் உள்ள உணவு தந்தையின் வாய்க்குள் செல்லும் விந்தையைக் கண்களால் விழுங்குகிறது. தன்னையறியாமலேயே நா சப்புக்கொட்டுகிறது. தந்தை தருவாரென எதிர்பார்க்கிறது; பயனில்லை. பொறுமை இழக்கிறது அப்புத்தம் புது மலர். திருட்டு விழியுடன் மெதுவாகக் கலத்தினுள் கையை இடுகிறது; தொடுகிறது; அளைகிறது. கலத்திலுள்ள எல்லாவற்றையும் மழலையூறும் தன்பவளச் செவ்வாயினுள் திணிக்க நினைக்கின்றது. பிஞ்சு விரல் களிடையே சிக்கிய நெய்யுடை அடிசிலைத் தன் வாய்க்குள் கொண்டு போவதாக நினைத்துக் கன்னத்தில் பரப்புகிறது. தப்பித்தவறி உள்ளே சென்ற ஒரு சோற்றுப் பருக்கையினைச் சுவைத்து உண்கிறது. சோறாடிய கோலத்துடன் சிரித்து மகிழ்ந்து தந்தையை நோக்குகிறது. தந்தையின் வாயில் ஊட்டினால் என்ன என்ற எண்ணம் அதன் உள்ளத்தே முளைத்தெழுகிறது. மழலையென்னும் இன்பத் தேனைப் பெய்தவாறே, தந்தைக்கு ஊட்ட முனைகிறது. தந்தை உணவு உண்ணுதலை மறக்கின்றான். மயங்கி இருக்கின்றான். குழந்தையின் செயலை எண்ணி மெய்மறக்கின்றான். குழந்தையை வாரி அணைத்து மகிழ்கின்றான். இக்காட்சியைக் கண்டு நின்ற கவிஞர் மனநிறைவுடன் அவ்விடத்தை விட்டு நீங்குகிறார். பலரோடு உண்டு மகிழும் செல்வத்தை உடையவனாயினும் இத்தகைய இன்பத்தைப் பெறாவிடின் அச் செல்வத்தால் என்ன பயன் என்று நினைக்கிறார். அவர் கைகள் எழுத்தாணியைப் பிடித்து இக்கருத்தை வையத்துக்கு வழங்குகின்றன.

"படைப்புப் பலபடைத்துப்
பலரோ டுண்ணும்
உடைப் பெரும் செல்வரா
யினும் இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை
நீட்டி
இட்டும் தொட்டும் கவ்வியும்
துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட
விதிர்த்தும்
மயக்குறு மக்களை யில்
லோர்க்குப்
பயக்குறைவில்லைத் தாம்
வாழும் நாளே"

என்ற பா உருவாகிறது. இத்தகைய பாக்கள்பல சங்க இலக்கியங்களில் ஏற்றத்துடன் இடம் பெற்று எண்ணற்ற காலம் இன்பம் ஊட்டி வருகின்றன.

வஞ்சகப் புகையில் சிக்குண்டு மயங்கிக் கிடக்கும் மக்களைத் தட்டி யெழுப்புகிறது இலக்கியம். பழமையை எடுத்துக் காட்டிப் புதுமையை வகுக்கத் தூண்டுகிறது. தன் பழம் பெருமையை மறந்து நிலைமறந்து நிற்கும் தமிழ் மக்களிடையே பண்டைக் கவிஞர்கள் வருகிறார்கள். பழமையை நினைவூட்டுகிறார்கள்.

முப்பதுகோடி மக்கள் பேசி மகிழ்ந்த மொழி—மூன்று கோடி மக்களின் மொழியாய் தனக்கென ஒரு நாடின்றி, அரசின்றி, நானிலத்திலும் நசுக்குண்டு தவிப்பதையும் எடுத்துக் காட்டுகிறது. இடையில் வந்த வீழ்ச்சியை எடுத்துக்காட்டித் தட்டி யெழுப்புகிறது. தமிழன் என்ற உணர்ச்சி பெறு என்று எடுத்தியம்புகிறது.

இத்தகைய இலக்கியங்கள் மக்கள் மன்றத்திலே உலவி, மக்கள் நாவில் நடமாடி, உள்ளத்தில் உறைவிடம் பெற்று, உணர்ச்சிகளுக்கு உயிரூட்டும் நிலை வருதல் வேண்டும். வள்ளுவமும் சிலம்பும் மக்களின் வாழ்க்கை வழிகாட்டிகளாக அமைய வேண்டும். என்றும் அழியாது நின்று இலங்கும் இலக்கியங்கள் மக்கள் வாழ்க்கையின் ஒளியூட்டத் துவங்கினால் நாடு நலம்பெறும் என்பதில் ஐயமில்லை.

—**மதுரை எழுத்தாளர் மன்ற ஆண்டு விழா மலர்.**

28ம் பக்கத் தொடர்ச்சி

னும் அரசன் கப்பல் வாணிகப் பண்டங்களுக்கு வரிவிலக்கு அளித்து, அவற்றிற்குப் பாது காப்பு தந்த செய்தியைக் கூறுகின்றது.

சுமத்திராவிலுள்ள 11-ஆம் நூற்றுண்டுத் தமிழ்க் கல்வெட்டு ஒன்று, தமிழ் வாணிகக் குழு பற்றிய செய்தியைச் செப்புகிறது. தமிழ்நாட்டு வாணிகம் கடல் கடந்து சென்று சிறப்புற்று விளங்கியிருந்தமைக்கு இது தக்க சான்று பகரும்.

கோயில்களிலுள்ள பல்வேறு கல்வெட்டுக்கள் நாடகம், நடனம், கூத்து, இசை, ஓவியம் போன்ற பல கலைகளைப் பற்றிய குறிப்புக்களைத் தருகின்றன.

தமிழக மக்கள் பண்டைக்காலத்திலும், இடைக் காலத்திலும்எங்கள் துறைகளில் சிறப்புறமுன்னேறியிருந்தனர் என்பதைஅறிந்து கொள்ள கல்வெட்டுக்கள் உறுதுணைபுரியும். - **"திராவிடன்"**

எழுத்துக் கலை

முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம்

"மின்னுவதெல்லாம் பொன்னல்ல" என்பதைப் படித்திருக்கிறோம். "வெளுத்ததெல்லாம் பாலல்ல" என்பதைப்பார்த்திருக்கிறோம். "பேசுவதல்லாம் பேச்சல்ல" என்பதைக் கேட்டிருக்கிறோம். "எழுதுவதெல்லாம்எழுத்தல்ல"என்பதையும் அறிந்திருக்க வேண்டும்.

எழுதிக் கொண்டிருப்பவர் எழுத்தர். எழுத்தைக் கையாள்பவர் எழுத்தாளர். எழுத்தை அறிந்தாள்பவர் எழுத்தறிஞர். நூறு எழுத்தரில் ஓர் எழுத்தாளரையும், நூறு எழுத்தாளரில் ஓர் எழுத்தறிஞரையும் காணலாம். எழுத்தரும், எழுத்தாளரும் எழுத்தறிஞராக மாறுவது நாட்டிற்கு நல்லது.

"இலக்கணம்" என்பது சட்டம்; வரம்பு. இது யாருக்குத் தேவையில்லாவிடினும், எழுத்தாளர்க்குத் தேவையான ஒன்று. "எழுத்தாளனுக்கு இலக்கணம் தேவையில்லை" எனக் கூறுபவர்கள் தமிழகத்திற்குத் தேவையில்லாதவர்கள்.

பேசுவதுபோல எழுதுவது தவறு. அவ்வாறுதான் எழுத வேண்டும் என்பது ஒரு தவறான கருத்து. தமிழகத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலுள்ளவர்கள் ஒவ்வொருவகையாகப்பேசுகிறார்கள். அதிலும் ஒவ்வொரு பிரிவினரும் வெவ்வேறு வகையாகப் பேசி வருகின்றனர். இவர்களில் "யார் பேசுவது போல?" எனக் கேட்டால், விடையே வராது. பேச்சுக்கலை வேறு! எழுத்துக்கலை வேறு. இரண்டும் ஒன்றாக வேண்டும் என விரும்புகிறவர்கள் "பேசுவதைப் போல எழுதுங்கள்" எனக் கூறாமல், 'எழுதுவதைப் போலப் பேசுங்கள்" எனக் கூறுவது நலமாகும்.

சிறந்த எழுத்தாளர்களால் எழுதப் பெறும் எழுத்து நன்னிலத்தில் விளைந்த நெல் போன்றது. மற்றது களர் நிலத்தில் விளைந்த பதர்போன்றது. நெல்லைத் தேய்த்து உமியை ஊதிவிட்டால் அரிசிகாணப்படுவதுபோல, எழுத்தைப் படித்து நீக்கிவிட்டால் கருத்து காணப்பட வேண்டும். கருத்து இல்லாத எழுத்தும், அரிசி இல்லாத பதரும் எவருக்கும் பயன்படா. எழுத்துக்களைக் குறைத்துக் கருத்துகளை நிறைத்து எழுதுவது நல்லது. பலபக்கங்களில் ஒருகருத்து காணப்படுவதை விட ஒரு பக்கத்தில் பல கருத்துக்கள் காணப்படுவதே எழுத்தாகும்.

பொழுது போக்குக் கதைகள் நமக்குத் தேவையில்லாத ஒன்று. பிற நாடுகளுக்கு வேண்டுமானால், அவை தேவைப்படலாம். நம் நாட்டு மக்களுக்கு உழைக்கவும், உண்ணவுமே

பொழுது போதவில்லை. கடுமையாக உழைத்துப் பல திட்டங்களை நிறைவேற்றித் தீர வேண்டிய நாட்டில் பொழுதுபோக்குக் கதைகள் மக்களின் அறிவையும், ஆற்றலையும் போக்க உதவுவதன்றி வேறு எதற்கு உதவப் போகிறது என்பதைப் பொழுது போக்கு எழுத்தாளர் எண்ணிப் பார்த்தல் வேண்டும். கதைகளை எழுதுவதிலும்-காதற்கதைகளை - அதிலும்-காமக்கதைகளை எழுதுவது தீயொழுக்கத்தை வளர்ப்பதாக வந்து முடியும். கல்வி, அறிவு, ஒழுக்கம், கலை, நாகரிகம், பண்பாடு உழவு, தொழில், வணிகம், சமூகம், சீர்திருத்தம், அரசியல் ஆகியவற்றில் ஆக்கமும் ஊக்கமும் உண்டாகுமாறு எழுதுவது நாட்டிற்குச் செய்யும் நற்பணியாக அமையும்.

இலக்கியங்கள் அனைத்தும் குறிக்கோளையுடையவை. இலக்கு -குறிக்கோள். குறிக்கோள் இல்லாத எழுத்தும், குறிக்கோள் இல்லாத வாழ்வும் பயனற்றவை. "எங்கு செல்கிறோம்" என்று எண்ணாமலேயே சாலையில் நடந்துகொண்டிருப்பவனும், "எதைச் சொல்லுகிறோம்" என்று எண்ணாமலேயே எழுதிக் கொண்டிருப்பவனும் ஒரே படகில் செல்லவேண்டியவர்கள்.

எவரும் எந்தமொழியிலும் எழுதலாம். ஆனால், அவர் அந்த மொழியை நன்கறிந்தவராக, அம்மொழியில் பற்றுள்ளவராக இருத்தல் வேண்டும். இன்றேல், எழுதும் மொழியல்லாத வேற்று மொழிச் சொற்கள் அவரறியாமலே புகுந்து அவரது எழுத்தை வீணாக்கிவிடும். பல மொழிச் சொற்களைக் கலந்து எழுதுகிறவர்கள் எந்த ஒரு மொழியையும் நன்கறியாதவரும், எந்த ஒரு மொழியிலும் பற்று இல்லாதவருமாகவே காட்சியளிப்பர்.

மகா ராஜ மான்ய ராஜ ஸ்ரீ. விவாக முகூர்த்தப் பத்திரிகை, வதுவரர்கள் என்பவைகளெல்லாம் மறைந்து திருவாளர், திருமண அழைப்பு, மணமக்கள் என்பனவெல்லாம் வெளிவந்த பிறகும், அக்கிராசனாதிபதி, பிரசங்கி, வந்தனோபசாரம் என்பவைகளெல்லாம் ஒழிந்து, தலைவர் சொற்பொழிவாளர், நன்றிகூறல் ஆகியவை வழக்கத்திற்கு வந்துவிட்ட இக்காலத்திலும் கூடப் "பறவை" இருக்க பக்ஷியையும், "பூ" இருக்க புஷ்பத்தையும், தேடிப்பிடித்து எழுதுவது எதன் பொருட்டோ? "சோறு, தண்ணீர்" என்பவைகளைக் "காணு, பானி" என்றோ, "போஜனம், தீர்த்தம்" என்றோ "ரைஸ், வாட்டர்" என்றோ பிறர் எழுதலாம். அதைத் தமிழன் எழுதலாமா? எழுதினாலும், அதைத் "தமிழ்" எனலாமா?—என்பவைகளைப் பிறர் எண்ணிப்பார்க்க வேண்டும்.

"பல மொழிச் சொற்களையும் கலந்து எழுதினால்தான் ஒரு மொழி வளரும்" என்பது "கல்லையும், மணலையும் கலந்து அளந்தால்தான் அரிசி கூடும்" என்பதைப் போன்றது. அரிசியும், பருப்பும் உணவுப் பொருள்களே.

எனினும், அவை தனித் தனியே இருக்கும்போதுதான் அரிசிக்கும் மதிப்பு; பருப்புக்கும் சிறப்பு; இரண்டும் கலந்து விட்டால் கண்டதும் உண்டாவது வெறுப்பு.

"அட்ஹாக் கமிட்டி, லோக் சபா, ஆகாசவாணி விவித்பாரதி" ஆகியவைகளெல்லாம் புரியும் போது, "தமிழ்ச் சொற்கள் தமிழனுக்குப் புரியாது" எனக் கூறுவது தமிழுக்கும், தமிழனுக்கும் மானக்கேடாகும். யாராகிலும் ஒருவர் தமிழ்ச் சொல் தனக்குப் புரியவில்லை என்றால், அவர் தமிழ் படிக்கவில்லை என்று பொருள். தமிழ்ச் சொற்கள் அவருக்குப் புரியவேண்டுமானால், அதற்குரிய ஒரே வழி அவர் தமிழைப் படிக்கவேண்டும் என்பதே. அதைவிட்டுத் தமிழ் படியாத மக்களுக்குப் புரியும்படி எழுதுகிறேன் என எழுதுவது ஒரு புதிய கதம்ப மொழி ஒன்றை உருவாக்க உதவுமேயன்றித் தமிழை வளர்க்க உதவாது.

நல்ல தமிழில், சிறந்த நடையில், மிகுந்த கருத்துக்களை, குறைந்த எழுத்துக்களில் எழுதுவதே உயர்ந்த படைப்பாக இருக்கும். என்றாலும், இதையும் வளரவிடாமல் அழித்து ஒழிக்கும் பூச்சிகள் இரண்டு இருக்கின்றன. ஒன்று இலக்கணப் பிழை. மற்றொன்று அச்சுப் பிழை. வளரும் பயிராக இருக்கும் எழுத்தாளர்கள் இப்பூச்சிகளால் தாக்கப்படாமல் இருப்பது நலமாகும்.

மக்களைத் திருத்த எழுத்துத் துறையே தலை சிறந்தது. இதையறிந்தே அறிஞர் வால்டேர், "வாள் முனையை விடப் பேனா முனையே அதிக வலிமையுடையது" என்றார். எனினும், ஒழுக்கமற்றவனுடைய வாளோ, ஒழுக்கமற்றவனுடைய பேனாவோ வெற்றிபெறாது; வெற்றி பெற்றாலும் நிலைத்து நில்லாது. ஆகவே, "ஒழுக்கமுள்ளவனுடைய எழுத்துக்கு ஒரு தனி எடையுண்டு" என்பதை எழுத்தாளர்கள் முதலில் ஒப்புக்கொள்ள வேண்டும்; அடுத்துத் தங்களைத் திருத்திக்கொள்ள வேண்டும்; பிறகே பிறரைத் திருத்த முனைய வேண்டும்.

சிலர், சிலரை வைது எழுதி மிரட்டிப் பணம் பெற்று வாழ்கிறார்கள்; சிலர், சிலரை வாழ்த்தி எழுதிப் போற்றிப் பணம்பெற்று வாழ்கிறார்கள். இவர்கள் இருவருமே எழுத்துலகிற்கு வேண்டாதவர்கள். உண்மையை ஒளிக்காமல் தீமையற்ற சொற்களால் அச்சமற்று எழுதும் எழுத்தே அனைவராலும் வரவேற்கப்பெறும்.

"இன்ன நூலைப் படித்து நட" எனக்கூறுவதற்குத் தகுதியுடைய நூல்கள் பல இப்போது தோன்றிவருகின்றன. இது போதாது. "இன்ன ஆசிரியரைப் பார்த்து நட" எனக் கூறுவதற்குத் தகுதியுடைய ஆசிரியர்கள் பலர் இப்போது தோன்

றியாக வேண்டும். இன்றேல் எழுத்துலகம் வாழாது.

நாளிதழ்களுக்கு ஒரு நாளே உயிர். மறுநாள் பிறந்தால் இது இறந்துவிடும். கிழமை இதழ்களுக்கு ஒரு கிழமையும், திங்களிதழ்களுக்கு ஒரு திங்களும் உயிர் உண்டு. ஆண்டு மலருக்கு அடுத்த மலர் பிறக்கும் வரை உயிர் இருக்கும். பிறகு இறந்துவிடும். ஒரு நல்ல இலக்கியப் படைப்பு என்றால், குறைந்தது அது அடுத்த தலை முறைவரையிலாவது உயிர்பெற்றிருக்க வேண்டும். இன்றேல், அது உயிர் இலக்கியமாக இராது. உலகிலேயே அதிகமான மொழிகளில் மொழிபெயர்க்கப் பெற்றதும், 98 தலைமுறை வரையில் நிலைத்து நிற்பதுமான சிறந்த இலக்கியம் தமிழில் உள்ள 'திருக்குறள்' ஒன்றே எனக் கூறிப்பெருமையடைய தமிழ் எழுத்தாளர்க்கு மட்டுமே உரிமையுண்டு.

சில பெரிய மனிதர்களோடு நட்புக்கொள்ள வேண்டுமானால், அதற்கேற்பச் சில நல்ல பழக்கங்களும் நம்மிடையே இருந்தாக வேண்டும். இன்றேல், அந்நட்பு நிலைத்திராது. அதுபோன்றே நாம் பேனாவோடு பழகுவதாக இருந்தாலும், அதற்கு முன்னே பெருந்தன்மையோடு சிறிதாவது பழகியிருக்கவேண்டும். பெருந்தன்மையோடு பழகியறியாதவர்கள் பேனாவோடு பழகத் தகாதவர்கள்.

நல்லதைப் படித்து, நல்லதைக் கேட்டு, நல்லதை எண்ணி, நல்லதைச் சொல்லி, நல்லதைச் செய்து, நல்லதை எழுதும் எழுத்தாளர்கள் நம் நாட்டில் பெருக வேண்டும்.

வாழட்டும் தமிழகம்!
வளரட்டும் எழுத்துலகம்!

—"பாரதி" மலர்

புதுமுறை சங்க வாய்பாடு

V. K. சேஷாத்திரி. B. A., L.T.
(Retired Deputy Inspector of schools.)

புதிய மெட்ரிக், நயாபைசா திட்டப்படி எளிய முறையில் மாணவர்களுக்குச் சுலபமாகப் புரியும் வகையில் புது முறை சங்க வாய்பாடு இயற்றப் பெற்றிருக்கிறது.

தனிப் பிரதியின் விலை ரூ. 0- 13 ந. பை. 100 வாய்பாடு மொத்தமாக வாங்குபவர்களுக்கு 100 பிரதிகள் ரூ. 8 வீதம் கொடுக்கப்படும்.

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்

வடாற்காடு மாவட்ட துணைவழி துவக்கப் பள்ளிகளின் ஆசிரிய நிர்வாகிகள் & நிர்வாகிகள் சங்கம்

23-வது மாநாடு

வேலூர் லட்சுமணசாமி நகர மண்டபத்தில்
26—12—1965 ஞாயிற்றுக்கிழமை மாலை 3-மணிக்கு
நடைபெற்ற மாநாட்டின் போது

சங்கத் தலைவர்.

திரு. S. K. பழனி அய்யா அவர்கள்

நிகழ்த்திய

வரவேற்புரை.

பெரியோர்களே, தாய்மார்களே,

1. வணக்கம். வட ஆற்காடு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து இங்கு திரண்டு வந்துள்ள நிர்வாகிகளே! ஆசிரிய நிர்வாகிகளே! கல்வி வளர்ச்சியிலே பேரன்பும் ஆர்வமும் கொண்டு இங்கு விஜயம் செய்துள்ள பெரியோர்களே, உங்கள் அனைவரையும் இம்மாநாட்டின்சார்பாக வருக! வருக!! எனப்பேரன்புடன் வரவேற்கிறேன்.

2. இம்மாநாட்டிற்கு தேசியக் கொடியை ஏற்றிவைக்க அன்போடு ஒப்புக்கொண்ட உத்தமரும் இம்மாவட்டத்தில் பல ஆரம்பப் பள்ளியை நடத்தி வரும் நிர்வாகியுமான உயர்திரு. **அலெக்சாண்டர் சாமுவேல், B.A.,L,T.** அவர்கள் தேசியக் கொடியை ஏற்ற இசைந்தமைக்கு அன்னாரை மகிழ்ச்சியோடு வரவேற்கிறோம்.

3. கல்வி வளர்ச்சியிலேயே மிக்க ஆர்வம் கொண்டவரும் காங்கிரஸ் பொது சேவையே முக்கியமெனக் கருதி உழைத்துவரும் சென்னை சட்டமன்ற உறுப்பினர் உயர் திரு **R. ஜீவரத்தினமுதலியார், M.L.A.** அவர்கள் இம்மாநாட்டிற்குத் தலைமை தாங்க இசைந்ததை நினைக்கும்போது எங்கள் உள்ளம் பெரு மகிழ்ச்சி கொள்ளுகிறது. அவருடைய தலைமையில் ஆசிரிய நிர்வாகிகளுக்கு ஏற்பட்டுள்ள குறைகள் நிவர்த்திக்க அன்னார் பெரிதும் பாடுபடுவார் என்று நம்புகிறோம்.

4. இளம் வயதிலேயே கல்வி கற்றுப் பட்டம் பெற்று நமது மாநிலத்தின் செய்தித்துறை

அமைச்சராகப் பதவி ஏற்று மக்களுக்கு அயராது உழைத்துவரும் கனம் கோ. பூவராகன், B. Sc. ஆனர்ஸ் அவர்கள் இம்மாநாட்டைத் திறந்துவைக்க இசைந்ததை நினைக்கும் தோறும் எங்கள் உள்ளம் பெருமகிழ்ச்சி கொள்கிறது. உதவிபெறும் நிர்வாகிகளின் துவக்கக் கல்வியின் வருங்கால உலகம் மிகவும் சீரும் சிறப்புமாக இருக்கும் என்பது உறுதி.

5. சென்னை மாநில பொதுக் கல்வி கூட்டு இயக்குநர் உயர்திரு. கனம். S. V. சிட்டிபாபு M.A. B.T. அவர்கள் சிறப்புச் சொற்பொழிவு ஆற்ற அன்புடன் இசைந்தமைக்கு ஆசிரிய நிர்வாகிகள் & நிர்வாகிகள் மாநாட்டிலே புதியதோர் எழுச்சியும் ஏற்றமும் பெற்று பெரியதோர் சிறப்பும் செம்மையும் உடையவையாகத் திகழும் என்ற உறுதி உண்டாகிறது.

6. இம்மாநாட்டிற்கு சட்ட மன்ற உறுப்பினர் உயர்திரு இராஜகோபாலன், B. A., M. L. A. அவர்கள் சொற்பொழிவு ஆற்ற அன்போடு ஒப்புக்கொண்டமைக்கு ஆசிரிய நிர்வாகிகள் & நிர்வாகிகள் சங்கத்தின் மூலம் அன்னாரை வரவேற்கிறோம். நம்முடைய பாரத நாட்டிலுள்ள ஏனைய மாநிலங்களைக் காட்டிலும் நமது சென்னை மாநிலம் கல்வியைப் பரப்ப அதிக முயற்சி எடுத்தும், ஆசிரியர் சம்பளத்தை உயர்த்தியும் ஆசிரியர்களுக்குப்பென்ஷன், இன்ஷூரன்ஸ் பிராவிடெண்டு பண்டு முதலிய வசதி செய்து கொடுத்தும், பிள்ளைகளுக்கு S.S.L.C. வரை இலவசக் கல்வியும், பகல் உணவுத் திட்டத்தையும் சீருடை வழங்கியும் உயர் கல்வி படிக்க விரும்பும் பிள்ளைகளுக்கு கடன் வசதி செய்து கொடுத்தும், நிர்வாகிகளுக்கு ஆண்டுக்கு இருமுறை நிர்வாகச் செலவு மான்யம் அளித்து வருவதை யாரே மறுக்க வல்லார். கல்வி வளர்ச்சியில் நாட்டங்கொண்டுள்ள யாவரும் போற்றாமல் இருக்கமுடியாது.

7. நம்முடைய மாநிலத்தில் துவக்கப்பள்ளிகள் தற்காலம் சுமார் 32 ஆயிரம் பள்ளிகள் ஆகும். அவைகளில் 10,000 நிர்வாகிகள், ஆசிரிய நிர்வாகிகளால் நடத்தப்பட்டு வரும் உதவி பெறும் துணைவழிப் பள்ளிகள் ஆகும். துணைவழிப்பள்ளிகளை நடத்தி வரும் நிர்வாகிகளின் நிலைமை மிகமிகக் கவலைக்கிடமாக உள்ளது.

8. நிர்வாகிகளால் நடத்தி வரும் பள்ளிகளில் ஆசிரியர் நியமனமும், புதிய வகுப்புகள் ஆரம்பிப்பதும் பஞ்சாயத்து யூனியன்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதனால் உதவி பெறும் நிர்வாகிகள் நடத்திவரும் பள்ளிகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டு கல்வி வளர்ச்சியே குன்றிப் போகும் என்பதை கனம் அமைச்சர் அவர்களும் கனம் மாநிலக் கல்வி கூட்டு இயக்குநர் அவர்களும் சிந்தித்துப் பார்த்து

ஆவன செய்வார்கள் என்று நம்பு கிறேம்.

9. 1938ஆம் ஆண்டுவரையில் மாவட்டத்திற்கு ஒரு கல்விச் சபை இருந்தது. அதில் தனியார் சம்பந்தப்பட்ட பள்ளிகளின் இரு பிரதி நிதிகள் முகம்மதியர், கிறிஸ்தவர் தாழ்த்தப்பட்டோர் இவர்கள் பள்ளிவளர்ச்சிக்கென ஒவ்வொரு மெம்பர்களும் ஜில்லா போர்டு சம்பந்தப்பட்ட தாலுக் காக்களுக்கு ஒரு மெம்பர்வீதமும் ஒவ்வொரு முனிசிபாலிடிக்கும் ஒருமெம்பராகவும் 31 மெம்பர்கள் அங்கம் வகித்தனர். அந்த ஜில் லாக் கல்விச்சபைகள் பள்ளிகளை மூடவோ திறக்கவோ புதிய வகுப்புகள் ஏற்படுத்தவோ மானி யம் கொடுக்கவோ இது போன்ற அதிகாரங்கள் கொடுக்கப்பட்டி ருந்தன. இதனுல் துவக்கக்கல்வி யாதொரு இடையூறு மின்றி செவ்வனே நடந்துவந்தது. ஆனுல் அந்தச்சபைகளை 1938ல் மூடிவிட்டபடியால் அதுமுதல் பல கஷ்ட நஷ்டங்களை நிர்வாகி கிகள் அனுபவித்து வருகிருர் கள். கல்வி வளர்ச்சிக்காக ஒரு தனி இலாக்கா சிருஷ்டிக்கப்பட்டு கல்வியின் வளர்ச்சியை அச்சபை யினிடத்தே ஒப்புவிக்கப்பட்டால் தான் நம்முடைய மாநில சர்க் கார் பல கோடிக்கணக்காகச்செல விடும் பணம் கல்வி வளர்ச்சிக்கே செலவிட்டதாக ஏற்படும் என்ப தை கனம் அமைச்சர் அவர்களும், கனம் மாநில கூட்டு இயக்குனர் அவர்களும் உணர்ந்து ஆவனசெய் வார்கள் என்று நம்புகிறேம்.

10. நமது மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் ஏற்படுத்தியுள்ள இரண்டு அபிவிருத்தி சபைகளில் நம் மாநிலத்தில் நல்ல நிலைமை யில் 10,000 துணைவழிப் பள்ளி கள் நடத்திவரும் நிர்வாகி களுக்குஜில்லா அபிவிருத்திசபை இரண்டில் ஒவ்வொன்றிலும் இரண்டு நிர்வாகிகள் பங்கு பெற ஸ்தாபனம் ஒதுக்குமாறு கனம் அமைச்சர் அவர்களையும், மாநில கூட்டு இயக்குனர் அவர்களையும் ஆவனசெய்வார்கள் என்று கேட்டுக்கொள்கிறேம்.

11. மாதந்தோறும் துணை வழிப்பள்ளிகள் நிர்வாகிகள் கட் டிட வாடகை வேலைக்காரர் ஊதி யம், கைத்தொழில் பண்டங்கள் பாட உபகரணங்கள்மரத்தளவா டங்கள்போன்ற எண்ணற்ற வகை களின் பொருளாதார நிலை தற் காலத்தில் மிகவும் உயர்ந்துள்ள படியால் தற்போது கொடுத்து வரும் நிர்வாக மான்யமான 10%ஐ குறைந்தது 20% உயர்த்தி நிர்வாகிகள் அனைவரும் பெற வகைசெய்ய வேண்டு மென்று மாநில அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேம்.

12. தங்கள் கடமைகளை முறைப்படி நிறைவேற்றுத ஆசி ரியர்களை எந்த நிர்வாகியும் வேலையில் வைத்துக்கொள்ள விரும்பமாட்டார்கள். அப்படி வைத்துக்கொண்டாலும் அந்தப் பள்ளியின் கல்வியின் வளர்ச்சி தடைப் பட்டுப்போகும். அதை உணர்ந்து நிர்வாகி கல்வி

இலாக்கா சட்டப்படி மூன்று மாத நோட்டீஸ் கொடுத்து வேலையிலிருந்து நீக்கினால் அவர்களை மீண்டும் வேலையில் அமர்த்திக்கொள்ள வேண்டுமென்று கல்வித்துறை அதிகாரிகள் பலர் வற்புறுத்துவதாகத் தெரிகிறது. எந்த ஆசிரியர் எவ்வளவு தவறு இழைத்தாலும் அவர்களை வேலையிலிருந்து நீக்கக் கூடாது என்றால் எந்தப் பள்ளிக்கூடமானாலும் கட்டுப்பாடு என்பது எப்படி இருக்க முடியும்? தகுந்த காரணத்தை முன்னிட்டு நிர்வாகிகள் ஆசிரியரை வேலையிலிருந்து நீக்குவது பற்றி கல்வித்துறை அதிகாரிகள் தலையிடாமல் நிர்வாகிகளுக்கு உறுதுணையாக இருந்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

13. பொதுவாகவே நிர்வாகிகள் ஆற்றிவருகின்ற பணியை அந்தப் பணியில் கல்வித்துறைக்கு கிடைத்துவருகின்ற கிடைத்தற்கு அரிய பயனை அரசாங்கத்தார் உணரவில்லை என்றே தோன்றுகிறது. தனியார் பள்ளியில் அளிக்கின்ற தரம் நகராண்மைப்பள்ளியில் அளிக்கப்படுகின்ற கல்வியின் தரத்தை விட பன்மடங்கு உயர்ந்ததாக உள்ளது என்ற உண்மையை கல்வித்துறை வல்லுனர்கள், பத்திரிகை ஆசிரியர்கள், இந்நாட்டின் நன்மை நாடும் நல்லறிவாளர்கள் ஆகிய அனைவரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அவ்வாறு தனியார் பள்ளியின் கல்வித் தரம் உயர்ந்ததாக இருப்பதற்கு ஒரே காரணம் நிர்வாகிகள் என்று ஒரு சாரார் அப்பள்ளிகளின் பொறுப்பு முழுவதும் ஏற்றுக் கொண்டு அவற்றின் முன்னேற்றத்திற்காக அல்லும் பகலும் அரும்பாடுபட்டுவருவதேயாகும். அப்படிப் பணியாற்றி வரும் நிர்வாகிகளுக்கு மேலும் ஊக்கமும் உற்சாகமும் ஊட்டத்தக்கவகையில் அவர்களுக்குத் தேவையான வசதிகளையும் உதவிகளையும் செய்து தருவதுதான் அரசாங்கத்தின் கடமையாக இருக்க வேண்டுமே தவிர நிர்வாகிகளுடைய ஆற்றலும் ஆர்வமும் மங்கி மறைந்து மாய்ந்து போகத்தக்க உத்திரவுகளை அரசாங்கம் பிறப்பிக்காமல் இருக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

14. அடுத்தபடியாக நம்முடைய கவனத்தைக் கவரும் பிரச்சினை "ஆசிரியர்களும் அவர்களுடைய குறைகளும்" என்பதாகும். "எழுத்தறிவித்தவன் இறைவனாகும்" என்று எல்லோரும் பாராட்டுகிறார்கள். நாளைய பிரஜைகளை உருவாக்கும் நிகழ்காலச் சிற்பிகள் ஆசிரியர்களே என்று அத்தனைபேரும் இயம்புகிறார்கள். ஆசிரியர் தொழிலே அரும்பெரும் தொழில் என்று சொல்லாதவர்கள் யாரும் இல்லை. ஆனால் இப்படியெல்லாம் பாராட்டப்படுகிற ஆரம்ப ஆசிரியரின் வாழ்க்கை நிலையோ வேதனையின் வடிவமாக இருக்கிறது. வறுமைத் தேளால் கொட்டப்பட்டு வேதனைப் புயலில் சிக்குண்டு வாடித் தவிக்கிறது. ஆசிரியரின் குடும்

பம் நாளை வாழ்வுக்கு என்செய்வோம் என்று வேதனைப்படுகின்றது. விலைவாசிகளோ நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டே போகிறது. ஆசிரியர்கள் பெறும் ஊதியமோ போதுமானதாக இல்லை. சம்பளத்தை உயர்த்திக்கொடுக்க ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

15. மேல்நாடுகளில் கல்வியின் வளர்ச்சிக்காக அரசாங்கம் ஏராளமான பணம் செலவிடுகிறது. தனிப்பட்டவர்கள் தொடங்கும் பள்ளிகளுக்கு மகத்தான வரவேற்பும் உதவியும் அளிக்கப்படுகின்றன. பெற்றோர்களின் கூட்டுறவும், பேரன்பும் பள்ளிக்கூடங்களுக்குக் கிடைக்கின்றன. நம்நாட்டில் வருந்தத்தக்க நிலைதான் இருந்து வருகிறது என்பதை யார் மறுக்கமுடியும்?

16. ஆசிரியர்களின் நிலையை உயர்த்த வேண்டியது எவ்வளவு அவசியமோ அதே அளவுக்கு கல்வித்துறையில் அரசாங்கத்தின் தலையீடு அடிக்கடி நேரிடாதபடி பார்த்துக்கொள்ளுவதும் அவசியமாகும். நான் அழுத்தம் திருத்தமாகவே தெரிவிக்க ஆசைப்படுகிறேன். கல்வித்துறையானது தனிப்பட்ட நிர்வாகிகளின் பொறுப்பில் இருக்க வேண்டுமே தவிர அரசாங்கத்தின் நேரடி நிர்வாகத்தில் நிச்சயமாக இருக்கக்கூடாது. இது ஜனநாயக நாடு. ஆளும் கட்சிகள் அடிக்கடி மாறக்கூடிய நிலை இங்கே உண்டு. ஒவ்வொரு கட்சியும் ஒவ்வொரு வகையான கல்விக் கொள்கையைப் பின்பற்றக்கூடும். இந்த நிலையில் அரசாங்க ஆதிக்கத்தில் கல்வித்துறை இருக்குமானால் அந்தத்துறையில் அடிக்கடி மாறுதல்கள் ஏற்பட்டு குழப்பந்தானே உண்டாகும்? அதுமட்டுமல்ல, தனிப்பட்ட நிர்வாகிகளின் கீழ் உள்ள பள்ளிகளில் அதிலும் குறிப்பாக கிருஸ்துவ மிஷன்களின் பள்ளிகளில் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமிடையே நெருங்கிய தொடர்பு இருக்கிறது. கல்வியின் தரமும் உயர்ந்ததாக இருக்கிறது. நிர்வாகிகளால் நடைபெற்றுவரும் பள்ளிகளில் ஒவ்வொரு மாணவனின் மீதும் சிறப்பான கவனம் செலுத்தப்படுகிறது. அரசாங்கத்தால் நடத்தப்படும் பள்ளிகளில் இந்தச் சிறப்புகள் இடம்பெறுவதில்லை. ஆகையால்தான் கூறுகிறேன் கல்வித்துறையை தனிப்பட்ட நிர்வாகிகளிடம் இருக்க விடுவதே சிறந்த முறையாகும் எனத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

17. ஆரம்பக் கல்வியைப் பற்றிச் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். தொடக்க வகுப்புகளில் சின்னஞ்சிறு குழந்தைகள் பயில்வதால் அந்த வகுப்புகளில் எழுதுவது, படிப்பது, கணக்குப் போடுவது ஆகிய மூன்றைமட்டுமே கற்றுக் கொடுத்தால் போதுமானதென்று நான் சொல்லுகிறேன். சிறிய குழந்தைகளின் இளைய மூளைகளின் மீது பலவகையான பாடங்களைத் திணித்து அவர்களை வாடவைப்பது முறையல்ல என்பது என் கருத்து என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

18. இந்த மாநிலத்திலே உதவிபெறும் பள்ளிகள் ஆற்றி வரும் பணி தனிப்பெரும் சிறப்பு வாய்ந்ததாகும். இந்த மாநிலத்தில் முதல் முதல் ஆரம்பப்பள்ளிகளைத் தொடங்கியவர்கள் உதவி பெறும் நிர்வாகிகளே ஆவர். ஜில்லா போர்டு, முனிசிபாலிடி முதலிய உள்நாட்டு மன்றங்கள் இந்தத் துறையில் நுழைவதற்கு முன்னாலேயே கிழக்கிந்திய கம்பெனியார் இந்நாட்டை ஆட்சி புரிந்துவந்த அந்தப்பழங்காலத்தி லிருந்தே உதவிபெறும் நிர்வாகிகள் ஆரம்பப் பள்ளிகளை நடத்தி வந்தனர்.

19. மாவட்டத்தின் சில பகுதிகளிலிருந்து நிர்வாகிகளால் நடத்தப்பட்டு வரும் துணைவழிப் பள்ளிகளை அந்தந்த வட்டத்தைச் சேர்ந்த பஞ்சாயத்து யூனியன் சம்பந்தப்பட்ட அதிகாரிகள், பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளாக மாற்றிவிட விரும்பி பள்ளி நடத்தி வரும் நிர்வாகிகளைக் கேட்பதாகவும் கொடுக்க மறுக்கும் நிர்வாகிகளுக்குப் பல கஷ்ட நஷ்டங்கள் உண்டாக்கி வருவதாகவும் நமது சங்கத்திற்குப் பல இடங்களிலிருந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளன. நிர்வாகிகளால் நடைபெறும் பள்ளிகளும் தாங்கள் நடத்தும் பள்ளிகளே என எண்ணி பஞ்சாயத்து யூனியன் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடந்துகொள்ள வேண்டுமே ஒழிய நிர்வாகிகளால் நடத்தப்படும் பள்ளிகளுக்குத் தகுந்த பாதுகாப்பு அளித்து ஆதரிக்கும்படி இந்த மாவட்டத்தில் உள்ள எல்லா பஞ்சாயத்து யூனியன்களின் மதிப்பு மிக்க பெருந்தலைவர்கள் அனைவரையும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

20. இந்த மாநாடு குறுகிய காலத்திற்குள் கூட்டப்பட வேண்டி ஏற்பட்டு விட்டபடியால் இங்கே செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகளில் குற்றம் குறைகள் பல இருக்கக் கூடும். நம் நாட்டின் கல்வி வளர்ச்சியைக் கருதி அவற்றை எல்லாம் அன்பு கூர்ந்து மன்னித்தருள வேண்டுகிறேன்.

21. மாநாட்டில் விஜயம் செய்துள்ள அனைவரையும் மீண்டும் ஒரு முறை வருக! வருக! உங்கள் வரவு நல்வரவாகுக! என்று மனமார வரவேற்கிறேன்.

வளர்க உதவிபெறும் நிர்வாகிகள் பள்ளி!
வாழ்க உதவிபெறும் நிர்வாகிகளின் சங்கம்!!

இங்ஙனம்,
மண்டல காங்கிரஸ் கமிட்டித் தலைவரும், நிர்வாகியுமான
S. K. பழனி அய்யா,
சங்கத் தலைவர்.

S. புண்ணிய கோட்டி,
சங்கக் காப்பாளர்.

C. அப்பாசாமி,
சங்கச் செயலாளர்.

வட ஆற்காடு மாவட்ட உதவிபெறும் ஆரம்பப் பள்ளிகளின் நிர்வாகிகள், ஆசிரிய நிர்வாகிகளின் சங்கம், வேலூர்.

செத்துப்பிறந்த குழந்தையாக ஆதாரக் கல்வி!

தோல்வியை ஒப்புக்கொள்கிறார் கல்வியமைச்சர்

ஆதாரக் கல்வித் திட்டம் தோல்வியுற்றுவிட்டது என்பதை கல்வியமைச்சர், மாநிலங்கள் அவையில் ஒப்புக் கொண்டார்.

இவ்வகையான கல்வியில் தேவையான மாறுதல்களைச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

ஒரு கேள்விக்குப் பதிலாக கல்வி யமைச்சர் சாக்ளா மேலும் கூறியதாவது :—

“ ஆதாரக் கல்வி • தோல்வியடையக் காரணம், தகுந்த ஆசிரியர்கள் இல்லாமையும், ஆதாரக் கல்வியின் அடிப்படை நோக்கமான உழைப்பின் பின் உயர்வை மறந்துவிட்டதுமே யாகும்.”

மேலும் சில கேள்விகட்குப் பதிலளிக்கையில் அவர் கூறிய தாவது :—

“கல்வி கற்பிப்பதில் பரம்பரையாகக் கையாளப்பட்டுவரும் முறைகளில் உள்ள பிரச்சினைகளை அறிந்து வேதனைப்படுகிறேன்.

துவக்கக் கல்வியுடன் ஆதாரக் கல்வியை இணைத்துப் புதிய திட்டத்தைச் செயல் படுத்தத் துவங்கிவிட்டோம் ; ஆனால், துவக்கக் கல்வி பயிலும் 5 கோடி மாணவர்கட்கும் தேவையான ஆசிரியர்களும், சாதனங்களும் கிடைக்க அவகாசம் தேவை.

‘ஆதாரக் கல்வியின் தந்தை’ என்று கல்வியமைச்சரால் வர்ணிக்கப்பட்ட அவைத் தலைவர் ஜாகிர் உசேன், ‘ஆதாரக் கல்வித் திட்டம் ஒழுங்காகச் செயல் படவில்லை’ என்பதை ஒப்புக் கொண்டிருக்கிறாரா ?” என்று திருமதி சகுந்தலா பாரஞ்சிபே கேட்டார்.

அவைத் தலைவர்:—“ஆம் ! செத்துப் பிறந்த ஒரு குழந்தைக்கு நான் தந்தை! ஆனால் என்னிடமிருந்து பதிலை எதிர்பார்க்காதீர்.”

கல்வியமைச்சர் :—“உங்கள் சார்பில் நான் பதிலளிக்கிறேன்.

நமது மதிப்புக்குரிய அவைத் தலைவர் அவர்கள், ஆதாரக் கல்வி போலிப் புகழ்ச்சிக்குரிய திட்டம் என்பதாகக் கூறியிருக்கிறார். எனவே, அதனை மாற்றியமைக்க நடவடிக்கைஎடுத்துவருகிறோம்.”

—நம் நாடு.

பெண் ஊழியர்களின் சலுகை ரத்தாகிறது

மூன்று குழந்தைகளுக்கும் அதிகமாக உள்ள அரசுத் துறையில் பணியாற்றும் பெண் ஊழியர்களுக்கு, இனி, பேறு கால விடுமுறை அளிப்பதில்லை எனக்கேரள அரசுமுடிவு செய் திருக்கிறது.

தனியார் பள்ளிகளின் முக்கிய பங்கு

சென்னை கருத்தரங்கின் யோசனைகள்

"கல்வியை தேசிய மயமாக்கும் திட்டத்திலும் தனியார் பள்ளிகளின் முக்கிய பங்கை சர்க்கார் அங்கீகரிக்க வேண்டும். தனியார் பள்ளிகளில் பெருகி வரும் செலவுகளை சமாளிக்க அவற்றிற்குப் போதிய நிதி உதவி அளிக்க வேண்டும்" என்று நேற்று மாலை நடைபெற்ற தெ. இ. ஆசிரியர் யூனியன் கருத்தரங்கில் தலைமை ஆசிரியர்கள் மகாநாட்டுத் தலைவர் திரு. எஸ். நரசிம்மன் கூறினார்.

தனியார் பள்ளிகள் எந்த நிலைமையிலும் துரிதமாகச் செயல்பட்டு நல்ல பலன் காட்ட முடியும் என்றும், அவைகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் விசுவாசத்துடனும் சேவா உணர்ச்சியுடனும் தம்மை அர்ப்பணித்துக் கொண்டு பணியாற்றுகிறார்கள் என்றும் திரு. நரசிம்மன் கூறினார்.

திரு. எம். ராஜா அய்யர் எம். எல்.சி. கூட்டத்துக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் சமீப வருஷங்களில் புதிதாக வெகு சில தனியார் பள்ளிகளே ஏற்பட்டுள்ளன என்றும், இதற்கு மாறாக சர்க்கார் ஸ்தாபன பள்ளிகள் ஏராளமாக ஏற்பட்டுள்ளன என்றும், எனினும் கல்வி அபிவிருத்தியில் தனியார் துறைக்கு நிச்சயம் முக்கிய பங்கு உண்டென்றும் கூறினார்.

தனியார் துறை விரிவடையாததற்கு சர்க்காரின் விதிகளும் கட்டுப்பாடுகளுமே பெரிதும் காரணம் என்று திரு. எஸ். நடராஜன் கூறினார். எல்லாக் குழந்தைகளுக்கும் நல்வாய்ப்பு கிடைக்கச் செய்யவும் ஆசிரியர்களின் வேலை நிலைமை உயரவும் சர்க்கார் முயற்சிப்பது சரியே என்றாலும், தனியார் பள்ளிகளின் வளர்ச்சியைத் தாக்கக்கூடாது. தானே ஏகபோக ஏஜன்சியாயிருந்து எல்லாப் பள்ளிகளையும் நடத்தப் போதிய நிதி சர்க்காருக்குக் கிடையாது என்று அவர் சொன்னார்.

பிறகு நடந்த விவாதத்தில் கல்வி அபிவிருத்தியில் தனியார் பள்ளிகளுக்கு முக்கிய பங்கு உண்டென்றும், அவற்றை நடத்துவதில் குறைந்த பட்ச சர்க்கார் தலையீடே இருக்க வேண்டுமென்றும் பொதுவாகக் கருதப்பட்டது.

வ. ஆ. ஆரம்ப பள்ளி மானேஜர்கள் மகாநாடு :

50 லட்சம் குழந்தைகள் ஆரம்பக் கல்வி கற்கின்றனர்

சென்னை ராஜ்யத்தின் சிறந்த முன்னேற்றம்

ஆங்கிலம் போதிக்க உபரி செகண்டரி ஆசிரியர்களை நியமிக்கக் கோரிக்கை

சென்னை ராஜ்யத்தில் ஆரம்பக் கல்வி கற்க வேண்டிய வயதுள்ள 58 லட்சம் குழந்தைகளில் 50 லட்சம் குழந்தைகள் தற்போது பள்ளிக்குச் சென்று படித்து வருகின்றனர்.

இந்தத் தகவலை ஆரம்பக் கல்வித் துறை கூட்டு டைரக்டர் திரு. எஸ். வி. சிட்டிபாபு கூறினார்.

எஞ்சியுள்ள 8 லட்சம் குழந்தைகள் 4வது திட்ட காலத்தில் பள்ளிக்குச் செல்லுமாறு தூண்டப்படுவார்கள் என்று அவர் கூறினார்.

வடாற்காடு ஜில்லாவிலுள்ள உதவி பெறும் ஆரம்பப் பள்ளிகளின் மானேஜர்கள், ஆசிரிய மானேஜர்களின் 23வது வருடாந்தர மகாநாட்டில் பேசுகையில் திரு. சிட்டிபாபு இவ்வாறு கூறினார். மகாநாடு சென்ற ஞாயிறன்று நடைபெற்றது.

11 வயது முதல் 14 வயது வரையுள்ள குழந்தைகளை 6வது வகுப்பு முதல் 11வது வகுப்புகளுக்குக் கொண்டு வருவதற்கு அடுத்த திட்டக் காலத்தில் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும் என்று திரு. சிட்டிபாபு கூறினார். கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கும் சர்க்கார் மிகவும் ஆவலாக இருப்பதாக அவர் கூறினார்.

விஞ்ஞான பாடங்கள்

விஞ்ஞான பாடங்களுக்கு முக்கியத்துவம் தரப்படும் என்றும் இந்த நோக்கத்துடன், விஞ்ஞானப்பாடங்களைப்போதிப்பதற்குப் போதுமான சாதனங்களையும், கருவிகளையும் பள்ளிகள் பெறுவதற்குப் போதுமான நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

செய்தித்துறை மந்திரி திரு. பூவராகன் மகாநாட்டை ஆரம்பித்து வைத்தார். ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமிடையே நேரடி தொடர்பு இல்லாமல் இருப்பது வருந்தத்தக்கது என்

றும், நேரடி தொடர்பு ஏற்படுத்திக் கொண்டால், கல்வியில் முழு பயனையும் அடைய முடியும் என்றும் அவர் கூறினர். மந்திரி மேலும் கூறினர். சென்னை ராஜ்யத்திலுள்ள 30,800 ஆரம்பப் பள்ளிகளில் கால்வாசிப் பள்ளிகள் உதவி பெறும் தனியார் பள்ளிகள். இதிலிருந்து கல்வியைப் பரப்பும் பணியில் தனியார் பள்ளிகள் எவ்வளவு முக்கியமான பங்கை வகிக்கிறதென்பது புலப்படுகிறது. சம்பளத்தைப் பார்க்கிலும் சேவையே முக்கியம் என்னும் கொள்கையை ஆசிரியர்கள் பின்பற்ற வேண்டும். சர்க்கார் தனது வருமானத்தில் கால் பங்கை கல்விக்காகச் செலவிடுகிறது. ஆகவே நாட்டில் கல்வி விஸ்தரிட்புப்பணியில் நமது ராஜ்யமே முன்னணியில் நிற்கிறது.

தீர்மானங்கள்

மகாநாட்டில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. உதவி பெறும் பள்ளிகளுக்கும் பராமரிப்பு மானியத்தை அதிகப்படுத்துமாறு சர்க்காரை மகாநாடு கேட்டுக் கொள்கிறது.

2. 3வது முதல் 5வது வகுப்பு வரை ஆங்கிலம் போதிப்பதற்கு உபரியாக செகண்டரி ஆசிரியர்களை நியமனம் செய்யுமாறு மகாநாடு சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறது.

3. பஞ்சாயத்து யூனியன் மூலமாக அல்லாமல் இலாகா மூலமாகவே கல்வி மான்யங்களை வழங்குமாறு மகாநாடு கேட்டுக் கொள்கிறது.

10, 11-வது வகுப்பு மாணவர்களுக்கு 1967-லிருந்து இஷ்ட பாடம்

1967ஆம் வருஷத்திலிருந்து 10-வது 11-வது வகுப்பு மாணவர்கள் பொதுவிஞ்ஞானத்துடன் கூட ஏதேனும் ஒரு சிறப்பு விஞ்ஞான பாடமோ அல்லது கலை இயல் பாடம் ஒன்றோ (இஷ்ட பாடமாக) எடுத்துக் கொண்டாக வேண்டும். பௌதிக விஞ்ஞானம், இயற்கை விஞ்ஞானம் (தாவர இயலும், பிராணி இயலும்) ஆகிய மூன்றில் ஒன்றை சிறப்பு விஞ்ஞானப் பாடமாகத் தேர்ந்தெடுக்க அனுமதிக்கப்படுவர்.

ராஜ்ய சர்க்கார் அதிகாரி ஒருவர் இத்தகவலைத் தெரிவித்தார். இந்த ஏற்பாடு அமலுக்கு வர இன்னும் 18 மாத காலமிருப்பதால், பரிசோதனை கூடம் போன்ற வசதிகளுக்கு வகை செய்து கொள்ள உயர்நிலைப் பள்ளிகளுக்கும் போதிய அவகாசம் இருக்கும் என்றார்.

ஆணைவிட பெண்ணின் உடல் விரைவில் தளர்வது ஏன்?

எலும்பில் கால்சியம் குறைவதின் மர்மம்

(டாக்டர் ஜோனன் மாத்னர்)

ஆண்டுகள் பல உருண்டோட, உடல் வலுவிழந்து விடுகிறது. முறுக்கேறிய நரம்புகள் தளர்ந்து விடுகின்றன; இரும்பாக இருந்த எலும்பு, சாறுபிழிந்த கரும்பு போல வலுவிழந்து விடுகின்றது. இதன் இரகசியம் என்ன? எலும்பில் சுண்ணாம்பு சத்து குறைவதே இதற்கு முக்கிய காரணம் என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

மேற்கு பெர்லின் (டாட்)— ஆண்டுகள் பல செல்ல செல்ல, சிறுவன், இளைஞனுகிறுன்; இளைஞன் கிழவனுகிறுன். வயதுக்கு ஏற்ப உடலில் பல மாறுதல்கள் ஏற்படுகின்றன. வயது மாற்றத்திற்கு ஏற்ப, நமது எலும்புகளில் சுண்ணாம்பு (கால்சியம்) சத்து குறைவதை நீண்ட நாட்களாக மருத்துவர்கள் ஆராய்ந்து வந்திருக்கிறுர்கள். ஆனுல் சமீபத்தில்தான், உடல் வெப்பத்தை அளப்பதுபோல, எலும்பில் கால்சியம் சத்துஎந்தஅளவுக்குக் குறைந்திருக்கிறது என்பதை விசேஷ 'எக்ஸ்ரே' முறை மூலம் கண்டுபிடிக்க முடிகிறது. இவ்வித நுண்ணியசத்து ஒரு ஆய்வு முறை மூலம், எந்த குறிப்பிட்ட எலும்பிலும் எந்த அளவுக்கு வயது அல்லது நோய்காரணமாக கால்சியம் குறைந்திருக்கிறது என்பதை துல்லியமாகக் கண்டு பிடிப்பது சாத்தியமாகிறது.

மேற்கு பெர்லின் சுதந்திரப் பல்கலைக் கழக ரேடியோ கதிரியக்க நிலைய தலைவர் டாக்டர் எர்னஸ்ட் குரோ கால்ஸ்கி, இந்த நவீன முறையைக் கண்டு பிடித்திருக்கிறுர்.

40வது வயதில் தான் உடலில் அதிகமான அளவு கால்சியம் இருக்கிறது. அதன் பின்னர் கால்சியம் சத்து குறைய ஆரம்பிக்கிறது. வயதையும், ஆணு பெண்ணு என்பதையும் பொறுத்து, உடலின் கால்சியம் சத்தில் 40 சதவீதம் வரை குறைகிறது. பெண் என்றுல், கால்சியம் குறைவது அதிகமாகிறது.

கால்சியம் குறைவது, வயதாவதின் சிறு அறிகுறி என்றுலும், நீரிழிவு போன்ற வியாதிகள் வரும்போதும், கால்சியம் சத்து குறைவது மிகவும் அதிகமாகிறது.

கால்சியம் குறைவது, வயதாவதின் சிறு அறிகுறி என்றாலும், நீரிழிவு போன்ற வியாதிகள் வரும்போதும் கால்சியம் சத்து குறைகிறது. இச்சமயத்தில் 60 சதவீதம் வரை குறைகிறது. மிகவும் அதிகமான அளவில் கால்சியம் குறைந்தால், முதுகெலும்பு நோய்கள் உண்டாகின்றன. எலும்பில் கால்சியம் குறைவதற்கும், இரத்த நாளங்கள் கடினமாவதற்கும் சிறிது தொடர்பு இருக்கிறது. இரத்தக் குழாய்களில் கால்சியம் அதிகமாக, எலும்புகளில் கால்சியம் குறைந்துவிடுகிறது. 40 வயதான மனிதரின் எலும்பில் 1,000 கிராம் கால்சியம் இருந்தால், 70 வயதில் 800 கிராம் கால்சியம் தான் இருக்கும். ஆனால் அதே சமயத்தில் இரத்தக் குழாயில் 200 கிராம் கால்சியம் அதிகரித்து விடுகிறது. சுருக்கமாகச் சொன்னால் எலும்பு இழக்கும் கால்சியம் சத்துக்கு ஏற்ப, இரத்தக் குழாயில் கால்சியம் சத்து அதிகரித்து விடுகிறது. இவ்விதமாக உடலில் கால்சியம் சத்து தொடர்ந்து சீராக இருந்து வருகிறது. உடலில் நோய் ஏற்பட்டால் தான், கால்சியம் எலும்பிலிருந்து குறைகிறது. எலும்பில் கால்சியம் குறைவதைத் தடுக்கவழி என்ன என்பது குறித்து விஞ்ஞானிகள் தற்போது ஆராய்ந்து வருகிறார்கள்.

—யூ. பி. எஸ்.

உச்ச வரம்புச் சட்டத்தினால் உபரியாகக் கிடைக்கும் நிலங்கள் வினியோகம்

யாருக்கு, எவ்வளவு, மற்றும் இதர விவரங்கள் பற்றிய விதிகள்

உபரி நிலங்களை எப்படி வினியோகிப்பது என்பதற்கான விதிகளை சென்னை சர்க்கார் தயாரித்திருக்கிறார்கள். இந்த விதிகளின் பிரதிகள் இன்று அசெம்பிளி உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டன.

பின்கண்ட நபர்களும், சங்கங்களும் அந்த வரிசைக் கிரமப்படி உபரி நிலங்களைப் பெறத் தகுதியுள்ளவர்களாவார்கள்.

(1) உச்சவரம்பு சட்டத்தின் பலனாக தன்னுடைய நிலம் பூராவையுமே இழந்து விட்டவர்.

(2) பயிரிடும் சாகுபடியாளராகவோ, அல்லது நிலச் சொந்தக் காரராகவோ அல்லது இரண்டும் சேர்ந்தோ மூன்று ஸ்டாண்டர்ட் ஏக்கர்களுக்குக் குறைவாக உள்ளவர்.

(3) ராணுவத்தில் இருப்பவர் அல்லது முன்பு இருந்தவர்.

(4) நிலமில்லாத விவசாய தொழிலாளர்கள் அல்லது நிலமில்லாதவர்கள், அல்லது இந்த இருசாராரும் மெம்பர்களாயிருக்கும் கூட்டுறவு விவசாய சங்கம்.

இந்தச் சங்கத்திற்கு அளிக்கப்படும் நிலம். ஏற்கனவே அதனிடம் ஏதாவது நிலம் இருந்தால் அதையும் சேர்த்து அந்த சங்கத்தின் உச்சவரம்புக்கு மேல் போகக் கூடாது.

பிரதமர் சாஸ்திரியின் வாழ்க்கை வரலாறு

"மிக உன்னதமான நேர்மைக் குணம் படைத்தவர்; மனச் சாட்சியின்படி நடப்பவர்; கடினமாக உழைப்பவர்" இப்படியெல்லாம் நேருஜியால் வர்ணிக்கப்பட்டுள்ள திரு. லால்பகதூர் சாஸ்திரி சுயமுயற்சியின் சிறப்பால் மட்டுமே, மிக எளிய நிலையிலிருந்து நேருவுக்குப் பின்னர் இந்தியாவின் பிரதமர் என்ற ஸ்தானத்துக்கு உயர்ந்தவர்.

விடுதலைப் போராட்ட காலத்தில் சக கைதியாக இருந்த திரு. புருஷோத்தமதாஸ் தாண்டன் லால்பகதூரைப் பற்றிப் பின்வருமாறு பாராட்டியிருக்கிறார் :—

"மன நிதானத்துக்குப் பேர் போன மேதை அவர். மிகச் சிக்கலான நிலைமைகளையும் சாதுர்யமாகக் கையாண்டு, சமரச ஏற்பாடுகளை உருவாக்க வல்லவர்."

இந்தப் பாராட்டுதல்கள் அனைத்துக்கும் முற்றிலும் உரியவரான திரு. சாஸ்திரி மிக எளிய குடும்பத்தில் பிறந்தவர்.

காந்தி ஜயந்தியன்று பிறப்பு

1904-ல் காந்தி ஜெயந்தியன்று அக்டோபர் 2-ந் தேதி பிறந்தார். ஆனால், ஜாதகம் கணிப்பதற்குக்கூட வசதியில்லாத அவ்வளவு ஏழ்மை வாய்ந்த குடும்பத்தில் பிறந்தவர் அவர்.

சமீபத்தில் அவரை நிருபர்கள் "உங்களுக்கு ஜோசியத்தில் நம்பிக்கை உண்டா?" என்று கேட்ட போது, "என் ஜாதகத்தை யாராவது எழுதியிருந்தால் தானே, எனக்கு ஜோசியத்தில் நம்பிக்கை உண்டா, இல்லையா என்பதைச் சொல்வதற்கு?" என்று வேடிக்கையாகப் பதிலளித்தார்.

அவரது தந்தை திரு. சாரதா பிரசாத் முதன் முதலில் ஓர் பள்ளி யாசிரியராக இருந்தார். பின்னர் மொகல்சராயில் சர்க்கார் உத்தியோகம் ஒன்றில் சேர்ந்தார். அங்குதான் லால்பகதூர் பிறந்தார். ஆனால் அவர் பிறந்த 18 மாதங்களுக்குள்ளாம் அவரது தகப்பனார் மறைந்தார். அதன் பின்னர் குழந்தை லால்பகதூர் தாய்வழிப் பாட்டனார் சவரட்சணையில் வளர்ந்து வந்தார்.

காசியில் ஹரிச்சந்திரா பள்ளியில் சேர்ந்து ஆரம்பக்கல்வி பயின்றார். ஒரு தரம் அவரிடம் படகுக் கட்டணத்துக்குக்கூடப் பணமில்லை. புத்தகப் பையைத் தலையில் கட்டிக்கொண்டு கங்கை நதியில் நீந்திச் சென்று பள்ளிக்கூடம் போனார். இதை ஒரு பிரமாதமாகச் சொல்வதுகூட அவருக்குப் பிடிக்கவில்லை. "இப்

போதுங்கூட நூற்றுக்கணக்கான குழந்தைகள் இந்த நிலைமையில் தானே இருந்து வருகிறார்கள்'' என்கிறார்.

இவரது பாட்டனாரும் சரி, தாயாரும் சரி, லால்பகதூர் அரசியல் வாழ்க்கையை மேற்கொள்வார் என்று நினைக்கவோ அல்லது மேற்கொள்ள வேண்டுமென்று ஆசைப்படவோ இல்லை. மதப்பற்றை ஊட்டி வளர்த்து வந்தார்கள்.

பிற்காலத்தில் அவர் காசி வித்தியா பீடத்தில் சேர்ந்ததற்கு இந்தச் சமய உணர்ச்சியும் ஓரளவு காரணமென்று சொல்லலாம்.

அவர் படித்துக்கொண்டிருந்த போது 1921-இல் காசிக்கு மகாத்மாஜி வந்திருந்தார். மாணவர்கள் பள்ளிகளைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்று மகாத்மா ஒரு கூட்டத்தில்கேட்டுக்கொண்டார். அந்த அறை கூவலுக்குச் செவி சாய்த்துச் சிறுவன் லால்பகதூர் தனது படிப்பைத் துறந்துவிட்டு சத்தியாக்கிரகப் போராட்டத்தில் இறங்கிவிட்டார். சிறு வயது என்ற காரணத்தால் சிறிது நேரத்துக்கெல்லாம் அவரை விடுத்துவிட்டார்கள்.

பிரிட்டிஷ் அரசாங்கம் நடத்தும் பள்ளிகளில், அல்லது அரசாங்க மான்யம் பெறும் பள்ளிகளில் படிக்கலாகாது என்பது சத்தியாக்கிரக இயக்கத்தின் ஒரு பகுதியாகும். அதனால் லால்பகதூர் மறுபடியும் பள்ளிக்கூடத்தில் சேரவில்லை. சமூக சேவையில் பற்றுக்கொண்டு லோக் சேவா மண்டலில் சேர்ந்தார்.

சில ஆண்டுகள் கழிந்தன. பள்ளிக்கூடப் பகிஷ்காரத்தினால் கல்வி வாய்ப்பை இழந்தவர்களுக்காக காசி வித்யாபீடம் அமைக்கப்பட்டது. லால்பகதூர் இதில் சேர்ந்தார். 22 அல்லது 23 வயதில் கல்வியில் தேறினார். அவருக்கு 'சாஸ்திரி' பட்டம் வழங்கப்பட்டது. இது இன்றைய பி.ஏ. பட்டத்துக்குச் சமம். அந்நாள் முதல் லால்பகதூர் என்ற பெயருடன் சாஸ்திரி என்ற பட்டமும் ஒட்டிக்கொண்டது.

காசி வித்யா பீடத்தில்தான் அவர் படிப்பை முடித்துக் கொண்டு "சாஸ்திரி" என்ற பட்டத்தைப் பெற்றார். "சாஸ்திரி" என்றபெயர் வரக் காரணம் இதுதான். பலர் நினைப்பது போல் குடும்பப்பெயரோ அல்லது வகுப்புப் பெயரோ அல்ல அது.

நேருவை அவர் "பண்டிட்ஜி" என்று அழைத்தபோதிலும், அவரை நேரு "சாஸ்திரி" என்று குறிப்பிடாமல் "லால்பகதூர்" என்றே குறிப்பிட்டு வந்தார்.

வித்யா பீடத்தில் அவர் அரசியல், சரித்திரம், இந்திய கலாசாரம் ஆகியவற்றைப் பாடங்களாக எடுத்துக் கொண்டு பயின்றார்.

காசி வித்யா பீடத்தில் லால்பகதூர் படித்த நாளில் ஆசிரியர்களாக இருந்து வந்தவர்களுள்

காங்கிரஸ் சோஷலிஸ்டு இயக்கத்தின் ஸ்தாபகரான ஆசாரிய நரேந்திர தேவும், உத்திரப்பிரதேச முதன் மந்திரியாகப் பணியாற்றிய டாக்டர் சம்பூர்ணனந்தும் குறிப்பிடத்தக்கவர்கள்.

தாண்டன் பாபுவின் சீடர்

கல்வி முடிந்த பின் லால்பகதூர் காசியிலிருந்து அலகாபாத் வந்து சேர்ந்தார். அரசியல் மிதவாதியான கோபாலகிருஷ்ண கோகலேயின் இந்திய சேவா சங்கத்துக்குப் போட்டியாக லாலா லஜபதிராய் மக்கள் சேவா சங்கத்தை நடத்திவந்தார். அதில் லால்பகதூர் சேர்ந்தார். முழு நேர ஊழியராகப் பணிபுரிந்தார். அப்போது காங்கிரஸ் தொண்டில் ஈடுபட்டு அவருக்கும், ஜவகர்லால் நேருவுக்கும் நெருங்கிய பழக்கம் உண்டாயிற்று. ஆனால் அரசியல் தூய்மையை விரும்பிய பாபு புருஷோத்தமதாஸ் தாண்டனுடன் சேர்ந்துதான் லால்பகதூர் பணியாற்றினர்.

ஒருவிதத்தில் தாண்டன் லால்பகதூரின் அரசியல் குருவென்று சொல்லலாம். உள்ளத்தில் தோன்றும் எண்ணத்தை ஒளிவு மறைவின்றி பளிச்சென்று வெளியிடும் குணம் அவரிடமிருந்து பெற்றதே. நேருஜியிடம் பளிச்சென்று மனத்திலுள்ளதைச் சொல்லிவிடும் பண்பு இவ்விதம் வந்ததே.

சிறையும் சேவையும்

1931-ல் சட்டமறுப்பு இயக்கத்தில்தான் சிறைவாச அனுபவம் முதல் முதலாகக் கிடைத்தது. 1940 தனி நபர் சத்தியாக்கிரகம் வந்தது.

இவர் சிறை புகுந்தார் 1942 இல். "வெள்ளையனே வெளியேறு" இயக்கம் வந்தது; லால்பகதூரை வலித்துச் சென்றது.

சுதந்திரப் போராட்ட காலத்தில் 8 தடவை கைதாகி, மொத்தம் 9 வருட காலம் சிறையில் கழித்திருக்கிறார்.

முதலாவது பதவி

உப்பு சத்தியாக்கிரகத்தில் கலந்துகொண்டு 2 வருடகாலம் சிறையிலிருந்து விடுதலையான பிறகு, திரு. லால்பகதூர் அலகாபாத் நகரசபை அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் முதல் முதலாக வகித்த பதவி இதுவே. நகரசபை அங்கத்தினராகவும், அபிவிருத்தி டிரஸ்ட் அங்கத்தினராகவும்-வருடகாலம் பதவி வகித்தார்.

இதற்குள் காங்கிரஸ் அலுவல்களில் இவர் தீவிரமாக ஈடுபடத் தொடங்கி விட்டிருந்தார்.

முதலில் ஜில்லா காங்கிரஸ் கமிட்டி காரியதரிசியாகவும், பின்னர் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1935-இல் பிரதேச காங்கிரஸ் கமிட்டியின் பொதுக் காரியதரிசியானர்.

1936-இல் மந்திரி பதவி யேற்பது என்று காங்கிரஸ் முடிவு செய்தது. 1937-இல் காங்கிரஸ் மந்திரி சபை அமைத்தது. ஐக்கிய மாகாணத்தில் மந்திரிகளில் ஒருவரானர், லால்

பகதூர் சாஸ்திரி. காங்கிரஸ் பதவிகளைத் துறக்கும் வரையில் இருந்தார். 1946-ல் காங்கிரஸ் மீண்டும் மந்திரிசபை அமைத்தது. உள்துறை மந்திரியானார், லால்பகதூர் சாஸ்திரி. 1951-ல் பாபு தாண்டன் காங்கிரஸ் அக்ராசனர் பதவியை விட்டு விலகிய ஓராண்டுக்குப் பின்னர் லால்பகதூர் காங்கிரஸ் பொதுக் காரியதரிசி பதவியை ஏற்றார். அப்போது நேரு பிரதமராகவும். காங்கிரஸ் அக்ராசனராகவும் இருந்தார்.

ஏற்பும் துறப்பும் தண்ணீர் பட்டபாடு

பின்னர் அவர் பல தடவை மந்திரி பதவிகளை ஏற்றும், துறந்தும் இருக்கிறார்.

காமராஜ் திட்டத்தின் கீழ் யூனியன் உள்துறை மந்திரி பதவியைத் துறந்தது சமீபத்திய நிகழ்ச்சி. இம்மாதிரி அவர் பதவியைத் துறப்பதென்பது இது முதல் தடவையல்ல. 1951-ம் வருடத்தில் கட்சிப் பணிகளில் முழுக்கவனம் செலுத்துவதற்காக (அதாவது. அவர் அ. இ. கா. க. பொதுக் காரியதரிசியாக ஆன போது) மந்திரி பதவியை ராஜிநாமாச் செய்தார்.

மறுபடியும் 1956-இல் ஒரு ரயில் விபத்தையடுத்து அவர் ரயில்வே மந்திரி பதவியை ராஜிநாமாச் செய்தார்.

மத்திய சர்க்காரில்

1952-ம் வருஷப் பொதுத் தேர்தலுக்குப் பின்னர் அவர் ராஜ்யசபை அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ரயில்வே மந்திரியாக நியமிக்கப் பட்டார்.

அப்போதிருந்தே அவர், (இருதடவை ராஜிநாமா செய்த தருணங்கள் போக) தொடர்ந்து நேரு மந்திரி சபையில் இருந்து வந்திருக்கிறார்.

1961இல் திரு. பந்த் காலமான பிறகு, அவர் உள்துறை மந்திரியானார். அதற்கு முன்பு தொழில் வர்த்தக இலாகா பொறுப்பிலிருந்து வந்தார். 1962-ம் வருட தேர்தலில் அலகாபாத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார். மீண்டும் உள்துறை மந்திரியாக நியமிக்கப்பட்டார்.

சிக்கல் தீர்க்கும் சாஸ்திரி

ஸ்தாபன விவகாரங்களில் சிக்கல்களோ, தகராறுகளோ எழுந்தபோதெல்லாம் தீர்த்து வைப்பதற்காக மேலிடம் அவரைத்தான் அனுப்பி வைப்பது வழக்கம்.

தடாலடி வழிகள் அவருக்குப் பரிச்சயமானதல்லவென்ற போதிலும் நயமாகப் பேசியே தகராறுக்கு சமரசத் தீர்வு காண்பதில் சமர்த்தர் அவர். எல்லோரையும் சிநேகம் பிடித்துக் கொள்ளும் கலை அவருக்குக் கை வந்த ஒன்றாகும். எளிய சுபாவத்தின் மூலமே அனைவரையும் ஆகர்ஷித்து விடுவார்.

சமரச சாதனைகள்

ஸ்தாபனத் துறையிலும் நிர்வாகத்துறையிலும் அவரது சம

ரச முயற்சிகளின் வெற்றிக்கு எடுத்துக் காட்டுகளாக எத்தனையோ சாதனைகளைச் சுட்டிக் காட்ட முடியும்.

அஸ்ஸாம் ராஜ்யத்தில் கச்சார் பகுதியில் மொழிப் பிரச்னைக்காக அவர் ஒரு ஏற்பாட்டை உருவாக்கினார். "சாஸ்திரி ஏற்பாடு" என்றே அதற்குப் பெயர் வந்துவிட்டது.

பஞ்சாபில் அகாலிகளின் தனி ராஜ்யக் கிளர்ச்சியை உறுதியாகவும், அதேசமயத்தில் நயமாகவும் சமாளித்து வெற்றி கண்டார் அவர். (இவரது எளிய தோற்றத்திற்குப் பின்னால் மலைபோன்ற உறுதியே மறைந்து கிடக்கிறது, என்று ஒரு சமயத்தில் திரு. தாண்டன் குறிப்பிட்டிருக்கிறார்.

உள்துறை மந்திரியாயிருந்தபோது, லஞ்ச ஊழலை ஒழிக்க இவர் எடுத்துக்கொண்ட பூர்வாங்க நடவடிக்கைகள்தான் சந்தானம் கமிட்டியை அமைத்ததும், மத்திய புலன் விசாரணைக் குழுவை ஏற்படுத்தியதும்.

சமீபத்தில் காஷ்மீரில் நடைபெற்ற "புனித கேச களவு" சம்பந்தமாக ஏற்பட்ட கிளர்ச்சியை சகலருக்கும் திருப்தியளிக்கும் விதத்தில் இவர் கையாண்டது குறிப்பிடத்தக்கது. நயந்துறைகள் மூலமே இவர் காஷ்மீர் மந்திரிசபை மாறுதலை ஏற்படுத்தினார்.

நேப்பாளத்துக்கும் இந்தியாவுக்கும் இடையில் சமூக உறவை ஏற்படுத்துவதில் இவர் கண்டுள்ள வெற்றியே இவரது சாதனைகளுள் சிகரம் என்று சொல்லலாம்.

1960 டிசம்பரில் கொய்ராயா மந்திரிசபையை மன்னர் டிஸ்மிஸ் செய்தபிறகு, இரு நாடுகளுக்கிடையில் ஏற்பட்ட மனக் கசப்பை அகற்றுவதில் வெற்றி கண்டார்.

பண்டித பந்த் இறந்ததை யடுத்து மிகவும் சர்ச்சைக்கிடமான ஆட்சிமொழி மசோதாவை பார்லிமெண்டில் கொணர்ந்து நிறைவேற வைத்தார். இவரது புகழ் மேலும் ஓங்கியது,

சாஸ்திரியின் வெற்றியின் ரகசியம் இதுதான். பேச்சு வார்த்தைகள் நடந்துகொண்டே இருக்கும். இருதரப்பினரும் பேசித் தீர்வு கண்டதுபோல சாஸ்திரி காணும் பைசல் இறுதியில் மேலோங்கி நிற்கும். சாஸ்திரி வெற்றி பெறும் வழி இதுவேயாகும்.

இந்த "சாஸ்திரி முறை" கடைசி வரை நிலைக்குமா? வருங் கால வரலாறுதான் பதில் அளிக்க இயலும். மன்னன் ஆவதைவிட மன்னன் ஆக்குவதில் தான் சாஸ்திரியின் திறமைகள் பூராவும் அடங்கியுள்ளது. உறுதியைக் கைவிடுவது அவரது குணமன்று. மேல் பதவிக்கான போட்டி வருமானால் தன்னுடைய குணக் கோட்டைக்குள் புகுந்து தான் மனதில் உதித்த ஒருவருக்குக் கிரீடம் கிடைக்கச் செய்வார்.

படையெடுப்பிடைக் களை எடுப்பு

கம்யூனிஸ்டு சீனர்கள் நேபாப் பகுதியில் ஊடுருவியதையடுத்து நடந்த வரலாறு: லால்பகதூர் அஸ்ஸாமுக்குச் சென்று பார்த்து விட்டுத் திரும்பியிருந்தார். மந்திரி சபையிலிருந்து கிருஷ்ண மேனனை விலக்கவேண்டுமென்று பார்லிமெண்ட் காங்கிரஸ் நிர்வாகக் கமிட்டி சிபாரிசு செய்தது. ஆனால் இந்தச் சிபாரிசை பிரதம மந்திரி ஏற்குமாறு செய்த பெருமை லால்பகதூரைச் சாரும். அவர் காட்டிய உறுதியே நேருஜியை இணங்க வைத்தது.

சமீபத்தில் முன்னாள் எண்ணெய் வள மந்திரி திரு. கே. டி. மாளவியா பஞ்சாப் முதல் மந்திரி மீது விசாரணை நடத்த நேருஜி ஒப்புக் கொண்டதற்கும் லால்பகதூர் ஆலோசனையே காரணம்.

காமிராக் கூச்சம்

பால்யப் பருவத்தில் அவர் புகைப் படம் எதுவும் எடுத்துக் கொண்டதில்லை என்பது கூட ஓர் ஆச்சரியம் இல்லை. படுக்கட்டணத்துக்குக் கூடப் பணம் இல்லாதவரிடம் புகைப் படம் போன்ற ஆடம்பரங்களுக்கு எங்கே பணம் இருந்திருக்கப் போகிறது?

ஆனால், இப்போது கூடக் காமிராவைக் கண்டால் அவருக்குக் கூச்சம் என்பது தான் வேடிக்கையான விஷயம்! தாம் குள்ளமாயிருப்பதால், மாஜி. யு. எஸ். தூதர் கால்பிரெய்த் போன்றவர்களுக்குப் பக்கத்தில் நிற்கும்படியான சந்தர்ப்பங்களைக் கூடுமானவரையில் தவிர்த்து விடுவதாக வேடிக்கையாக ஒரு சமயம் கூறினார்.

லால்பகதூர் மிகக் குறைந்த எடைதான் இருக்கிறார். ஆனால் அவருடைய சுறுசுறுப்பையும், கடின உழைப்பையும் நேரடியாகப் பார்ப்பவர்களுக்கு, "இத்தனையுண்டு, மனிதர் எப்படித்தான் இப்படி உழைக்கிறார்!" என்று ஆச்சரியமாயிருக்கும்.

நேருவைப் போலவே இவரும் இரவில் வெகு நேரம் கண்விழித்து அலுவல்களைக் கவனிப்பார். அநேக சந்தர்ப்பங்களில் ஊணுறக்கமின்றி அல்லும் பகலும் உழைத்திருக்கிறார்.

லால்பகதூர் நல்ல இந்தி எழுத்தாளர்; மேடம் கியூரியின் வாழ்க்கை சரிதத்தை இந்தியில் மொழி பெயர்த்திருக்கிறார்.

தீர்க்க தரிசனமா?

நேருவின் அந்திமக் காலத்தில் லால்பகதூரிடம் எவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தார் என்பதற்கு, புவனேசுவரத்தில் நோய்வாய்ப்பட்டு டில்லி திரும்பிய கையோடு அவர் முதன் முதலாகச் செய்த வேலை லால்பகதூரை மந்திரியாக நியமித்தார் என்பதே. போதாதா?

"எனக்கு என்ன வேலை தருகிறீர்கள்?" என்று லால்பகதூர் நேருவைக் கேட்டார். "என் வேலையைச் செய்யுங்களேன்"

என்று நேரு பதிலளித்தார். பின்னால் நடக்க விருப்பதை அறிந்து சொன்ன வார்த்தைகளா இவை?

1964ல் பிரதமரானார்

1964 ஜூன்மாதம் 9-ந் தேதி பிரதம மந்திரியாக லால்பகதூர் சாஸ்திரி பதவி ஏற்றார். அவர் பதவி ஏற்றவுடனேயே தேக அசௌக்யமுற்றார். ஒரு மாத காலத்திற்குத் தமது வீட்டிலிருந்து கொண்டே காரியாலய அலுவல்களைக் கவனித்து வந்தார். ஆனால் விரைவிலேயே குணமடைந்து கடைசி வரை நல்ல ஆரோக்கியத்துடனேயே காணப்பட்டார்.

பிரதம மந்திரியாகப் பதவி வகித்தபோதும், யூனியன் மந்திரி சபையிலும், காங்கிரஸிலும் வேறு பதவிகள் வகித்தபோதும் சாஸ்திரி பல சிறந்த காரியங்களைச் செய்திருக்கிறார்.

பார்லிமெண்டிலும் ஆளும் கட்சியினரும், எதிர்க் கட்சியினரும் அவரிடம் பெருமதிப்பு வைத்திருந்தனர்.

நேரு காலமான பிறகு கட்சித் தலைவர் யார் என்ற பிரச்னை எழுந்த போது, சாஸ்திரி பின்னணியிலேயே இருந்தார். காங்கிரஸ் கட்சி தம்மை ஏகமனதாகத் தேர்ந்தெடுத்தால் தான் பிரதம மந்திரி பதவியை ஏற்றுக் கொள்ள முடியும் என்பதை அவர் தெளிவுபடுத்தினார்.

பின்னர் எல்லா ராஜ்யங்களும், பார்லிமெண்ட் காங்கிரஸ் கட்சியில் மிகப் பெரும்பான்மையானவர்களும் திரு. சாஸ்திரியே தலைமை வகிக்கவேண்டும் என்று விரும்பினர். கட்சி மெம்பர்களுடன் ஆலோசனை நடத்திய காங்கிரஸ் அக்ராசனர் திரு. காமராஜ் சாஸ்திரி தலைவராவதற்கு ஆதரவாகக் கட்சியில் ஒற்றுமை நிலவுவதாக அறிவித்தார்.

19 மாத காலத்தில் அவருடைய பணிகள்

சாஸ்திரி பதவி வகித்த 19 மாத காலத்தில் அண்டையிலுள்ள நாடுகளுடன் இந்தியாவின் உறவு சிறந்த முறையில் அமையும்படிச் செய்தது அவருடைய முக்கியப் பணிகளில் ஒன்றாகும்.

தேச மக்களுக்கு முதல் தடவையாக ரேடியோவில் பிரசங்கம் நிகழ்த்தியபோது, சாஸ்திரி கூறியதாவது:

"நமது பாதை தெளிவானது. உள்நாட்டில் அனைவருக்கும் சுபிட்சம் அளிக்கக்கூடிய ஜனநாயக சோஷலிஸத்தை ஏற்படுத்துவதும், உலக சமாதானத்தை நிலைநிறுத்துவதும், எல்லா நாடுகளி

னும் நட்புறவு வைத்துக்கொள்வதும் நமது கொள்கையாகும். இந்த லட்சியங்களுக்கு நம்மை நாம் மீண்டும் அர்ப்பணித்துக் கொள்வோமாக."

அண்டையிலுள்ள நாடுகளுக்கு இந்தியாவின் நட்புறவுச் செய்தியைக் கொண்டு போவதற்காக முதலில் நேபாளம் சென்றார். கெய்ரோவில் நடந்த கோஷ்டி சேரா நாடுகள் மகாநாட்டில் கலந்து கொள்வதற்காகச் சென்று விட்டுத் திரும்பும் வழியில் அயூப் கானுடன் பேசுவதற்காகக் கராச்சியில் சிறிது நேரம் தங்கினார்.

பர்மா ஜனாதிபதி நீவின் விடுத்திருந்த அழைப்பைக் கவுரவிக்கும் பொருட்டு, உள்நாட்டில் பல சொந்த ஜோலிகளுக்கிடையே சமீபத்தில் ரங்கூன் சென்றார்.

இலங்கை இந்திய வமிசாவழியினர் பற்றி இலங்கை சர்க்காருடன் ஓர் உடன் பாட்டைச் செய்து கொண்டு, இரு நாடுகளிடையே உறவில் எரிச்சலூட்டக் கூடிய அம்சத்தை அகற்றினார்.

உண்மையான தேசிய வீரர்

சமீபத்தில் காஷ்மீரில் பாகிஸ்தான் தோற்றுவித்த நிலைமையைச் சமாளிப்பதில் அவர் உறுதியுடன் நடந்துகொண்டதன் மூலம் அவருடைய புகழ் மேலும் அதிகரித்தது. லாகூர், சியால்கட் முனைகளில் இந்தியத் துருப்புகளை அனுப்பி, பாகிஸ்தான் ஆக்கிரமிப்பை முறியடிப்பது என்று செய்த முடிவு அவரை ஒரு பெரிய தேசிய வீரராக்கி விட்டது.

இந்தியா பாகிஸ்தான் சண்டைக்குப் பிறகு அவர் சென்ற இடங்களில் எல்லாம் லட்சக் கணக்கான மக்கள் அவரை எதிர் கொண்டு வரவழைத்தனர்.

பம்பாய், கல்கத்தா, சென்னை போன்ற பெரிய நகரங்களிலும், கிராமங்களிலும் அவருடைய பிரசங்கத்தைக் கேட்பதற்காகத் திரளான மக்கள் கூடினர்.

பாகிஸ்தான் ஆக்ரமிப்பைச் சமாளித்த முறை அவருடைய பெருமையை உயர்த்தியதுடன், உலக அரங்கில் இந்தியாவின் பெருமையையும் உயர்த்தியது.

கடைசியாக பாகிஸ்தானுடன் உறவை அபிவிருத்தி செய்து கொள்ளும் பொருட்டு டாஷ்கண்ட் சென்று அயூப்கானுடன் டாஷ்கண்ட் பிரகடனத்தில் கையெழுத் திட்டது, அவருடைய சமாதான ஆர்வத்துக்குச் சிகரமாக அமைந்தது.

—"தினமணி"

நீ எவ்வளவுதான் படித்திருந்தாலும், எத்தனை ஆயிரம் புத்தகங்களைத்தான் வைத்திருந்தாலும், அதனால் மட்டும் பயனில்லை. உன் பெட்டியில் கொஞ்சம் பணமும் இருக்கவேண்டும். அப்போதுதான் வாழ்க்கை இனியதாய் இருக்கும்.

—சாசர்.

உலகப் புகழ்மிக்க தாஷ்கெண்ட் அறிக்கை

இரு நாடுகளிடையே உறவு வளர்ச்சிக்குத் தக்க ஏற்பாடு

தூதர்களை மீண்டும் அனுப்ப ஒப்புதல்
பிறர் விவகாரங்களில் தலையிடாமல் இருக்க இணக்கம்

10-1-66 அன்று பிரதமர் லால்பகதூர் சாஸ்திரியும், பாகிஸ்தான் அதிபர் அயூப்கானும் கையெழுத்திட்ட டாஷ்கண்ட் பிரகடனத்தின் முழு வாசகம் வருமாறு :—

இந்தியாவின் பிரதமரும். பாகிஸ்தான் ஜனாதிபதியும் டாஷ்கண்டில் சந்தித்து, இந்தியா - பாகிஸ்தான் இடையே உள்ள உறவு முறை பற்றி விவாதித்தார்கள். தங்கள் நாடுகள் இடையே மாமூலானதும், சமாதானமான துமான உறவைமீண்டும் ஏற்படுத்தவும் தங்கள் மக்கள் இடையே நட்புறவையும், நல்லெண்ணத்தையும் வளர்க்கவும் தங்கள் உறுதியை அவர்கள் தெரிவிக்கிறார்கள். இந்தியா, பாகிஸ்தான் 60 கோடிமக்கள் நலனுக்கு இந்த நோக்கங்களை அடைவது ஜீவாதாரமான முக்கியத்துவமுள்ளது என அவர்கள் கருதுகிறார்கள்.

ஐ. நா. சாஸனத்தின்படி இந்தியா பாகிஸ்தான் இடையே அண்டைநாட்டு நல்லுறவை ஏற்படுத்துவதற்கு இருதரப்பும் முழு முயற்சி செய்ய வேண்டும் என இந்தியப் பிரதமரும், பாகிஸ்தான் ஜனாதிபதியும் ஒப்புக் கொள்கின்றனர். ஐ. நா. சாஸனத்தின்படி படைபல உபயோகத்தை நாடாதிருக்கவும். சமாதான ரீதியில் தங்கள் தகராறுகளைத் தீர்த்துக்கொள்ளவும் தங்கள் பொறுப்பை அவர்கள் மீண்டும் உறுதி செய்தனர்.

தங்கள் பகுதியில், குறிப்பாக இந்தியா—பாக். உபகண்டத்தில் சமாதானத்துக்காக இருநாடுகள் இடையே பதட்டநிலை நீடிக்கக் கூடாது என அவர்கள் கருதுகின்றனர். இந்தியா, பாக் மக்களின் நலனுக்கு அது ஏற்றதல்ல. இந்தச் சூழ் நிலையில் ஜம்மு - காஷ்மீர் பற்றி விவாதிக்கப்பட்டது. இருதரப்பாரும் தங்கள் நிலைகளைத் தெரிவித்தனர்.

1966 பிப்ரவரி 25ம் தேதிக்குப் பிந்தாமல் 1966 ஆகஸ்ட் 5ம் தேதிக்கு முன்பு இருந்த நிலைகளுக்கு இரு நாடுகளின் ஆயுதபாணிகள் அனைவரையும் வாபஸ் பெற இந்தியப் பிரதமரும். பாகிஸ்தான் ஜனாதிபதியும் இசைந்தனர். போர் நிறுத்த எல்லையில் போர்நிறுத்த நிபந்தனைகளை இரு தரப்பாரும் கடைப்பிடிப்பார்கள்.

மற்றவர் உள் விவகாரங்களில் தலையிடாதிருக்கும் கொள்கை அடிப்படையில் இந்தியா - பாக் உறவு இருக்க வேண்டும் என இருவரும் சம்மதித்தனர்.

மற்ற நாட்டுக்கு எதிராக தங்கள் நாட்டில் பிரசாரம் நடப்பதைத் தடுக்க அவர்கள் இசைந்தனர். இரு நாடுகள் இடையே நட்புறவை வளர்க்கும் பிரசாரத்துக்கு அவர்கள் ஊக்கமளிப்பார்கள்.

பாகிஸ்தானில் பணிபுரியும் இந்திய தூதரும், இந்தியாவில் பணிபுரியும் பாகிஸ்தான் தூதரும் தங்கள் பதவிகளுக்குத் திரும்பவேண்டும் என இந்தியப் பிரதமரும் பாகிஸ்தான் ஜனாதிபதியும் இசைந்தனர். இருநாடுகளின் தூதரகங்கள் மீண்டும் மாமூலாகச் செயலாற்ற வேண்டும் என அவர்கள் ஒப்புக் கொண்டனர், ராஜதந்திர உறவு பற்றிய 1961ம் வருடத்திய வியன்னா கோட்பாட்டை இரு சர்க்கார்களும் அனுசரிப்பார்கள்.

பொருளாதார, வர்த்தக உறவுகளையும், போக்குவரத்தையும் மீண்டும் ஏற்படுத்தவும், இந்தியா பாக். இடையே கலாசார பரிவர்த்தனை செய்து கொள்ளவும் நடவடிக்கைகளைப் பரிசீலிக்க அவர்கள் இசைந்தனர். இரு நாடுகள் இடையேயுள்ள ஒப்பந்தங்களை நிறைவேற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் ஒப்புக் கொள்ளப்பட்டது.

போர்க்கைதிகளைத் திருப்பி அனுப்புவதற்கு தங்கள் அதிகாரிகளுக்குக் கட்டளையிடவும் அவர்கள் சம்மதித்தார்கள்.

அகதிகள், கள்ளக் குடியேறக் காரர்களை வெளியேற்றுவது பற்றிய பிரச்னைகளை இருதரப்பாரும் தொடர்ந்து விவாதிக்க வேண்டும் என்றும் அவர்கள் ஒப்புக்கொண்டனர். மக்கள் வெளியேறுவதைத் தடுக்கும் சூழ்நிலையை இரு தரப்பாரும் ஏற்படுத்தவேண்டும் என்றும் அவர்கள் இசைந்தனர். போர் சம்பந்தமாக இரு தரப்பாரும் கைப்பற்றிய சொத்துக்களையும், பொருட்களையும் திருப்பியனுப்பும் பிரச்சினையை விவாதிக்கவும் அவர்கள் சம்மதித்தனர்.

இரு நாடுகளுக்கும் நேரடி அக்கறையுள்ள விஷயங்கள் பற்றி மிக உயர்ந்த கட்டத்திலும், மற்ற கட்டங்களிலும் இரு தரப்பும் தொடர்ந்து சந்திக்க வேண்டும் என அவர்கள் இசைந்தனர். கூட்டு இந்தியா-பாக். குழுக்களை அமைப்பதன் அவசியத்தை உணர்ந்தனர். மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதை தங்கள் சர்க்கார்களுக்கு அவை தெரிவிக்கும்.

பரஸ்பரம் திருப்திகரமான பலனை அளித்த இக்கூட்டத்துக்கு ஏற்பாடு செய்வதில் ஆக்கபூர்வமான, நேசமான பங்கு வகித்த ரஷிய தலைவர்களுக்கும் ரஷிய சர்க்காருக்கும் தங்கள் பாராட்டுதலையும், நன்றியையும் இந்திய பிரதமரும், பாகிஸ்தான் ஜனாதிபதியும் தெரிவிக்கிறார்கள். மகத்தான உபசரிப்புக்கும், தாராளமான விருந்தோம்பலுக்கும் உஸ்பெக்கிஸ்தான் சர்க்காருக்கும், மக்களுக்கும் அவர்கள் நன்றி தெரிவிக்கிறார்கள். இந்தப் பிரகடனத்துக்கு சாட்சியாக இருக்க ரஷிய பிரதமரை அவர்கள் அழைக்கிறார்கள்.

அருமைப் பிரதமர் லால்பகதூரின் மறைவு :

டில்லியில் மாபெரும் இரங்கற் கூட்டம்

❋

உலகத் தலைவர்கள் அஞ்சலி

●

இந்திய சகோதரர்களின்' துக்கத்தைப் பகிர்ந்து இரஷியப் பிரதமர் உரை

❋

அமெரிக்க மக்களின் கண்ணீரையும், வருத்தத்தையும் ஹம்ப்ரீ தெரிவித்தார்

●

ஜனவரி 12-ஆம் தேதி மாலை புது டில்லியில் நடந்த இரங்கற் கூட்டத்தில் திரு. லால்பகதூர் சாஸ்திரிக்கு உலகத் தலைவர்கள் அஞ்சலி செலுத்திப் புகழ் மாலை சூட்டினர்.

திரு. சாஸ்திரியின் மரணம் குறித்து இரஷ்ய மக்கள் அனைவரும் திடுக்கிட்டதாகவும், இந்திய மக்களின் துக்கத்தை அவர்கள் பகிர்ந்து கொள்வதாகவும் இரஷ்ய பிரதமர் கோசிஜின் கூறினர்.

துக்கத்தில் மூழ்கியுள்ள நாட்டுக்கு அமெரிக்க மக்களின் கண்ணீரையும், வருத்தத்தையும் கொண்டு வந்திருப்பதாக யு. எஸ். உப ஜனாதிபதி ஹம்ப்ரி கூறினர்.

கூட்டத்துக்கு ராஷ்டிரபதி ராதாகிருஷ்ணன் தலைமை வகித்தார்.

கோசிஜின்

டாஷ்கண்ட சந்திப்பின் போது, சாஸ்திரியை நன்கு அறிய வாய்ப்பு கிடைத்ததாக கோசிஜின் கூறினர். "திரு. சாஸ்திரி பெரிய மனிதர். விவேகம் செறிந்த அரசியல்வாதி. பொறுமையுடன் பிரச்சினைகளைப் புரிந்து கொள்ள அவர் முயற்சித்து, உறுதியான முடிவுகளைச் செய்தார்.

உயிர் பிரிய மூன்று மணி நேரத்துக்கு முன்பு தான் அவரைக்

கடைசியாக சந்தித்தேன். உலக சமாதானத்தில் அவர் எவ்வாறு அக்கறை கொண்டிருந்தார் என்பது நினைவுக்கு வருகிறது. டாஷ்கண்ட் மகா நாட்டின் வெற்றிக்கு அவர் பெருமளவுக்குக் காரணமாக இருந்தார். டாஷ்கண்ட் பிரகடனம் சமாதான, நட்புறவு சூழ்நிலையை ஏற்படுத்தும் என்று திரு. சாஸ்திரி என்னிடம் கூறினார்.

அவர் மறைந்தது மிகவும் வேதனை தருகிறது. இந்தத் திடீர் அதிர்ச்சியைத் தெரிவிப்பதற்குப் போதிய வார்த்தைகள் இல்லை.

டாஷ்கண்ட் உடன்பாடு இரு நாடுகளுக்கும் பயனளிக்கும். இரு தேச மக்கள் போரை விரும்பவில்லை. அமைதியையும், முன்னேற்றத்தையும் விரும்புகிறார்கள். ஆயுதங்களும் குண்டுகளும் அவர்களுக்குத் தேவையில்லை. ஆனால் உணவும், உடையும், உறைவிடமுமே அவர்களுக்குத் தேவையானவை.

இந்தியாவும், பாகிஸ்தானும் படைபல உபயோகத்தை நிராகரிக்கவும், வேறுபாடுகளை சமாதான வழிகள் மூலம் தீர்க்கவும் உறுதி கூறியுள்ளன. அவற்றிடையே சகஜ உறவை டாஷ்கண்ட் பிரகடனம் ஏற்படுத்தும். நண்பர்களே, பீரங்கி ஓசை அடங்கும். உங்கள் இருநாடுகள் இடையே நல்லுறவு மலரும்.

சண்டை நீடித்தால் இந்தியாவும், பாகிஸ்தானும் சக்திகளை எல்லாம் இழந்து சோர்வுறும். நாடுகள் இடையே துவேஷத்தை வளர்ப்பதில் அக்கறை கொண்டவர்களுக்கே அது பயனுள்ளதாக இருக்கும்.

இந்தியா-பாக். உறவு மாமூலாவது, நேரு அளித்த கொள்கையை மனப்பூர்வமாக இந்தியா பின்பற்றும் கொள்கைக்கு ஏற்றது. கோஷ்டி சேராக் கொள்கையும், சமாதானம், சர்வதேச ஒத்துழைப்பை வளர்க்கும் கொள்கையும், இந்தியாவுக்கு, சமாதானத்தை விரும்பும் நாடுகள் அனைத்தின் ஆழ்ந்த மதிப்பை அளித்துள்ளன.

மாறுபட்ட சமூக அமைப்புகள் உள்ள பல நாடுகள் இடையே நல்ல அண்டை நாட்டு உறவுக்கு இந்திய, ரஷிய நட்புறவு உதாரணமாக இருக்கக் கூடும்.

இரஷிய சகோதரர்கள்

அன்பான சகோதரர்களே, இவ்வாறு உங்களை அழைக்க எனக்கு உரிமையுண்டு என நம்புகிறேன். ஏனென்றால் இந்தியாவுக்கு விஜயம்செய்த போது, "ஹிந்தி-ரூசி, பாய் பாய்" என்ற சொற்கள் மனத்திலிருந்து வந்ததைக் கேட்டேன். இந்தியர் நமது நண்பர், சகோதரர் என்று ரஷியாவில் கூறப்படுவதை நீங்கள் கேட்கலாம்.

இந்தத் துக்ககரமான சமயத்தில் இந்தியாவுடன் தங்கள் நட்புறவை தங்கள் நாடு தொடர்ந்து பலப்படுத்தும் என சகோதரர்கள் என்ற தன்மையில் உங்களிடம் தெரிவிக்க ரஷிய மக்கள்

கேட்டுக்கொண்டனர்." இவ்வாறு ரஷிய பிரதமர் கூறினார்.

ஹம்ப்ரீ

இந்தத் துக்கத்தில் ஆழ்ந்துள்ள நாட்டுக்கு அமெரிக்க மக்களின் கண்ணீரையும், வேதனையையும் வருத்தத்தையும் இந்திய மக்களின் துக்கத்துடன் கலக்கக் கொண்டு வந்திருப்பதாக யு.எஸ். உப-ஜனாதிபதி ஹியூபர்ட் ஹம்ப்ரீ கூறினார்.

ஈராண்டுகளில் இருமுறை சமாதான மனிதரை இழக்கும் வருந்தத்தக்க சம்பவம் இந்திய மக்களுக்கும் விவேக உலகுக்கும் ஏற்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

இந்திய மக்களின் வருத்தம் எவ்வளவு ஆழ்ந்தது என்பதும், தங்கள் தலைவர் சோகமாகவும், அகாலமாவும் இறந்ததால் எவ்வாறு வேதனை கொண்டுள்ளனர் என்பதும் அமெரிக்க மக்களுக்கு நன்கு தெரியும். ஏனென்றால் இத்தகைய துயரம் (கென்னடி கொலையுண்டது) எங்களுக்கு ஏற்பட்டது.

புதிய நம்பிக்கையையும், புதிய உத்வேகத்தையும் கொண்டு வந்தவர் திரு. சாஸ்திரி என அமெரிக்கர்கள் நினைவுபடுத்திக் கொள்கின்றனர்.

அவருடைய பகைவர்கள் அறியாமை, வறுமை, துயரம், தேவைகள் ஆகியவை. அவருடைய ஆயுதங்கள் கல்வி, சகிப்புத் தன்மை, அன்பு. சாஸ்திரிக்கு உலகம் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறது.

டாஷ்கண்டில் அதிபர் அயூபுடனும், ரஷிய தலைவர்களின் திறமையான ஆதரவுடனும் சமாதான முயற்சியில் திரு. சாஸ்திரி முன்னேறியது, புதிய பலத்தையும், புதிய உறுதியையும் அளிக்க வேண்டும்.

சமாதானத்தை அடைய துணிவும், விடாமுயற்சியும் தேவை என்பதை சாஸ்திரி உணர்ந்திருந்தார். நாகரிக மனிதனின் மிக உயர்ந்த லட்சியம் சமாதானம் என்பதை அவர் அறிந்திருந்தார்.

பணிவின் இருப்பிடமான இவர், மனிதவர்க்கத்தைச் சீரழிக்கும் துவேஷத்தை வெல்வதன் அவசியத்தை உலக மக்கள் உணரச்செய்ய முயற்சித்தார்.

ராஜதந்திரியின் சிறந்த லட்சியமான, உலக சமாதான லட்சியத்துக்காக உழைத்த ராஜதந்திரியை இழந்ததற்காக உலகம் இன்று துக்கம் அனுஷ்டிக்கிறது.

அறியாமை, வறுமை, துயரம், தேவை ஆகியவற்றின் மீது உலகம் முழுவதிலும் தொடர்ந்து போராட இன்று நாம் உறுதி கொள்வோம். ஆகவே லால்பகதூர் சாஸ்திரி பெருமை கொண்டிருக்கக் கூடிய உலகை நாம் கட்டி வளர்ப்போம். இந்த உலகை அவருக்கு உயிருள்ள நினைவுச் சின்னமாக்குவோம்.

ஐ. அ. கு. உப-ஜனாதிபதி

திரு. சாஸ்திரி காலமானது மனிதவர்க்கம் முழுவதற்கும் நஷ்

டம் என்று ஐக்ய அரபு குடியரசின் உப-ஜனாதிபதி ஹஸேன் எல். ஷாபி கூறினார். சமாதானம், முன்னேற்றத்தை நாடி உழைப்பதன் சின்னமாக அவர் விளங்கினார்.

பெரும் பணிவும், அடக்கமான தன்மையும் பொருந்திய அவர் நீதிக்கும், கௌரவத்துக்கும் போராடும் இரும்பு உறுதி கொண்டவர் என அவர் புகழ்ந்தார்.

பிரிட்டிஷ் உதவி பிரதமர்

பிரிட்டிஷ் சர்க்கார் மட்டுமின்றி பிரிட்டிஷ் மக்கள் அனைவரின் சார்பில் திரு. சாஸ்திரியை பிரிட்டிஷ் உதவி பிரதமர் ஜார்ஜ் பிரவுன்புகழ்ந்தார். காமன்வெல்த் மகா நாடு நடக்காதிருந்தால் பிரதமர் வில்ஸன் இங்கு வந்திருப்பார் என்றார். திரு. சாஸ்திரியின் மறைவு குறித்து அதிர்ச்சியும், வருத்தமும் அடைந்ததாக பிரதமர் நந்தாவுக்கு வில்ஸன் அனுப்பிய அனுதாபச் செய்தியை அவர் வாசித்தார். டாஷ்கண்டில் பெரும் வெற்றி கிட்டிய சமயத்தில் சாஸ்திரி இறந்தது இரட்டிப்பு வருத்தம் தருவதாகச் செய்தி கூறியது.

அவ்வப்போது வேறு பாடுகள் தோன்றினாலும் நம் இரு மக்கள் இடையே நீண்ட, ஆழ்ந்த நிலையான நட்புறவு இருக்கிறது. மற்றவர் பகிராமல் இத்தகைய பேரிடியை நம்மால் தாங்க முடியாது என்றார் பிரவுன். திரு. சாஸ்திரியை மாபெரும் தலைவர் என அவர் குறிப்பிட்டார்.

மவுண்ட்பேட்டன்

திரு. சாஸ்திரியின் மறைவு குறித்து ராணியின் வருத்தத்தைத் தெரிவிக்கும் செய்தியை எலிஸபெத் ராணியின் பிரதிநிதி மவுண்ட் பேட்டன் வாசித்தார்.

திரு. சாஸ்திரியின் மரணம் காமன்வெல்த்தில் பெரும் துக்கத்தை ஏற்படுத்தியதாக அவர் கூறினார்.

முதலில் காந்திஜி, பிறகு நேருஜி இப்பொழுது சாஸ்திரிஜியின் இறுதிகிரியையில் தான் கலந்து கொண்டதை அவர் குறிப்பிட்டார்.

ஆப்கான் பிரதமர்

ஆப்கானிஸ்தான் மன்னர், சர்க்கார், மக்கள் சார்பில் வருத்தத்தையும், அனுதாபத்தையும் ஆப்கன் பிரதமர் மைவந்தவல் தெரிவித்தார்.

திரு. சாஸ்திரியின் விவேகத்தாலும், ராஜதந்திரத்தாலும் தோன்றிய டாஷ்கண்ட் உணர்வு நீண்ட காலம் நீடிக்கும் என்று அவர் கூறினார்.

நேபாள பிரதமர்

திரு. சாஸ்திரி நேபாளத்தின் சிறந்த நண்பர் என்று நேபாள பிரதமர் சூர்யபகதூர் தாபா கூறினார். சிறந்த ராஜதந்திரி சமாதான வீரர் என்று சாஸ்திரியை அவர் வர்ணித்தார்.

யூகோ உப-ஜனாதிபதி

இந்தச் சோதனையான சமயத்தில் நண்பர்களான இந்திய மக்களுடன் ஒன்றுபட்டிருக்கிறோம் என்று யூகோஸ்லாவிய உப-

ஜனாதிபதி ஜேகோவ் பிளாஸ்விக் கூறினார். யூகோ மக்கள், சர்க்கார், அதிபர் டிட்டோ ஆகியோரின் வருத்தத்தை அவர் தெரிவித்தார்.

டாஷ்கண்டில் அவர் புரிந்த மாபெரும் பணி அவருடைய வரலாற்றுக்குச் சிறப்பான செய்தியாக இருப்பதாக அவர் சொன்னார். சிறந்த உலகத் தலைவர்களில் ஒருவராக அவர் திகழ்ந்தார் என்றார்.

கம்போடிய உதவி பிரதமர்

டாஷ்கண்டில் சாஸ்திரி மேற்கொண்ட சமாதானப் பணியைக் கம்போடிய உதவிப் பிரதமர் கோன்சான் புகழ்ந்தார். இது மற்ற நாடுகள் பின்பற்றத்தக்க சிறந்த உதாரணம் என்றார்.

பாகிஸ்தான் மந்திரி

பாகிஸ்தான் வர்த்தக மந்திரி குலாம் பரூக் பேச எழுந்தபோது மக்கள் கரகோஷம் செய்தனர்.

டாஷ்கண்டில் திரு. சாஸ்திரியுடன் பாகிஸ்தான் அதிபர் சொந்த நட்புறவு கொள்ள ஆரம்பித்தார் என்பதை மனப்பூர்வமாகவும், ஒளிவுமறைவில்லாமலும் தான் கூற முடியும் என்று அவர் சொன்னார். இரு தலைவர்களும் புரிந்து கொள்ள ஆரம்பித்த சமயம் விதிவசத்தால் திரு. சாஸ்திரி இறந்தது சோகமானது என்றார்.

பேச்சு வார்த்தைகளால் தீர்க்க முடியாத பிரச்னைகள் இரு நாடுகளுக்கு இடையே இல்லை என பாகிஸ்தானிலுள்ள நாங்கள் நம்புகிறோம் என்று கரகோஷத்துக் கிடையே அவர் கூறினார். இத்துணைக் கண்டத்தில் வறுமையையும் அறியாமையையும் ஒழிக்கும் பெரும் பணியில் ஈடுபடுவதற்காக இரு நாட்டு மக்கள் இடையறாத சமாதானம் அனுபவிக்கச் செய்ய சாத்யமான எல்லா வழிகளையும் ஆராய பாகிஸ்தான் ஜனாதிபதி உறுதி கொண்டிருக்கிறார் என்பதை உறுதி கூறுகிறேன்.

இந்த ஈடு செய்ய முடியாத நஷ்டத்தை முற்றிலும் பாகிஸ்தான் சர்க்காரும், மக்களும் பகிர்ந்து கொள்கிறார்கள்.

திரு. சாஸ்திரி காட்டிய எளிமையும், அந்தரங்க சுத்தியும் புரிந்து கொள்ளும் நேர்த்தியும் அவரைச் சந்திக்கும் யாரையும் கவராமல் இருக்க முடியாது.

டாஷ்கண்டில் ஒருவார காலம் அவருடன் உழைத்தேன். ஆகவே அவர் மறைவு எனக்கு மிகுந்த வருத்த மளிக்கிறது என்றார் பாகிஸ்தான் மந்திரி.

பிரெஞ்சு மந்திரி

ஈராண்டுகளில் இரண்டாவது தடவையாகக் கொடூரமாகத் துக்கம் அடைந்த இந்தியாவுக்குத் தன் நாட்டின் அனுதாபத்தை பிரெஞ்சு மந்திரி லூயி ஜோக்ஸ் தெரிவித்தார். அவருடைய அசைக்க முடியாத துணிவு பிரெஞ்சு மக்களைக் கவர்ந்ததாக ஜோக்ஸ் கூறினார். சமாதானத்துக்காக உழைத்து இறுதியில் உயர்ந்த தியாகமான தன் உயிரையே அளித்தார் என்றார்.

மேற்கு ஜெர்மன் மந்திரி

தன் நாட்டிற்கும், சமாதானத்திற்கும் சேவை செய்வதில் உயர்ந்த தியாகம் புரிந்த இந்த மாபெரும் மனிதருக்கு உலகின் நல்லெண்ணமுள்ள அனைவரும் மரியாதை செலுத்துவதாக மேற்கு ஜெர்மன் பொருளாதார ஒத்துழைப்பு மந்திரி வால்டர் ஷீல் கூறினார். தாஷ்கண்டில் சாதிக்கப்பட்ட பெரும் வெற்றியை அவர் வரவேற்றார்.

பர்மா மந்திரி

சிறந்த மனிதாபிமானமுள்ள தலைவர் என்று திரு. சாஸ்திரியை பர்மா அயல் நாட்டு மந்திரி ஊதிஹன் வர்ணித்தார். பர்மா மக்கள் அவரிடம் விசேஷ மரியாதை காட்டுவதாக அவர் குறிப்பிட்டார்.

சமாதானத்துக்காகவும், சர்வதேச நல்லெண்ணத்துக்காகவும் அவர் பாடுபட்டார். அவர் மறைவு இந்தியாவுக்கு மட்டுமின்றி, எங்குமுள்ள மக்களுக்கும் ஈடு செய்ய முடியாத நஷ்டம் என்றார்.

மேலுலகிலிருந்து பூமிக்கு கங்கையைக் கொண்டு வந்த பகீரதன் போல டாஷ்கண்ட் உடன்பாடு மூலம் இந்திய உபகண்டத்துக்கு சமாதான அஸ்திவாரத்தை திரு. சாஸ்திரி கொண்டு வந்தார் என்று ஜப்பானின் விசேஷ தூதர் பண்டா கூறினார். புனித கங்கையைப் போல இந்திய மக்கள் மனதில் அவர் நிலைத்திருப்பார் என உறுதியாக நம்புகிறேன் என்றார்.

48ம் பக்கத் தொடர்ச்சி

(5) நேரடியாக சாகுபடியில் ஈடுபடக் கூடிய நிலமில்லாத விவசாயத் தொழிலாளி.

(6) நேரடியாக சாகுபடியில் ஈடுபடக் கூடிய நிலமில்லாத நபர்மேலே குறிப்பிட்ட 1, 2, 3, 5, 6, 7 ரகத்தினருக்கு அளிக்கப்படும் நிலம் அவர்களிடம் ஏற்கனவே உள்ள நிலத்தையும் சேர்த்து 5 ஏகராவுக்கு மேல் போகக்கூடாது.

நிலம் பெறுவோர் அதற்குரிய விலையைக் கொடுக்க வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட அதன் வருஷாந்திர நிகர வருமானத்தைப் போல் 12 மடங்கு அதன் விலையாக இருக்கும்.

அந்த நிலத்தில் ஏதாவது கட்டிடங்கள் மரங்கள் இருந்தால் அதற்கும் விலை கொடுக்க வேண்டும். இதை ஒரே தடவையாகவோ 20 வருஷாந்திரத் தவணைகளிலோ 5 சத விகித வட்டியுடன் கொடுக்கலாம்.

சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு நிலத்திற்கான மனுச் செய்து கொள்ள வேண்டும்.

இப்படி வினியோகிக்கப்படும் நிலங்களை 10 வருஷங்களுக்கு விற்கவோ, பராதீனப்படுத்தவோ கூடாது. (அல்லது அதற்கான விலையைக் கொடுத்து தீர்ப்பதற்கு முன்பு) பூரா விலையையும் கொடுத்த பிறகு தான் நிலம் அவருக்கு முழு சொந்தமாகும்.

நிலம் பெறுவோர் இதை நேரடியாக சாகுபடி செய்ய வேண்டும்.

Edited Printed and Published by P. VEERARAGHAVAN.
at Venkatesan Press, 2-65, Broadway, Madras-1.